Registered as a News Paper in Sri Lanka
පක්කම් 24 ரூபா 20.00
දිනමුරසු වාරමලර්
நவ. 02 - 08, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 685

## இலங்கை விடயத்தில் சர்வதேசத்தின் எதிர்பார்ப்பும் - ஏமாற்றமும்!



## யாழ்ப்பாணம், சம்பூர் மக்களின் அவலங்கள்!

பட்டாசு வெடிக்கிறது பாவனாவின் பேச்சில்!

## மக்களே, மக்களை ஆளவேண்டும்!


## அரசுக்கும், புலிகளுக்கும் ஒரே உளவாளி!

## இந்து மதமும் மறுபிறப்பும்!

**மனித** வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த ஒரு மதமாக இந்து மதம் விளங்குகின்றது. இம் மதம் மறு பிறப்புப் பற்றி மிகச் சிறப்பாக எடுத்தியம்புகின்றது. ஒவ்வொரு இந்துவுக்கும் மறுபிறவியில் நம்பிக்கை உண்டு. இப்பிறவியிலே செய்த நல்வினை, தீவினையினை அடிப்படையாகக் கொண்டே மறுபிறவி அமைகின்றது. அந்த வகையில் இப்பிறவியிலே தீவினை செய்து கொண்டிருப்பவன், அடுத்த பிறப்பிலே என்ன பிறவி எடுப்பான் என்பதனை நோக்குவோம்.

பசு விடயத்தில் பொய் பேசியவன் ஊமையாகப் பிறப்பான். குரு பத்தினியோடு தவறாக நடந்து கொண்டவன் விகாரமான தோற்றத்தை உடையவனாகப் பிறப்பான். எவருக்கும் எதுவும் கொடுத்து உதவாதவன் தரித்திரனாகப் பிறப்பான். கண்ட கண்ட இடங்களில் பகிரங்கமாக உண்டு திரிபவன் குரங்காகப் பிறப்பான். பிறன் மனைவியோடு தவறாக நடந்து கொண்டவன் மறுபிறவியில் சிறு வயதில் இறந்து விடுவான். உயர்ந்தவர்களின் உள்ளங்களை நோகச் செய்பவன் தான் பெறும் குழந்தையினை இழந்து விடுவான். கணவனைப் பற்றி பிறரிடம் பழித்துக் கூறுபவள் நரியாகப் பிறப்பாள், நஞ்சு கொடுத்து பிறரைக் கொன்றவன் பாம்பாகப் பிறப்பான்.

-அ. ரவி, மட்டக்களப்பு.



## கருணையுள்ளவர் கர்த்தர்!

"**கர்த்தர்** கிருபையும் இரக்கமும் உள்ளவர். நீங்கள் அவரிடத்திற்குத் திரும்பினால் அவர் தம்முடைய முகத்தை உங்களை விட்டு விலக்குவதில்லை."

(11 நாளாகமம் - 30 : 9)

சகோதர, சகோதரிகளே! நமது நடவடிக்கைகள் அனைத்தையும் அவர் அறிவார். மற்றவர் கண்களுக்குத் தெரியாமல் நாம் ஒரு காரியத்தைச் செய்தாலும், அது கர்த்தரின் கண்களுக்குத் தப்புவதில்லை. எல்லாம் அறிந்தவர் நமது தேவனாகிய கர்த்தர். பாவிகளை இரட்சிக்கவே இயேசுக் கிறிஸ்து இவ்வுலகில் அவதரித்தார்.

எனவே, மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தான் செய்யும் தவறுகளுக்கு வருந்தி, கர்த்தரிடம் மன்றாடும் போது, அவர் நம்மை மன்னிக்க மனம் கொள்கிறார். ஏனெனில், தேவனாகிய கர்த்தர் கிருபையும் இரக்கமும் உள்ளவர். அவரிடத்திற்கு நாம் திரும்பினால் அவர் தம்முடைய முகத்தை நம்மை விட்டு விலக்குவதில்லை.

-எம்.ஏ.எஸ்.சண்முகம், வத்தளை.

## ஆசீர்வதிக்கப்பட்ட மாதம் றமழான்!

**றமழான்** தூய்மைக்குரிய மாதமாகும். பல அருட்கொடைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள றமழான் மாதம் முஸ்லிம்களைப் பொறுத்தவரை - மிக விசேடமானதாகும். இம்மாதத்திலேயே புனித திருக்குர்ஆன் அருளப்பட்டது.

"நம்பிக்கையுடையவர்களே. உங்களுக்கு முன்னிருந்தோர் மீது விதிக்கப்பட்டிருந்தது போன்று, உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப் பட்டுள்ளது. எனவே நீங்கள் தீமைக்கு எதிராக உங்களைப் பாதுகாத்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும்" என்ற பொருள்படும் திருவசனத்துக் கிணங்க ஹிஜ்ரி 2இல் (கி.பி.623) முஸ்லிம்கள் மீது நோன்பு விதியாக்கப்பட்டது.

முஸ்லிம்களைப் பொறுத்தமட்டில் றமழான் மாதம் ஆசீர்வதிக்கப்பட்ட மாபெரும் மாதமாகும்.

-முஹம்மது ஹஸனி, கல்முனை - 07

## கவிதைப் போட்டி இல.682




பரிசுக்குரிய கவிதை

### யுத்த தேசத்தில்...

யுத்த தேசத்தில்
இந்த உயிரற்ற
பொம்மையைக்
காப்பாற்ற நான்படும் பாடு...
பாவம் என் தாய்
உயிருள்ள என்னை
இழந்து எப்படித்
தவிப்பாளோ?!!

– பை. யூசுப்,
கிராண்ட்பாஸ்

## கவிதைப் போட்டி இல.685



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 07.11.2006.

கவிதைப் போட்டி இல.685
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல–1772, கொழும்பு.

### உயிர்

குறைந்த விலையில் இங்கே
கவரப்படும் உயிர்
உனக்கெதற்கு?
என்னுயிர் உள்ளவரை
நாமிருவரும் ஒன்றாகவே
வாழ்ந்து கொள்வோம்.
நீயும் பொம்மை
நானும் பொம்மை.

–அப்துல் வாஹிட் அஜீமா,
கிண்ணியா – 03.

### இழிவு

கேட்பார் இன்றி
நாதியற்று
பார்வை பாஷைகளால்
புரிய வைக்க
முனைகிறாள் இந்தப் பிஞ்சு
தன் நிலைமைதனை
பாவம்
வார்த்தைகளே விளங்காத
மனிதங்களுக்கு
ஏக்கப் பார்வைதான்
விளங்குமா?

–ஏ.ஆர்.எம்.நதார்,
ஜின்னாநகர்.

### பொம்மைகள்

வலிமையில்லா நாடுகள்
வல்லரசின் பொம்மைகள்
வாய்கிழியப் பேசும்
மந்திரிகள்
வல்லவனின் பொம்மைகள்
எங்கள் பிரதிநிதிகள்
ஏக தலைவனின்
பொம்மைகள்
இவ்வுலகில் நாங்களெல்லாம்
இறைவனின் பொம்மைகள்
ஆட்டுவிப்பவர் ஆடவைத்தால்
ஆடுபவர் ஆடவேண்டும்.

–சீ.தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.

### போர்க்களம்

தரிக்க ஆடையில்லையோ...?
தங்கத்திற்கு
தறிகெட்ட பூமியில்...
தங்கத்தான் வீடுமில்லை,
தாராள பூமியில்...
இன்னும் எத்தனை காலம்தான்...
போராட்ட வாழ்க்கையோ...?

–ரி.தர்ஷினி,
கொழும்பு – 13.

### கை பொம்மை

நம் தேசத்து
சமாதானம்
உயிரற்ற
பொம்மையாய்...
மனித பொம்மைகளிடம்
அகப்பட்டு
பரிதவிக்கின்றது!!

–எம்.எம்.உம்முமிஸ்ரியா,
ஏறாவூர் – 03.

### இலங்கைக் குழந்தை

உலகப் படத்தில்
இலங்கையென்பது
குழந்தைப் போல நிஜம்
அது இரண்டுபடுவது
இந்த பொம்மைப் போல.

–அஜ்ஹறத் எம்.ஜே.,
திருகோணமலை.




## உங்கள் பக்கம்

### பாகுபாடு காட்டும் பஸ் சாரதிகள்!

**மொ**னராகலை மாவட்டத்திலே சில தமிழ்ப் பாடசாலைகள் இடம் பெற்றுள்ளன. இதையிட்டு தமிழ் மக்களாகிய எங்களுக்கு மகிழ்ச்சிதான். ஆனாலும் இங்கு இயங்கி வரும் இ.போ.ச.வுக்குச் சொந்தமான பஸ் வண்டிகள், தமிழர் வாழும் சில பகுதிகளில் நிறுத்தி, பாடசாலை மாணவர்களை ஏற்றுவதில்லை. இதனால் மாணவர்கள் பெரும் கஷ்டத்தின் மத்தியில் பாடசாலை செல்கின்றனர். குறிப்பாக, வெள்ளவாய எனும் இடத்திலிருந்து மொனராகலை நோக்கிச் செல்லும் இ.போ.ச. பஸ் வண்டிகளிலேயே இவ்வாறு நடைபெறுகின்றது. பல மாணவர்கள், பருவக்காலச் சீட்டு (சீசன்) இருந்தும் பஸ் நிறுத்தப்படாமை காரணமாக தனியார் பேருந்திலேயே செல்ல வேண்டியுள்ளது. அதிலும் தமிழர் வாழும் பகுதிகளில் பஸ்ஸை நிறுத்தாமல் சகோதர மொழியினரை (சிங்களம்) ஏற்றிச் செல்வது பெரும் கவலைக்குரிய விடயமாக உள்ளது. இவ்வாறு தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பாகுபாடு காட்டுவது ஏன்? எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பாகக் கவனத்திற்கொண்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மலையகத்திலிருந்து
ஆஞ்சனேயர்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

## வாசகர் சாலை

### யோசிக்க வைக்கும் முரசு!


**சூ**டு, சுவை, சுவாரசியம் என்பவற்றைச் சுமந்து வலம் வரும் முரசுக்கு எனது முதற்கண் வணக்கம். முரசில் வெளிவரும் ஒவ்வொரு பகுதியும் வாசிக்கவும், யோசிக்கவும் வைக்கின்றது. ஒவ்வொரு வாரமும் வெளிவரும் சிறுகதைகள் எமது சமூகத்திற்கு ஏதாவதொன்றை எடுத்துச் சொல்வதாகவே அமைகின்றன. அதுமட்டுமல்லாமல், இலக்கிய நயம் எனும் தலைப்பில் வெளிவரும் தொடர்கதையைப் பற்றி என்னவென்று சொல்வதென்றே தெரியவில்லை. ஏனெனில், அவ்வளவு சுவாரஸ்யமாக அமைந்து வருகின்றது. இதேபோல் அனைத்து விடயங்களையும் இன்னும் மெருகூட்டி எங்களுக்கு விருந்தளிக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

–பா.துஷாந்தினி,
திருகோணமலை.

### பணி தொடர வாழ்த்துகிறேன்!

**அ**ன்பான முரசே! உனது அனைத்து அம்சங்களும் சூப்பர். உங்கள் பக்கம் பகுதி மிகவும் வரவேற்கத்தக்கது. ஏனெனில், அதில் ஒவ்வொரு பகுதியில் இருந்தும் மக்கள் தங்களது பொதுப் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்ட களம் அமைத்துத் தருகின்றது. அதுமட்டுமல்லாமல், இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் வழியமைக்கிறது. மேலும் எனது கவிதைகளை கவிதைப் போட்டிகளில் சேர்த்துக் கொண்டமைக்கும் நன்றி செலுத்துகிறேன். அத்தோடு உனது பணி தொடரவும் வாழ்த்துகின்றேன்.

–வி.கண்ணன்,
திருக்கோயில்.


Tel : 2423895
அருள்மிகு ஸ்ரீ ஞானபைரவர் சுவாமி தேவஸ்தானம்
ARULMIGU SRI GNANABAIRAVAR SWAMY HINDU TEMPLE
SRI AYYAPPA SWAMY SANNIDANAM
No. 42, Dewaas Lane, Grandpass, Colombo-14
The Chief Editor,
Thinamurasu.
"GOWRAVA SAMAMANYA"
"THESA KEERTHI"
Chief Priest & Incumbent
Tel: 2423895

## ஏ-9 பாதையில் தடம் புரண்ட ஜெனீவா பேச்சு
## புலிகளின் கபடத்தனமெனச் சாடுகிறார் அமைச்சர் டக்ளஸ்

"கடந்த காலங்களைப் போன்று அண்மைய ஜெனீவாப் பேச்சுவார்த்தையையும் முடிவுகள் எதனையும் எட்ட விடாமல், இடையில் முறித்துவிட புலிகள் முடிவெடுத்துச் செயற்பட்டிருக்கிறார்கள். புலிகள் தாமாகவே மூடவைத்த ஏ-9 பாதையைத் திறக்க வேண்டுமென்று கபடத்தனமான கோரிக்கையொன்றினை முன்வைத்து பேச்சுவார்த்தையை இடையில் முறித்திருக்கிறார்கள். இது சமாதானத்தின் மீது புலிகளுக்கு என்றுமே விருப்பமிருந்ததில்லை என்பதையும் தமிழ் பேசும் மக்களின் நலன்களில் அவர்களுக்கு அக்கறையில்லையென்பதையும் எடுத்துக் காட்டுகிறது" என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

ஏ-9 பாதையை மூடுவதற்கு வழிவகுத்தவர்களும் புலிகளே! இன்று சுய இலாபங்களுக்காக அதைத் திறக்குமாறு கோரிக்கையெழுப்பிச் சமாதானத்திற்கான பாதையை மூட நினைப்பவர்களும் புலிகளே! அரசுக்கும் - புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை சமாதானத்தை நோக்கி நகர வேண்டும் என்பதே இலங்கைத் தீவின் அனைத்து மக்களினதும் விருப்பங்களாகும்! சர்வதேச சமூகத்தின் விருப்பமும் இதுவே. அரசாங்கத்தின் விருப்பமும் இதுவே. புலிகள் மீதான நம்பகத்தன்மைகள் எமக்கு இல்லாதிருப்பினும் ஈ.பி.டி.பி.யின் விருப்பமும் இதுவே!

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



அரசாங்கத்தால் ஏ-9 பாதை திறந்து விடப்பட்டிருந்தது. இது எமது மக்களின் நலன் சார்ந்த நடவடிக்கை என்பதில் மாற்றமில்லை. ஆனாலும் இதில் மக்களை விடவும் பல மடங்கு நலன்களையும் சுகங்களையும் அனுபவித்து வந்தவர்கள் புலிகளே. கட்டாய வரி என்ற பெயரில் ஏ-9 பாதையில் காத்திருந்து, மக்களிடம் கப்பம் அறவிட்டு, மக்களின் நலன்களுக்குக் குந்தகம் விளைவித்து வந்தவர்கள் புலிகள். ஏ-9 பாதை திறந்து விடப்பட்டிருந்தபோது புலிகளின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் மக்கள் பயணிக்க முடிந்தது. உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான விநியோகப் பாதையாகவும் இதுவே இருந்து வந்தது.

நான்கு நாட்களில் யாழ்.குடா நாட்டை முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்போவதாக சபதம் எடுத்த புலிகள், வெல்லப்பட முடியாத ஒரு யுத்தத்தைப் பிரகடனப்படுத்திக் கொண்டு யாழ் குடா நாட்டின் மீது வலிந்து நடத்திய தாக்குதல் ஒன்றை மக்களின் விருப்பங்களுக்கு மாறாக மேற்கொண்டனர். இந்த அசாதாரண சூழலில்தான் புலிகளின் தாக்குதலை எதிர்கொள்வதற்காக அரசாங்கத்திற்கு ஏ-9 பாதையை மூடிவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. இதில் எமது மக்களின் நலன்கள் பாதிக்கப்பட்டிருப்பது உண்மைதான். ஆனாலும் கப்பம் அறவிட்டுத் தினமும் பல இலட்சம் ரூபா பணத்தை மக்களிடமிருந்து அபகரித்து வந்த புலிகளின் நலன்களே பல மடங்கு பாதிக்கப்பட்டிருக்கின்றது. மக்களின் நலன்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும் அதற்குக் காரணம் யார்?... ஏ-9 வீதியில் கிடைக்கும் வருமானத்தை விடவும் யாழ். குடா நாட்டைக்கைப் பற்றி விட்டால், யாழ். குடாநாட்டையே குத்தகைக்கு எடுத்துத் தங்களது வருமானத்தைப் பெருக்கி, அதிகார வெறியையும் தக்கவைத்து விடலாம் என்ற புலிகளின் பேராசையே காரணமாக இருந்திருக்கிறது. இதனால் எமது மக்கள் மனிதாபிமானப் பிரச்சினைகளை எதிர் கொள்ள வேண்டிய துயரம் நிகழ்ந்திருக்கின்றது. (தொடர்ச்சி 04ஆம் பக்கம்)

## வரி, கப்பம் அறவிடவும் வன்செயல்களுக்குமே ஏ-9 பாதை தேவை
### -அமைச்சர் கெஹலிய

"ஏ-9 பாதையிலுள்ள முகமாலைப் பகுதியில் இடைவிடாது புலிகள் தாக்குதல்கள் மேற்கொண்டு வரும் நிலையில் உடனடியாகப் பாதையைத் திறப்பதென்பது சாத்தியமான விடயமல்ல. யாழ். மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படுவது அத்தியாவசிய உணவுப் பொருட்களேயொழிய, அவை ஏ-9 பாதையூடாகக் கொண்டு வரப்பட்டவையா அல்லது கப்பல்கள் மூலம் கொண்டு வரப்பட்டவையா என்பதல்ல" என்று கொழும்பிலுள்ள தேசிய பாதுகாப்பு மத்திய நிலையத்தில் கடந்த 31ஆம் திகதி நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

மாணவர்களுக்கும், சிறுவர்களுக்கும் ஆயுதப் பயிற்சி வழங்குவதற்காகவும், ஏற்கனவே ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டவர்களை நாசகார நடவடிக்கைகளுக்காக யாழ்.குடா நாட்டுக்குள் அனுப்புவதற்காகவுமே புலிகள் ஏ-9 பாதையைத் திறக்குமாறு கோருகிறார்கள். அத்துடன் கப்பம், வரி போன்றவற்றை அறவிடுவதற்காகவும் அப்பாதையால் கொண்டு செல்லப்படும் பொருட்களை தமது தேவைக்கென அபகரிப்பதற்காகவும் இக்கோரிக்கையை அவர்கள் விடுத்திருக்கின்றனர். இறைமையுள்ள இந்நாட்டில் சுங்கப் பகுதி, உள்நாட்டு இறைவரி திணைக்களம் மற்றும் கலால் இலாகா ஆகியவற்றினால் மட்டுமே வரிகளை அறவிட முடியும். வேறு எவரும் மக்களிடமிருந்து வரி அறவிடுவதை அனுமதிக்க முடியாது. முகமாலையிலுள்ள பதுங்கு குழிகளை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையும் புலிகள் இயக்கத்திற்கு இருக்கிறது. எனவேதான் ஏ-9 பாதையைத் திறக்குமாறு புலிகள் கோருகின்றனர் என்றும் அமைச்சர் சொன்னார்.

## 23 புலிகள் படையினரிடம் சரண்

ஜெனீவா-2 பேச்சுவார்த்தையின் இரண்டாம் நாளான கடந்த 29ஆம் திகதியும் மறுநாள் 30ஆம் திகதியும் கிழக்கில் மொத்தம் 23 புலி இயக்க உறுப்பினர்கள் ஆயுதப் படையினரிடம் சரணடைந்துள்ளனர். புலிகள் இயக்கம் சிறுவர் பாதுகாப்புச் சட்ட விதியொன்றினைப் பிரகடனப்படுத்தியுள்ளதாக அறிவித்த சில நாட்களுக்குள் இந்த 23 பேரும் தப்பிச் சென்றுள்ளனர். இவர்களில் 12 பேர் பதினெட்டு வயதுக்குட்பட்ட சிறுவர்களாவர். திருகோணமலை, சேருநுவரவிலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் கடந்த 29ஆம் திகதி புலி இயக்க உறுப்பினர்கள் ஏழு பேர் சரணடைந்தனர். வலுக்கட்டாயமாகப் பிடித்துச் செல்லப்பட்டு கதிரவெளி புலிப் பாசறையில் பயிற்சியளிக்கப்பட்ட இந்த ஏழு பேரில் இருவர் வயது குறைந்த சிறுவர்களாவர். திருமலை, மஹிந்தபுர இராணுவ சோதனைச் சாவடியில் மேலும் ஏழு பேர் அன்றைய தினம் சரணடைந்தனர். முப்பதாம் திகதி திருமலை, செல்வநகர் படை முகாமில் ஒன்பது பேர் சரணடைந்துள்ளனர். இவர்களனைவரும் ஆயுதப் பயிற்சி பெற்றவர்களென்றும் வலுக்கட்டாயமாகப் புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டவர்களென்றும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இவை தொடர்பாக இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும், யுனிசெப்புக்கும் சம்பந்தப்பட்டவர்களின் பெற்றோர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாகப் படை அதிகாரிகள் தெரிவித்தனர். 1994ஆம் ஆண்டிலிருந்து 2006ஆம் ஆண்டு செப்டெம்பர் வரை வயது குறைந்த 5769 சிறுவர்களைப் புலிகள் கடத்திச் சென்றுள்ளனரென்று தம்மிடம் முறையிடப்பட்டுள்ளதாக யுனிசெப் அண்மையில் தெரிவித்திருந்தது. ஆனால் இத் தொகை இன்னும் அதிகமாக இருக்கலாமென்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

## வடக்கு, கிழக்கில் ஜனநாயக மயமாக்கலுக்கான
## நான்கு முன் தேவைகள் பற்றி ஜெனீவாவில் விளக்கம்

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு அடிப்படை ஜனநாயக உரிமைகள், கருத்துச் சுதந்திரம் ஆகியவை மறுக்கப்பட்டிருப்பதாக இலங்கை அரசாங்கத் தூதுகோஷ்டியின் தலைவரான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கடந்த 28ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது பேசுகையில் குறிப்பிட்டார். எனவே சமாதான முயற்சிகளின் அடிப்படையில் சகஜ வாழ்வை ஏற்படுத்துவதற்கு சில முக்கிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. இதற்கு முதல் படியாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டம் உட்பட சகல இராணுவக் கட்டுப்பாடற்றப் பகுதிகளுக்கும், இலங்கையின் சகல பகுதிகளுக்கும் அரசியல் கட்சிகள் சுதந்திரமாகச் சென்றுவர அனுமதிக்க வேண்டும். இந்தக் கட்சிகள் பிரசாரங்களை மேற்கொள்வதற்கும், தமது மாற்றுக் கருத்துக்களை வெளிப்படுத்தவும், அலுவலகங்களை வைத்திருப்பதற்கும் அச்சுறுத்தல்கள், மிரட்டல்களின்றிச் செயற்படுவதற்கும் அனுமதிக்கப்பட வேண்டும். இரண்டாவதாக, ஜனநாயக அமைப்புகள் சுதந்திரமாகவும் எதுவிதத் தலையீடுகளின்றியும் செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும். இலங்கை அரசாங்கத்தின் நீதி, மற்றும் சட்ட அமுலாக்கல் நிறுவனங்களுட்பட இலங்கை அரசின் சகல அலுவலகங்களும் செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும். சட்டத்தை திறமையாக அமுல்படுத்தி கிரிமினல்கள் மீது வழக்குத் தொடுப்பதற்கேதுவாக நாடெங்கும் ஒரே விதமான சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டும் அமைப்பு முறை ஏற்படுத்தப்பட வேண்டியது மூன்றாவது தேவையாகும். தற்போது முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுட்பட அரச கட்டுப்பாட்டிலில்லாப் பகுதிகளுக்குச் சென்று வர பொலிஸாருக்கு அனுமதி அளிக்கப்படவும் வேண்டும். நான்காவதாக, ஜனநாயக வழிமுறையை ஏற்படுத்துவதற்கான அடித்தளத்தை இடுவதற்கு அனுமதியளிக்கப்பட வேண்டும். அரசியல் தலைவர்கள் முதல் மாணவர் வரையிலான சகல தரப்பினருக்கும் பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், அதிகாரப் பகிர்வு உட்பட சகல ஜனநாயக வழிமுறைகளுக்கும் இடமளிக்கப்பட வேண்டுமென்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தனது உரையில் குறிப்பிட்டார்.

## ஜெனீவா புலி எதிர்ப்புப் பேரணியை படம் பிடிக்க முயற்சி

மக்கள் ஜனநாயகப் பேரவை, ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய இயக்கங்களும் மற்றும் இந்திய நண்பர்களும், சிங்கள முஸ்லிம் மக்களும் புலிகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை எதிர்க்கும் பல இலங்கை அமைப்புகளும் ஒன்றிணைந்து ஜெனீவாவில் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியை வீடியோ படமெடுக்க முனைந்த இரு தமிழர்கள் ஜெனீவா பொலிஸாரால் தடுக்கப்பட்டனர். பாரிஸில் இயங்கும் தமிழ் டெலிவிஷன் நெற்வேக் என்ற புலிச்சார்பு தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த இருவரே வீடியோ படமெடுக்க முனைந்தவர்களாவர். "யுத்தத்தை நிறுத்து", "பிள்ளைகளை யுத்தத்துக்குச் சேர்க்காதே", "ஜனநாயக விரோத நடவடிக்கைகளை நிறுத்து" போன்ற பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்ததோடு புலி இயக்க எதிர்ப்புக் கோஷங்களையும் எழுப்பினர். ஜெனீவாவிலுள்ள ஐ.நா.அலுவலகத்துக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி கடந்த 28ஆம் திகதி நடத்தப்பட்டது.




ஜெனீவாவிலுள்ள ஐ.நா.அலுவலகத்துக்கு முன்னால், புலிகள் யுத்தத்தையும் வன்செயல்களையும் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்ப வேண்டுமென்று இலங்கையர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தியபோது பிடிக்கப்பட்ட படம். ஜெனீவா பேச்சுவார்த்தை ஆரம்பமான 28ஆம் திகதி இப்பேரணி இடம் பெற்றது.

## ஆசியாவின் பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு

ஆசிய நாட்டுத் தலைவர்கள், எதிர்வரும் டிசம்பர் 12,13ஆம் திகதிகளில் பிலிப்பைன்ஸின் குபு நகரில் இடம்பெறவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டில் ஒப்பந்தமொன்றினைச் செய்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆசிய நாடுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை பற்றியும், இதற்காக ஆசிய நாடுகள் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டிய விதங்கள் பற்றியும் இங்கு ஆராயப்படவிருக்கிறது. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உட்பட பல ஆசிய நாட்டுத் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியை அடுத்து யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு சீரான மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோகம்

யாழ்ப்பாணத்தில் நிலவி வரும் சீரற்ற மின்விநியோகம் மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஆகியவற்றை நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களிடம் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விடுத்த கோரிக்கையை அடுத்து, எரிபொருள் துறை அமைச்சர் பௌசி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உட்பட்ட உயர் மட்டச் சந்திப்பொன்று 31.10.2006 அன்று கொழும்பில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திற்கு கூடுதலான நேரம் மின்விநியோகம் மேற்கொள்ளப்படவும். குடாநாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்குவதற்கும், அங்கு தாராளமாக விநியோகிக்கக் கூடிய வகையில் எரிபொருட்களை அனுப்புவதற்கும், எரிபொருள் துறை அமைச்சர் பௌசி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

இதன்படி, மின்விநியோகம் நவம்பர் முதலாம் திகதி முதல் ஒரு வாரத்துக்கு காலை 5.00 மணி தொடக்கம் காலை 7.00 மணி வரையிலும், காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரையும், மாலை 6.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணிவரையிலுமாக ஒன்பது மணித்தியாலத்திற்கு வழங்கப்பட உள்ளது. அத்துடன், இன்னும் ஒரு கிழமை அல்லது பத்து நாட்களுக்குள் 24 மணி நேரமும் மின் விநியோகத்திற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

## 5 மணித்தியாலங்களுக்கு ஒரு படுகொலை வடக்கு, கிழக்கில் இடம்பெறுகிறது

ஐந்து மணித்தியாலத்திற்கு ஒருவர் என்ற ரீதியில் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து செப்டெம்பர் மாத இறுதிவரை வடக்கு, கிழக்கில் 1,339 பேர் நீதிக்குப் புறம்பான முறையில் கொல்லப்பட்டிருக்கிறார்களென்று 'மனித உரிமைகளுக்கான இல்லம்' என்ற அமைப்பு விடுத்திருக்கும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. இரு தரப்புப் புலிகளும் படையினரும் இதில் சம்பந்தப்பட்டுள்ளனரென்றும் அந்த அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. கொல்லப்பட்டவர்களில் அநேகர் தமிழர்களென்றும், இதற்கடுத்தபடியாக முஸ்லிம்களும் சிங்களக் குடிமக்களும் கூடக் கொல்லப்பட்டுள்ளனரென்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த வருடம் ஜூலை மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரை 229 பேரே கொல்லப்பட்டிருந்தனர். இவ்வருடம் முதல் நான்கு மாதங்களிலும் 134 மக்களும், மே மாதத்திலிருந்து செப்டெம்பர் மாதம் வரை 1,205 பொது மக்களும் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த ஆகஸ்ட் மாதம் 489 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இக் கொலைகளில் அதிகமானவை மூதூர், வாகரை, திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலேயே இடம் பெற்றுள்ளன. இதற்கு அடுத்தபடியாக ஜூன் மாதத்தில் 255 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவற்றில் கெப்பிட்டிகொல்லாவையில் கொல்லப்பட்ட 65 சிங்களப் பொது மக்களும் அடங்குவர். இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி வரை 325 பேர் காணாமற் போயுள்ளனர் அல்லது கடத்தப்பட்டுள்ளனரென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் அரசியல் கழைக் கூத்தாடிகள்

கொழும்பு மாநகர சபை வளாகத்தின் எல்லைப்புற வேலிகளுக்கு நீல நிறமும் பச்சை நிறமுமென மாறி மாறி தீந்தைகள் பூசப்பட்டமை, அரசியல் பச்சோந்திகளின் அருவருப்பான செயல் முறைகளுக்கு ஓர் உதாரணமாகுமென்று அரசியல் ஆய்வாளர் மதிவண்ணன் குறிப்பிட்டார். மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவது கட்சிகளின் நிறங்களைப் பூசுவதில் தங்கியிருப்பதில்லை. சுய இச்சையாகப் போட்டியிட்ட ஒரு குழு, அரசியல் இழுபறிகளைப் பயன்படுத்தி பச்சைக் கட்சியோடு சேர்ந்து போட்டியிட்டு வென்றிருக்கிறது. மேயர், உதவி மேயர்களை நியமிப்பதற்குப் பலரின் பெயர்களை மாறி மாறி சிபாரிசு செய்து, பின்னர் அதிகாரத்தையும் கைப்பற்றிக் கொண்டார்கள். பின்னர் நீலக் கட்சியோடு இணைந்ததும் கம்பி வேலிகளுக்கு நீலத் தீந்தை பூசியமை வெகுளித்தனமான செயலென்றும் அவர் சொன்னார்.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## எதிர்பார்க்கப்பட்ட ஏமாற்றம்தான்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

**இரண்டு** வாரங்களுக்கு முன்னரே ஜெனீவாப் பேச்சுக்களின் முடிவை எழுதிவிட்டோம். ஆகையால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இஸ்ரேல் - பாலஸ்தீனத்திற்கிடையில் நோர்வேயினர் மூக்கை உடைத்துக் கொண்டதைப் போலவே, இப்போது இலங்கை விடயத்திலும் குட்டு வாங்கி அவமானப்பட்டுள்ளனர். உண்மையில் நோர்வேயின் பிரதிநிதிகள் வன்னியில் புலிகளைச் சந்தித்துப் பேசும் போதும், கொழும்பில் அரச பிரதிநிதிகளைச் சந்திக்கும் போதும் இருதரப்பிடமிருந்துமே சாதகமான எவ்வித சமிக்ஞையும் வெளிப்படுத்தப்படவில்லை. புலிகள் வரி அறவீட்டை நிறுத்தத் தயாரில்லாத வரை பாதையைத் திறக்க அரசு தயாரில்லை. எனவே இதைத் தாண்டி சமரசப் பேச்சுக்களை முன்னெடுக்கவும் வாய்ப்பு இல்லை என்பதை நோர்வே மத்தியஸ்தர்கள் நன்கு புரிந்து கொண்டும் ஜெனீவாவில் பேச்சு, சர்வதேச சமூகத்தின் அழுத்தம் என்றெல்லாம் கூறி இரு தரப்பையும் சுற்றுலா கூட்டிக் கொண்டு போய் கை குலுக்க வைத்தது, அந்த மரியாதைக்காவது இணக்கத்துக்கு வருவார்கள் என்று நினைத்தது நோர்வேயின் பகல் கனவு தானன்றி வேறொன்றுமில்லை. நம்பிக்கை தராத பேச்சைக் கூட நடத்தி முடிக்க நோர்வே காட்டிய ஆர்வமானது இணைத் தலைமை நாடுகளின் கடைசிக் கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் இரு தரப்பும் நிபந்தனையற்ற விதத்தில் இம்மாதம் பேச்சுக்கு விருப்பம் தெரிவித்துள்ளன. அக்டோபரில் பேச்சுக்கள் நடக்கும் என்று கூறியிருந்தன. அது நடைபெற்றாக வேண்டும். இல்லாவிட்டால் அது அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அடங்கிய இணைத் தலைமை நாடுகளுக்கு சர்வதேச மட்டத்தில் பெருத்த அவமானமாகிவிடும் என்பதாலேயே அதை நடத்திக் காட்ட நோர்வே செயற்பட்டிருக்கிறது.

பேச்சுவார்த்தைகளின் முடிவு படுதோல்வியாகத்தான் இருக்கும் என்ற போதும் தமது கௌரவத்துக்கு இழுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதுதான் இணைத் தலைமை நாடுகளின் அக்கறையாக இருந்துள்ளது.

நடந்து முடிந்த வெட்டிப் பேச்சை ஜெனீவாவில் போய் பேசியதானது வீணான பரபரப்புக்கும், செலவுக்கும், நேரத்துக்கும் பிடித்த கேடே தவிர, வேறு ஒன்றுமில்லை.

அதிகரித்திருக்கும் படுகொலைகள், மாற்றுக் கருத்தாளர்கள் மீதான வன்முறைகள், மக்களின் அவலங்கள், நம்பிக்கையீனத்தைக் குலைக்கும் தாக்குதல்கள் இவற்றை களத்தில் தாராளமாக அனுமதித்துக்கொண்டு அல்லது அவற்றை வெறுமனவே கண்டித்துக்கொண்டு பேச்சுவார்த்தை, இணக்கப்பாடு என்று கொக்கரிப்பதால் இப்போதைக்கு மட்டுமல்ல, என்றைக்குமே நல்ல தீர்வு கிடைக்கப் போவதில்லை.

இரு தரப்புக்கிடையிலும் குறைந்த பட்ச நம்பிக்கையோ, இணக்கமோ இல்லாதவிடத்து ஒப்பந்தத்தை மதித்து நடப்போமென்று இரு தரப்பும் கூறியிருக்கின்றன என்று, எரிக் சொல்ஹெய்ம் கூறியிருப்பது, அவரின் இயலாத்தனத்தையே காட்டுகிறது. இரு தரப்பையும் பேச்சுவார்த்தை மேசை வரையாவது அழைத்துக் கொண்டு வர வாய்ப்புகள் இருந்த கடந்த காலத்திலேயே ஒப்பந்தம் சாகடிக்கப்பட்டு நாடு முழு அளவிலான போர்ச்சூழலுக்குள் தள்ளப்பட்டது.

இப்போது ஜெனீவாவில் நடந்த பேச்சு நாடகம் இரு தரப்புக்குமிடையில் இருந்த இடைவெளியை இன்னும் விசாலமாக்கியுள்ளது. 'போரா - சமாதானமா' என்று தமிழ்ச் செல்வன் அறைகூவல் விடுக்கின்ற அளவுக்கு நிலைமை மோசமடைந்து வருகிறது. இந்த வேளையில், இருதரப்பும் அவசரப்பட்டு முடிவெடுக்கக் கூடாது என்றும், உணர்ச்சிவசப்படக் கூடாதென்றும் நோர்வே கூறியிருப்பதானது, நாடு அடுத்த கட்டத்துக்குச் சென்று விடும் என்ற யதார்த்தத்தையே காட்டுகிறது. ஜெனீவாவில் பேச்சு நடந்து கொண்டிருக்கும் போதே கிளைமோர் தாக்குதல்களும் பரஸ்பர ஷெல் தாக்குதல்களும் இங்கே நடந்து கொண்டுதானிருந்தன. இந்த நிலை இன்னும் மோசமடையும் என்றே கருத இடமுண்டு. அதுவும் எதிர்பார்க்கக் கூடியதுதான் இது ஒருபுறமிருக்க மழைக்காலம் தொடரப்போவதால் இடம் பெயர்ந்தவர்களினதும், உணவுக்காக ஏங்குபவர்களினதும், நிலைமை மேலும் மோசமடையும் என்ற பெருங் கவலையே வேதனையளிப்பதாக உள்ளது. அதேவேளை, நோர்வேயையும் சர்வதேச சமூகத்தையும் குற்றஞ் சாட்டிவிட்டு நாம் தப்பிக்கவும் முடியாது. 'குதிரையை குளத்தடி வரை கூட்டிக் கொண்டு போனார்கள். குனிந்து குடிப்பது குதிரையின் விருப்பம்' என்ற வகையில், பிரச்சினையோடு நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களின் தவறுகளை மறைத்து இன்னொருவரின் தலையில் போட்டு விடவும் முடியாது.

சமாதானத்தின் மீதான விருப்பம் இல்லாதவர்கள் மீது கோபப்படும் அதேவேளை, அதனால் பாதிக்கப்படும் மக்களுக்காகக் கவலைப்படத்தான் முடியும். மக்களை யார் பாதுகாப்பது?

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**ஜெனீவாவில்** கடந்த 28, 29 ஆம் திகதிகளில் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தை, ஏ-9 பாதையால் தடம் புரண்டு போய்விட்டது. இரு நாள் கூத்துக்கு மீசை வழித்த கதையாக ஜெனீவா-2 பேச்சுவார்த்தை முடிந்துவிட்டது. கடந்த பெப்ரவரியில் நடைபெற்ற முதலாவது ஜெனீவா பேச்சுவார்த்தையில் இருதரப்புகளுமே எட்டுப் பந்திகளைக் கொண்ட கூட்டறிக்கையொன்றினை விடுத்தன. அத்துடன் ஏப்ரல் 19ஆம் திகதி மீண்டும் ஜெனீவாவில் சந்தித்துப் பேசுவதாகவும் இணங்கிக் கொண்டன. யுத்த நிறுத்தம் பற்றிப் பேசுவதற்காக மட்டும் மீண்டும் கடந்த ஜூன் மாதம் இரு தரப்புகளும் ஒஸ்லோவுக்குக் கூட்டிச் செல்லப்பட்டன. ஆனால் கூட்ட மண்டபத்துக்குச் சென்ற இலங்கை அரசுத் தூது கோஷ்டியைப் பார்க்க விரும்பாமலேயே, முகத்தை முறித்துக் கொண்டு தமிழ்ச் செல்வனின் கோஷ்டி ஓடிப்போய் விட்டது. இம் முறையும், "எமக்குச் சிங்கள அரசுகளில் நம்பிக்கையில்லை. சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாகவே, சர்வதேச சமூகத்துக்கு மதிப்பளித்து ஜெனீவா செல்கிறோம்" என்று தமிழ்ச்செல்வன் இலங்கையை விட்டுப் புறப்பட முன்னர் யாப்பிற்கு விரோதமானதென்பதால் அதனை அமைக்க முடியாதென்று அரசு அறிவித்தது. பின்னர் மக்களுக்கு ஆயுதப் பயிற்சியளிப்பதாகக் கூறிக் கொண்டார்கள். பின்னர் 'பொங்கியெழுந்த தமிழ்ப்படை' என்று கூறிக் கொண்டு, பந்தோபஸ்துப் படையினரைத் தாக்கினார்கள். ஏப்ரல் 19ஆம் திகதி ஜெனீவாவில் நடத்த உத்தேசிக்கப்பட்ட கூட்டத்திற்கு வர முடியாதென்று கூறி

# இலங்கை விடயத்தில் சர்வதேசத்தின் எதிர்பார்ப்பும் – ஏமாற்றமும்





ஜெனீவா பேச்சு வார்த்தையின் போது...

கூறியதிலிருந்து, என்ன நடக்குமென்பதை அரசியல் அனுபவஸ்தர்களால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

"அரசியல் தீர்வை முன்னிலைப்படுத்துவோம்" என்று அரசாங்கம் அறிவித்திருந்தது. இல்லை, எங்கட தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினை பற்றியே பேசுவோம்" என்று புலிகளின் தமிழ்ச்செல்வன் கூறியிருந்தார். எனவே முரண்பட்ட நோக்குகளோடு ஜெனீவாவில் சந்தித்த அரசு - புலிகள் தூதுகோஷ்டிகள் கூட்டறிக்கை கூட விடுக்காமல் அல்லது அடுத்த பேச்சு எப்போது நடக்குமென்று கூட ஓர் இணக்கத்துக்கு வராமல் - வரமுடியாமல் வந்த வழியே கொழும்புக்கும் வன்னிக்கும் திரும்பிவிட்டன. நோர்வே ஏற்பாட்டாளர்களும் இலங்கை வந்துசென்ற இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளும் கொடுத்த அழுத்தமே இரு தரப்பையும் ஜெனீவாவில் சந்திக்க வைத்திருக்கிறது. அதைத்தான், சர்வதேச சமூகத்துக்கு மதிப்புக் கொடுத்துச் செல்வதாகத் தமிழ்ச் செல்வன் குறிப்பிட்டிருக்கிறார். இரு தரப்பையும் மேசையில் சந்திக்க வைப்பதில் மட்டும் நோர்வேயும் சர்வதேச சமூகமும் வெற்றிபெற்றிருக்கிறது. ஆனால் ஜெனீவா - 2ஐ ஓர் உந்து தளமாகப் பாவித்துத் தடைக்கற்களைத் தகர்த்து விடலாமென்ற சர்வதேச எதிர்பார்ப்புக்கு 'மொட்டையடிக்கப்பட்டு' விட்டது என்றே கூற வேண்டும். புலிகளிடம் எந்த அரசியல் தீர்வு யோசனைகளும் இன்றுவரை கிடையாது என்பதால் அரசியல் தீர்வு என்பது அவர்களுக்கு வேப்பங்காயாகக் கசந்து வந்திருக்கிறது. 1985ஆம் ஆண்டு திம்புவில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையைத் தவிர்த்து, ஏனைய அனைத்துப் பேச்சுவார்த்தை முயற்சிகளையும் குழப்பியவர்கள் புலிகள்தான் என்பது ஒரு வரலாற்றுப் படிப்பினையாகும். கடந்த பெப்ரவரியில் ஜெனீவாவில் பேச்சுவார்த்தை நடத்திய புலிகள், வடக்கு, கிழக்கிற்கான உடனடி புனரமைப்பு நடவடிக்கைகளுக்கென ஏற்படுத்தப்பட்ட உப கமிட்டியில் (சிரான்) அங்கம் வகித்தார்கள். பின்னர் அதனைக் குழப்பிவிட்டு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையைக் கோரினார்கள். அரசியல் சர்வதேச சமூகத்திற்கு 'பெப்பே' காட்டினார்கள். ஏப்ரல் 25ஆம் திகதி இராணுவத் தலைமையகத்துக்குள் புகுந்து, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல்ட் சரத் பொன்சேகா மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தினார்கள். இந்தச் சம்பவம்தான் புலி நிலைகள் மீது விமானக் குண்டுத் தாக்குதல்களை நடத்தப் படையினரை உசுப்பி விட்டதென்பதை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஜூலை மாதத்தில் மனிதாபிமானமற்ற முறையில், மாவிலாறு அணைக்கட்டை மூடி, சுமார் பதினைந்தாயிரத்துக்கு மேற்பட்ட மூவின மக்களையும் தண்ணீருக்காக அலைய வைத்தார்கள். இராணுவம் தாக்குதல் நடத்திக் கொண்டு மாவிலாறு அணைக்கட்டை நெருங்கியதும், திடீரென்று மனிதாபிமான காரணங்களுக்காக அணைக்கட்டைத் திறப்பதாகக் கூறிக்கொண்டு தலைதெறிக்க ஓட்டமெடுத்தனர். ஆகஸ்ட் முதல் வாரத்தில் மூதூருக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி 35,000க்கும் மேற்பட்ட மக்களை அகதிகளாக ஓட்டம் பிடிக்க வைத்தார்கள். அப்பாவி முஸ்லிம்கள், தமிழர்கள் என்று பலர் சுட்டுத்தள்ளப்பட்டனர். ஆகஸ்ட் பதினொராம் ஆம் திகதி ஏ-9 பாதையில் அமைந்த முகமாலை முன்னரங்கப் பகுதி, பூநகரி, கிளாலி, யாழ்ப்பாணம் என்று பல இடங்களில் தாக்குதல்களைத் தொடங்கினார்கள். அப்போதுதான் யாழ்ப்பாணத்தின் கரையோரப்பகுதிகளில் வாழ்ந்த அப்பாவி மக்களை இடம் பெயருமாறு புலிகள் எச்சரிக்கை விடுத்தனர். சுமார் ஐம்பதாயிரம் மக்கள் இந்த எச்சரிக்கையால் இடம் பெயர்ந்தனர். இதுவே புலிகள் கையாண்ட யுத்த நிகழ்ச்சி நிரலின் வளர்ச்சிப் போக்கு. பாதுகாப்புப் படைகள் பதிலடி கொடுக்காமல், கைகட்டி, வாய்பொத்தி நிற்க வேண்டுமென்று எந்த மடையனும் எதிர்பார்க்க மாட்டான். முகமாலையென்பது ஏ-9 பாதையில் யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் நுழைவாயிற் பகுதியாகும். இங்கு புலிகள் நடத்திய தாக்குதல்களே அரசுக்கும் - புலிகளுக்கும் இடையிலான உக்கிர சண்டையாக விஸ்வரூபமெடுத்து, ஏ-9 பாதையை மூட வைத்து விட்டது.

வடக்கிலும் கிழக்கிலும் வெடித்த யுத்தம், இரண்டரை இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களை அகதிகளாக இடம்பெயர வைத்திருக்கிறது. கிழக்கில் திருமலை, சம்பூர், மூதூர், கிண்ணியா போன்ற பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் அன்ன ஆகாரமின்றி, உண்ண உணவின்றி மர நிழல்களுக்குக் கீழ் இன்னமும் வாழ்வதாகத் தகவல்கள் கிட்டுகின்றன. சம்பூரிலிருந்து மட்டும் 45,000 மக்கள் இடம்பெயர்ந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.யாழ்ப்பாணத்தில் சுமார் ஐந்து இலட்சம் மக்கள் இந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. ஏ-9 பாதையை மூடி சுமார் ஆறு இலட்சம் தமிழ் மக்களுக்கு பொருளாதாரத் தடையை ஏற்படுத்தி, அவர்களை அரசு சிறைக்குள் வாழ வைத்திருக்கிறதென்று தமிழ்ச்செல்வன் கதையளக்கிறார். மக்கள் அவஸ்தைப்படுவது உண்மை. ஆனால் அதற்குக் கால்கோலிய யுத்தத்தை கட்டவிழ்த்து விட்டவர்கள் புலிகள் தான் என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி மற்றும் ஐ.நா. தொண்டர் நிறுவன அமைப்புகளின் உதவியுடன் யாழ்ப்பாணத்திற்கு கப்பல்கள் மூலம் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல புலிகள் அனுமதி வழங்க மறுத்தது ஏன்? உணவுக் கப்பல்கள் மீது தற்கொலைத் தாக்குதல்களை நடத்தமாட்டோம் என்று அவர்களால் ஏன் உறுதி வழங்க முடியாமல் போனது? புலிகள், கடற்படையினர் மீது நடத்திய தாக்குதல்களையடுத்தே வடக்கில் மீனவர்கள் தொழிலுக்கு. செல்ல முடியாத நிலையேற்பட்டதென்பதைப் புலிகள் மறுக்க முடியுமா?

வடக்கு, கிழக்கில் கடந்த பத்து மாதங்களில் நீதிக்குப் புறம்பான முறையில் 1300க்கு மேற்பட்ட குடிமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று 'மனித உரிமைகளுக்கான இல்லம்' என்ற அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறது. அதாவது ஐந்து மணித்தியாலத்துக்கு ஒருவர் என்ற வீதம், அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

*(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)*

## ஏ - 9 பாதையில் தடம் புரண்ட...

*03 ஆம் பக்கத் தொடர்ச்சி....*

எமது மக்களின் துயரங்களுக்குப் புலிகள் காரணமாக இருப்பினும் அதில் எம்மால் பங்கெடுக்காமல் இருந்து விட முடியாது.

ஜெனீவா பேச்சுவார்த்தையில் ஏ-9 பாதையைத் திறந்து விடாவிட்டால், தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட முடியாது என நிபந்தனை விதித்திருக்கின்றனர் புலிகள். இது எமது மக்களின் வாழ்வின் மீது மேலும் துயரங்களை சுமத்தவே வழிவகுத்திருக்கின்றது. ஏ-9 பாதை திறக்கப்பட வேண்டுமாயின், அப்பாதையில் அனைவரும் சுதந்திரமாகப் பயணம் செய்யப் புலிகள் அனுமதிக்க வேண்டும் என்றும் மக்களிடம் கட்டாய வரி என்ற பெயரில் கப்பம் அறவிடக் கூடாது என்றும், புலிகள் மக்கள் மீதான வன்முறைகளையும், அச்சுறுத்தல்களையும், தாக்குதல்களையும் உடன் நிறுத்த வேண்டும் என்றும் அரசாங்கம் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்திருக்கின்றது. புலிகள் விதித்திருக்கும் நிபந்தனையில் எமது மக்களின் நலன்களை விடவும், புலிகளின் கப்பம் அறவிடும் நலன்களே பல மடங்கு அதிகம். கட்டாய வரி என்ற பெயரில் கப்பம் அறவிட்டு மக்களை ஒரு கையால் வதைத்துக் கொண்டு, மறு கையால் போக்குவரத்திற்கான அனுமதியை வழங்க நினைக்கின்றனர். ஆனால் ஏ-9 பாதையைத் திறப்பதற்கு அரசாங்கம் தெரிவித்துவரும் நிலைப்பாட்டில் மக்களின் நலன்கள் இரட்டிப்பானதாகவும் முழுமையானதாகவும் இருக்கின்றது. அரசாங்கம் தெரிவித்திருக்கும் நிலைப்பாடு, மக்களுக்கான போக்குவரத்தையும், அத்தியாவசியப் பொருட்களுக்கான விநியோகத்தையும் அனுமதிக்கின்றது. அதேவேளை புலிகளின் கட்டாய வரி என்ற கப்பம் அறவிடும் கெடுபிடிகளையும் இல்லாதொழிக்கின்றது. இதில் யாருடைய நிலைப்பாடு எமது மக்களின் நலன் சார்ந்தது என்பதை சாதாரண குடிமக்கள் தொடக்கம் சர்வதேச சமூகம் வரைக்கும் உணர்ந்து செயலாற்ற வேண்டுமென நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம். இது ஒரு புறமிருக்க, போக்குவரத்தும், அத்தியாவசியப் பொருட்களுக்கான விநியோகமும் மக்கள் எதிர்கொள்ளும் நாளாந்தப் பிரச்சினைகள் மட்டுமே! அரசியலுரிமைப் பிரச்சினையால் மட்டும்தான் யுத்தம் தொடங்கியது. யுத்தத்தினால் மட்டும்தான் மக்களுக்கு நாளாந்தப் பிரச்சினைகள் ஏற்பட்டன. பேச்சுவார்த்தை மேசையில் புலிகள் முன்வைக்க வேண்டிய கோரிக்கை என்பது அரசியல் தீர்விற்கான கோரிக்கையாகவே இருக்க வேண்டும். அரசியல் பிரச்சினை தீர்க்கப்பட்டால் யுத்தம் நிரந்தரமாக இல்லாதொழிந்து விடும். யுத்தம் இல்லையென்றால் மக்களின் இது போன்ற நாளாந்தப் பிரச்சினையும் இயல்பாகவே தீர்ந்துவிடும். அரசியல் தீர்விற்கு வழி தேடாமல் நாளாந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது போல் தங்களது சுயலாபங்களுக்கான நிபந்தனைகளை முன்வைப்பதென்பது வேருடன் மரம் இருக்க இலைகளை மட்டும் பிடுங்கும் போலித்தனமான நடவடிக்கையாகும். அரசாங்கம் கோருவது போல் வன்முறைகளைக் கைவிட்டு, கட்டாய வரி என்ற பெயரில் கப்பம் அறவிடும் மக்கள் விரோத செயல்களை அறவே கொண்டிருக்காத, யாவரும் சுதந்திரமாகப் பயணிக்க முடிந்த ஏ-9 வீதியைத் திறப்பதற்கு புலிகள் உடன்படுகின்ற அதேவேளை, சம காலத்தில் அரசியல் தீர்விற்கான பேச்சுவார்த்தையினையும் காலத்தை இழுத்தடிக்காமல் தொடர்வது என்பதே மக்கள் நலன் சார்ந்த விடயங்களாகும். இல்லையேல் புலிகள் தொடர்ச்சியாக எமது மக்களுக்கு இழைத்து வருகின்ற வரலாற்றுத் துரோகங்களுக்கான சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்றாக அமையும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ஊரிலிருந்து....




**ம**க்கள் பிரதிநிதிகள் எண்டு நாளொரு பேட்டியும் பொழுதொரு அறிக்கையும் விட்டுக் கொண்டு கொழும்பில வாழ்ந்து வாறவையள் பற்றி எல்லாருக்கும் தெரியும். தெரியாத விஷயம் என்ன தெரியுமோ?

காதும் காதும் வைச்சது போல அவையளில மூண்டு பேர் ஊருக்குப்போய் தங்கட சொந்த அலுவல்களை முடிச்சுப் போட்டு திரும்பி இருக்கினம். தாடி ரவியானவர், மாவையர், நடிகர் திலகம் இவையள் மூண்டு பேரும் போனது ஏ9 ரோட்டால இல்ல. பிளேனில பலாலி போனது மாத்திரமில்லாமல், படை ஆக்களிட்ட உச்ச பாதுகாப்பும் கேட்டுப் பெற்றிச்சினமாம்.

அது சரி, அவையள் வாயத் திறந்தாலே அதை வச்சுச் செய்தி போடுற எங்கட தமிழ்ப் பத்திரிகைகள், அவையள் ஊருக்கு வந்து சென்றதை ஏன் பொத்திப் பொத்தி வைக்கினம் எண்டு ஊரில இருந்து மாஸ்டர் கேட்கிறார்.

# யாழ்ப்பாணம், சம்பூர் மக்களின் அவலங்கள்!






மேர்ஸ் ருகுணு கப்பலில் யாழ்ப்பாணத்திற்கான உணவுப் பொருட்கள் ஏற்றப்படுவதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று பார்வையிடுகிறார்.

**ஜெ**னீவாப் பேச்சுக்கள் ஏ-ஒன்பது பாதை திறப்புத் தொடர்பான இழுபறியில் முறிவடைந்துள்ளது. அரசாங்கம் பாதை திறப்புச் செய்ய வேண்டுமென்றால் புலிகள் வரி அறவிடக் கூடாது என்ற உத்தரவாதத்தைத் தர வேண்டும் என்று கேட்டதற்குப் புலிகள், இணக்கம் தெரிவிக்காததால் ஏ-9 பாதைத் திறப்பு விவகாரம் முட்டுக்கட்டை நிலையைத் தோற்றுவித்துள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் புலிகள் தொடுத்த பெரும் தாக்குதலைத் தொடர்ந்து ஏ-9 பாதை இரு தரப்பாலும் இழுத்து மூடப்பட்டது.

பாதை திடீரென்று மூடப்பட்டதானது, மக்களுக்குப் பொருட்களைச் சேமித்துக் கொள்ள போதிய அவகாசத்தை வழங்கவில்லை. ஆகையால் யாழ். குடாநாட்டில், இருந்த பொருட்களுக்கு மேலதிகமாகப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்த நிலையைப் புலிகள் அரசியலுக்காகப் பயன்படுத்தத் தொடங்கினர். அரசாங்கம் கப்பல் மூலமாக சாமான்களை அனுப்பி வைத்தது. மக்கள் பட்டினி கிடந்துவிடக் கூடாது என்ற அவசர மனிதாபிமான அடிப்படையில் உணவுப் பொருட்கள் மட்டும் அனுப்பிவைக்கப்பட்டன. அந்தப் பொருட்கள் போதுமானதாக இல்லை என்றும், சரியாக மக்களைச் சென்றடையவில்லை என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இதற்கு அரச அதிகாரிகள் மீதும் குற்றஞ் சாட்டப்பட்டது.

கடல் மார்க்கமாக சாமான்கள் கொண்டு செல்லப்படுவதையும், விமானம் மூலமாக சாமான்கள் கொண்டு செல்லப்படுவதையும் பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லை என்று புலிகள் கூறினர். அதாவது புலிகள் அந்தப் போக்குவரத்துகள் தம்மால் தாக்கப்படும் என்ற எச்சரிக்கையையே வெளிப்படுத்தினர். இந்த எச்சரிக்கைகளை மீறி அரசாங்கம்

| பொருள் | சங்கக் கடை விலை | வெளிக் கடை விலை |
|---|---|---|
| அரிசி | 40 | 250வரை |
| மா | 40 | 200 |
| சீனி | 60 | 400 |
| பால்மா | 150 | 400 |
| செத்தல் | 150 | 430 |
| சவர்க்காரம் | 20 | 50 |
| தேங்காய் | - | 100 |
| பருப்பு | - | 200 |
| உள்ளி | - | 2000 |
| தீப்பெட்டி | - | 24+35 |
| மோட்டின் | - | 100 |
| மீன்டின் | - | 85-90 |
| பழப்புளி | - | 120 |
| உப்பு | - | 20 |
| மீன் | கூறு | 3500 |
| மாட்டிறைச்சி | | 320 |
| ஆட்டிறைச்சி | | 400 |
| கோழி | | 600 |

இதுவரை ஆறு கப்பல்களில் சுமார் 16,000 தொடக்கம் 18,000 மெற்றிக் தொன் வரையான உணவுப் பொருட்களை குடா நாட்டுக்கு அனுப்பிவைத்துள்ளது.

எனினும் தனியார் வர்த்தகர்கள் புலிகளின் அச்சுறுத்தல் காரணமாகப் பொருட்களை குடா நாட்டுக்கு அனுப்ப முன்வரவில்லை. ஒரு சிலர், கடற்படையினரின் கப்பல்களில் பொருட்களை மிகக் கொஞ்சமாக அனுப்பியுள்ளனர். ஏ-9 பாதை திறந்து இருக்கும் போது ஒரு நாளைக்கு 200-250 லொறிகளில் அனைத்து வகையான பொருட்களும் யாழ்ப்பாணத்துக்கு வர்த்தகர்கள் மூலமும் அரசு மூலமும் அனுப்பி வைக்கப்பட்டன. ஒரு லொறியில் 10 மெற்றிக் தொன் சாமான்கள் ஏற்றப்படும். அப்படியாயின் ஒரு நாளைக்கு மட்டும் 2000 - 2500 மெற்றிக் தொன் பொருட்கள் யாழ். குடா நாட்டுக்கு வந்து சேர்ந்தன. இவற்றில் உணவுப் பொருட்கள் மட்டுமல்லாது இரும்பு - சீமெந்து என்று எல்லாப் பொருட்களும் உள்ளடங்கும். ஆக, மாதத்தில் 60,000 மெற்றிக் தொன் பொருட்கள் யாழ். குடாநாட்டுக்கு குறைந்த பட்சம் வந்து சேர்ந்தன.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இருந்து முடிவடைந்த ஒக்டோபர் மாதம் வரையான மூன்று மாதத்துக்கும் தனியே உணவுப் பொருட்கள் மட்டும் வந்து சேர்ந்துள்ளன. அதாவது எல்லாமுமாக சுமார் 1,50,000 - 1,80,000 மெற்றிக் தொன் பொருட்கள் வரவேண்டிய குடாநாட்டுக்கு வெறும் 18,000 மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் மட்டுமே இதுவரை வந்து சேர்ந்துள்ளன. சராசரியாகப் பார்த்தால் கூட உணவுப் பொருட்கள் உட்பட அத்தியாவசியப் பொருட்கள் 24,000 - 27,000 மெற்றிக் தொன்கள் வரை மக்களுக்குத் தேவையாகவுள்ளன. ஆக இதுவரை கிடைத்த பொருட்கள் மக்களின் தேவைக்கான அளவில் மூன்றில் இரண்டு பங்கு தான் என்பதால் பொருட்களுக்கான தட்டுப்பாடும், பட்டினிக்கான சூழலும், விலையேற்றங்களுக்கான சந்தர்ப்பமும் எத்தகைய அளவில் இருக்கும் என்பதை எவரும் புரிந்து கொள்ளமுடியும்.

தவிரவும், 5000 - 6000 வர்த்தகர்கள் செய்த வேலையை தனியே அரச அதிகாரிகளால் பூர்த்தி செய்துவிட முடியாது. மக்களின் நுகர்வுப் பொருட்கள் பல தரப்பட்டவையாக இருக்கின்றன. குறிப்பாகச் சிறுவர்களுக்கான பால் மா பல வர்க்கங்கள், அவை தனித்தனியாகத் தேவையாகவுள்ளது. அதே போல் ஒவ்வொரு பொருளிலும், ஒவ்வொருவருக்கும் ஒரு தேவை உள்ளது. அது வியாபாரிகளுக்குத்தான் தெரியும். அரசாங்கத்தைப் பொறுத்தவரை - பொதுவாக அரிசி, பருப்பு - மா, பால்மா என்று உயிர் வாழ்வுக்கான அடிப்படையான உணவுப் பொருட்களை மட்டுமே தற்போதைய நெருக்கடியில் வழங்க முடியும். வகை வகையாக பொருட்கள் கிடைக்க வாய்ப்பு இல்லை. ஆனால், அந்தத் தேவை மக்களுக்கு உண்டு என்பதையும் மறுக்க முடியாது என்று உயர்மட்ட அரச அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

2002ஆம் ஆண்டு ஒப்பந்தத்துக்கு முன்னர் ஏ-9 பாதை மூடப்பட்டிருந்த காலத்தில் கடல் வழியாகவும் - விமானம் மூலமாகவும் வர்த்தகர்கள் பொருட்களைக் கொண்டு வந்தார்கள். தற்சமயம் முழு அழுத்தமும் அரசாங்கத்தின் மீதே உள்ளது. ஆகையால் சில குறைபாடுகளும், தட்டுப்பாடுகளும் இருக்க இடமுண்டு. இவற்றை நிவர்த்திக்க தாம் தொடர்ந்து பாடுபடுவதாகவும், தமது தேவைகள் தொடர்பாக அரசுக்கு அடிக்கடி அறிவுறுத்தி வருவதாகவும் அவர் கூறுகிறார்.

எதிர்காலம் மழைக்காலம் என்பதால் கடல் பயணம் இன்னும் சிரமமானதாக அமையப் போகிறது. எனவே தற்போதைய நிலைமையை விடவும் மோசமான சூழல் ஏற்படலாம் என்ற கவலை யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் மத்தியிலும், அரசாங்க அதிகாரிகள் மத்தியிலும் நிறைந்து போயிருக்கிறது. தற்போதைக்குப் பொருட்கள் விலையேற்றமானது, கொழும்பில் இருக்கும் விலையை விடப் பல மடங்கு அதிகமாக உள்ளது. சில பகுதிகளில் மக்களிடம் பணம் இருக்கின்றபோதும் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

அலசுவது

**- மதியூகி -**

உணவுப் பொருட்களுடன் சிறுவர் பால்மா, கால்நடை, கோழித் தீவனம் - அத்தியாவசியப் பொருட்களின் தேவை மிகவும் அவசரமாக உள்ளது. ஏ-9 பாதையை தற்போதைக்குத் திறக்க வாய்ப்பு இல்லை என்பதாலும், மோதல்கள் சிறுகச் சிறுக நடைபெறலாம் என்பதாலும், அரசு மாற்று வழிகளை மேற்கொண்டு மக்களின் பிரச்சினைகளைச் சமாளிக்க உடனடியாகச் செயல்பட வேண்டும். புலிகளின் தாக்குதல்கள் அச்சுறுத்தலாக இருக்குமானால், இந்தியாவிலிருந்து பொருட்களைக் கொண்டுவரலாம் என்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியையும், ஐ.நா.சபையின் கொடியுடன் யாழ்ப்பாணத்துக்கு உணவுக் கப்பல் அனுப்பும் யோசனையையும் சாதகமாகவும், அவசரமாகவும் பரிசீலித்து அரசு அடுத்த கட்ட செயற்பாட்டை முனனகர்த்துவது அவசியமாகும்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்...)

## அதிரடி அய்யாத்துரை



**ஜெனீவாவில** நடந்த பேச்சுக்கள் பல பேரும் எதிர் பார்த்த மாதிரி முறிச்சுக் கொண்டிட்டுது. பேச்சுவார்த்தைகளை முறிச்சுக் கொண்டு நோர்வேயிக்குப் போங்கோ எண்டு வன்னித் தலைமை வலியுறுத்தித்தான் அனுப்பினதாம். அப்புடியெண்டால் ஒருவேளை அதிகாரத் தரப்பு பாதையைத் திறக்கச் சம்மதிச்சிருந்தாலும் கூட ரெண்டெழுத்தார் வேறு எதையாவது காரணம் காட்டி உதைத்தான் செய்திருப்பினம் எண்டிறார், உந்த ரகசியத்தை நமக்குச் சொன்னவர். பிறகு, உங்க குடா நாட்டில படைகள் ஆயத்தம் பண்ணினம் எண்டதுக்குப் பிறகு சு.பா.குழு நோர்வேக்குப் போய் எஸ்கேப் ஆயிடுவாங்கள் எண்டிட்டு உடனடியா நாடு திரும்புங்கோ எண்டு உத்தரவாம். உப்பிடி திடீர் திடீரெண்டு நடக்கிற நகர்வுகளைப் பார்த்தால், இன்னொரு சண்டை தூரத்தில இல்லை எண்டுதான் சொல்லினம். ஏக்கனவே சனம் சாப்பாட்டுக்கு வழியில்லாமலும், போக்குவரத்துப் பண்ண முடியாமலும் தவிச்சுக் கொண்டிருக்கினம். அதுக்கிடையில இவை காட்டிற படபடப்பு, ஊரைப் பத்த வச்சிப் போட்டுத்தான் அடங்கும் போல எண்டு சனங்கள் சொல்லினமுங்கோ.

**மலையகத்தின்ர** மன்னர்கள் ஆளுக்கொரு அமைச்சுப் பதவியெண்டு பதவிப் பிரமாணம் செய்து கொண்டிச்சினம். அதுக்குப் பிறகு அவையைக் காணுறதே பெரும்பாடாக இருக்கு எண்டு தோட்டத்தில இருக்கிற மக்கள், தொரைமாரைத் தேடினமாம்.

அமைச்சர்கள் கூடிட்டினம். இனியாவது மலையகத்தில மறுமலர்ச்சி உருவாகும் எண்டு கனவு கண்ட சனத்துக்கு அமைச்சர்களைக் கண்டு கொள்ளிறதே பெரும்பாடாப் போயிட்டுதே. என்னாச்சி நம்ம தலைவர்களுக்கு. சம்பள விவகாரமும் ஒரு பக்கம் அநாதைப் பிரச்சினையாகிக் கெடக்கு. அது பத்தியும் தலைவர்மார் வாய் திறக்காமல் இருக்கினமே. சந்தா கட்டக் கூடாது எண்டு கதைச்சதை, நடைமுறைக்குக் கொண்டு வந்தால்தான் தலைவர்மார் தோட்டத்துப் பக்கத்துக்கு வருவினமோ எண்டு சில இளைஞர் அமைப்புகள் சீண்டிவிட்டுப் பாக்கினம்.

அமைச்சுப் பதவிகளை வாங்கி வீட்டில சாம்பிராணி காட்டாம, அதைக்கொண்டு உந்தக் கஷ்டப்பட்ட சமூகத்துக்கு ஏதாவது நன்மையைச் செய்யுங்கோ. அதிகாரம் இருக்கேக்க செய்யாமல், அது பறிபோனாப் பிறகு 'ஐயோ அம்மா' எண்டு கத்திக் கொண்டு திரும்பவும் வந்து வாக்குப் போடுங்கோ எண்டு காலில விழாதீங்கோ எண்டு சனம் ஓப்பினாச் சொல்லினமுங்கோ.

**யாழ்ப்பாணத்தில** இருந்து முஸ்லிம் மக்கள் விரட்டப்பட்ட 16ஆவது ஆண்டு நிறைவை, முன்னம் எப்பவும் இல்லாதபடி இந்த முறை முஸ்லிம்கள் நினைவுபடுத்தியிருக்கினம். ஒக்டோபர் 30ஆம் திகதி முஸ்லிம் சகோதரர்களைப் பொறுத்தவரை ஒரு கறுப்பு ஒக்டோபர் தான் எண்டு சொல்லினம். சும்மா தமிழ் - முஸ்லிம் உறவை தேங்காய்ப் பூவும் - புட்டும் எண்டும், தொப்புள் கொடி உறவெண்டும் வாய் ஜாலம் காட்டிறதும், முதலைக் கண்ணீர் வடிக்கிறதும் ஏகப்பிரதிநிதித்துவ வியாதி பிடிச்சவையின்ர பம்மாத்துத்தான்; வேறு ஒண்டுமில்லையெண்டு சொல்லினம்.

முஸ்லிம்களின்ர பிரதிநிதித்துவம் பேச்சுவார்த்தையில தனித் தரப்பாக இருக்க வேணுமெண்டது நியாயமானதுதான். ஏன் எண்டால் அவைக்கும் இந்தப் பிரச்சினையாலை, பிரச்சினையா இருக்குது. இந்தக் கேள்வியளுக்கு அமைச்சர் பேரியல் அஷ்ரப், கடைசியா நடந்த ஜெனிவாப் பேச்சிலையும், முஸ்லிம்கள் மீது ரெண்டெழுத்தாரின்ர கெடுபிடிகள் தொடர்ந்து கொண்டிருக்கு எண்டு குறிப்பிட்டு பேசினது கொஞ்சம் ஆறுதலாக இருக்குது. தமிழ் மக்களுக்கு - ஒரு கறுப்பு ஜுலை! முஸ்லிம் மக்களுக்கு - ஒரு கறுப்பு ஒக்டோபர்! எப்படியிருக்குது பாத்தியளோ?

ஒரு பக்கம் யுத்தம், பட்டினி எண்டு நாடு அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருக்குது. இன்னொரு பக்கம் மேளா தாளம் இல்லாமலே சிறுவர்களைப் பாலியல் தொழிலுக்காக விற்கும் தொழிலும் நாட்டில பெருகிக் கொண்டு போகுதுங்கோ. இண்டர்நெட்டில சிறுவர், சிறுமிகளின்ர நிர்வாணப் புகைப்படங்களைப் போட்டு, இன்னாருக்கு இன்ன விலை எண்டு பிஸினஸ் பண்ணினம். சிறுவர்களை வேலைக்கு விடுவதிலையும், முகம் தெரியா தலையோடை அனுப்புறதையும் பெற்றோர்கள் உடனடியா நிறுத்த வேணும். தாய், தந்தையை இழந்து உறவுகளோடையும், தெரிஞ்சவையளோடையும் வளரும் பிள்ளைகள் தொடர்பாக அக்கம் பக்கத்தில இருக்கிறவை கவனமாக இருங்கோ. குறிப்பாக மலையகத்தில இருந்து வேலை வேண்டித் தருவதாக அழைத்துவரும் முகவர்கள் குறித்து சிறுவர்களின் பெற்றோர்கள் மிகக் கவனமாக இருங்கோ. இப்பவெல்லாம் நல்ல மனிசனைக் காணுறதெண்டது இருட்டுக்குள்ள கறுப்புப் பூனை பிடிக்கிற மாதிரித்தானுங்கோ. உந்தச் சிறுவர் அமைப்புக்கள், சிறுவர்களைப் படையில சேர்ப்பது, படிப்பைக் கெடுப்பது எண்டதுக்கு குரல் கொடுக்கிற அதே நேரம், உந்த மாதிரியான படுபாதகச் செயல்களையும் கவனத்தில் கொண்டு அதுகளைத் தடுத்து நிறுத்தவும், - பிள்ளைகளைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்தால் நல்லதுங்கோ...

**தலைநகரில** இருக்கிற தமிழ்ச் சனத்துக்கு வாடகைக்கு வீடு கொடுக்கிறதெண்டாலும், சொந்தமாவே வீடு விக்கிறதெண்டாலும் பெரும்பான்மை சனம் முண்டியச்சுக் கொண்டு குடுப்பினம். ஏன் எண்டால் எங்கட சனம், தங்கட காரியம் முடியவேணுமெண்டால் பணம் எவ்வளவெண்டு பார்க்கமாட்டினம் எண்டதாலை. ஆனால், இப்பவெல்லாம் தமிழ் சனத்துக்கு வீடோ, இடமோ தாரதுக்குக் கடுமையா யோசிக்கினமாம். பெரும்பான்மைச் சனம் மட்டுமில்லையுங்கோ, தமிழ்ச் சனமே இன்னொரு தமிழ்ச் சனத்துக்கு வீடு கொடுக்கப் பயப்படுகினமாம். முன்னப் பின்னத் தெரியாதவைக்கு வீடு கொடுத்தால், பிறகு விசாரணை, வாக்குமூலமெண்டு வில்லங்கமா இருக்குமெண்டு யோசிக்கினமாம். பாவம் எங்கட சனம், சொந்த ஊரில்தான் நிம்மதியா இருக்க ஏலாதெண்டு தலைநகருக்கு ஓடி வந்தால், இங்கையும் இருக்க முடியாமல் கிடக்கு எண்டு முழி பிதுங்கிப் போய் நிக்குதுகள். தமிழன் இல்லாத இடமில்லை எண்டு பெருமை பேசின காலம் மாறி, தமிழன் இருக்குமிடமெல்லாம் பிரச்சினை இருக்கும் இடந்தான் எண்ட அளவில் ரெண்டெழுத்தார் உருவாக்கிட்டினம் என்று சனம் கவலைப்படுதுகளுங்கோ...

# காற்று

**நியாயமாகப்** பார்த்தால் 'உயிர்' என்று பெயரிட்டுத்தான் எழுதியிருக்க வேண்டும். கண்ணுக்குத் தெரியாது, உருவமில்லை, நிறமில்லை. உயிருக்கும் அப்படித்தான். மூச்சுப் போனால் உயிர் போய் விடுகிறது. மூச்சுக் காற்று உயிர், காற்று கடந்து வரும் கடல் வெளிகள், காடுகள், மண்வெளிகள், மலை வெளிகள், மனிதர்கள் கற்பனைக்கு எட்டாதவை. காற்று எதிலும் பற்றுக் கொள்வதில்லை. ஆதலால்தான் தன்பாட்டுக்கு எல்லாத் தளங்களையும் அலங்கரித்துக் கொள்கிறது. காற்று நினைத்தால் ஒன்றை நகர்த்தி விட முடிகிறது. ஆனால் காற்றை நம்மால் தொடக்கூட முடியாது. காற்றை உதறித்தள்ளி விட்டு, ஒன்றுமே இல்லை காற்றுக்கு எல்லாப் பக்கமும் கைகளும், கால்களும் இருக்கின்றன. ஆகையால் தான் காற்றால் நம்மை எல்லாத்திசைகளிலும் பற்றிக் கொள்ள முடிகிறது. காற்றும் ஈர்ப்பும் சேராதுவிட்டால் நாம் இயற்கையாகவே ஊமையாகவும், செவிடாகவும் தான் வாழ்ந்து கொண்டிருப்போம். காற்று ஒலி அலைகளை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கூட்டிச் செல்கிறது. பூங்காற்று, பனிக்காற்று, குளிர்காற்று என்றும் தென்றல் என்றும் இதமான

தருவது
-தேசன்

காற்றை நமது விருப்பத்துக்கேற்ப அழைத்துக் கொள்கிறோம். காற்றுக்குப் பெயர் வைக்க முடிந்ததில் காற்றுக்கு மகிழ்ச்சியாக இருக்குமோ தெரியாது.

காற்று ஒரு பல்கலைக்கழகம், பல தேசங் கடந்து திரிவதால், பல மனிதர்கள் பற்றிய சிறப்புத் தேர்ச்சி காற்றுக்கு இருக்கும். மனிதர்கள் கொண்டிருக்கும் பழக்க வழக்கம், பாஷைகள், எல்லாமே காற்றுக்குத் தெரியும். மனிதன் இன்னொரு மனிதனுக்குத் தெரியாமல் ஒழித்துவிட முடியும். இருட்டுக்கும் - வெளிச்சத்துக்கும் வேறுபாடு கண்டு




வாழத்தெரியும். காற்றுக்கு மட்டும் மனிதனால் எதையும் மறைக்க முடியாது. எதையும் தெரிந்து கொள்ளக் காற்று மனிதனிடம் அனுமதி கேட்பதில்லை. காற்று எதையும் ஆரம்பிப்பதுமில்லை, முடித்துக் கொள்வதுமில்லை. பறவைகளுக்கும் காற்றின் அலை வரிவை தெரியும். காற்றின் மேனியெங்கும் பறவைகளின் தடங்கள் இருக்கும் காற்றில் வழுக்கிக் கொண்டு திரியும் பறவைகளின் ஊர்வலமே ஒரு அழகு. ஊருக்கு ஒரு காற்று என்று காற்றுக்கு இல்லை.

எங்கள் ஊரில் இரண்டு வகையான காற்றுக்கள் தான் அதிகம் பேசப்படுவது. அதாகப்பட்டது கச்சான் காற்று, கொண்டல் காற்று இவையிரண்டும் தான். இதற்கு அடுத்தபடியாக வாடைக்காற்று. வாடைக்காற்று வீசும்போது ஊருக்குள் நோய்த்தொற்று வரும். ஆகையால் வாடைக்காற்றுக்கு வெளியில் நிற்கக்கூடாது என்று பெரியவர்கள் சொல்வார்கள். கச்சான் காற்று வீசும் போது மணல் வாரி வீசும். தென்னங் கிடுக்குகளால் வேயப்பட்ட ஏழ்மையின் குடிசைகளை கச்சான் காற்றும், கொண்டல் காற்றும் கிளப்பி அறுத்து வீசி எறியும். தகரக் கூரைகளையும் இந்தக் காற்றுகள் பிடுங்கி எறிந்துவிடும். தென்னை மரத்தில் காய்ந்துபோன மட்டைகள் வீசப்பட்டு காற்றில் போய் விழும். அப்போது கடல் அலைகளும் வழமையை விட உயரமாகவும், வேகமாகவும் இருக்கும். காற்று மண் அள்ளி விளையாடி மண் தூவி விட்டு கரை கடந்து போகையில், மணல் மேடுகளில் வரிவரியாக நெளிநெளிவாக காற்று வரைந்த நவீன ஓவியம் தெரியும்.

காற்றின் ஒரு கையில் அழகான தூரிகை ஒன்று உண்டு என்பதை அப்போது புரிந்து கொள்ள முடியும். காற்று எப்படி கோபப்படுகிறது என்பதை உணரமுடிவதில்லை. ஆனால் நிச்சயமாகக் கோபப்படுகிறது. காற்று கோபப்படும் போது அதற்கு இரண்டு பெயர்கள் உண்டு. ஒன்று சூறாவளி, இன்னொன்று புயல். அடிக்கடி காற்றின் கோபத்துக்கு இலக்காகுவது இரண்டு நாடுகள்தான் ஒன்று அமெரிக்கா. இன்னொன்று பங்களாதேஷ். அதிலும் அமெரிக்காவில் அடிக்கடி புயல், சூறாவளித் தாக்கங்கள் ஏற்படுகிறது. ஒவ்வொரு சூறாவளிக்கும் ஒரு பெயர் வைக்கிறார்கள். கடைசியாக பெரும் அழிவை உண்டு பண்ணிய இரண்டு சூறாவளிக்கு கத்தரினா, ரீட்டா என்று பெயர் வைத்தார்கள். ஏனோ சூறாவளிக்கும் புயலுக்கும் பெண்களின் பெயர்களையே வைக்கிறார்கள். அதற்கும் இப்போது அமெரிக்காவில் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. அழிவுகளை ஏற்படுத்தும் சூறாவளிக்கும் புயலுக்கும் பெண்களின் பெயரை வைக்காமல் ஆண்களின் பெயரையும் வைக்க வேண்டும் என்று கோருகிறார்கள்.

'சந்திரமுகி' படத்தில் ரஜினியிடம் வடிவேல் கேட்பார் பேய் இருக்கா? இல்லையா? பார்த்திருக்காங்களா? இல்லையா? நம்பலாமா? நம்பக்கூடாதா? என்று. இப்படி ஒரு கேள்விக்கு விடைகாண அமெரிக்கர்கள் பேய் வீடொன்றை தெரிவு செய்து, அந்த வீட்டின் எல்லா பக்கமும் வீடியோ கெமராக்களைப் பொருத்தி படம் பிடித்தனர். அதில் புகை போல், ஒரு அசைவு போல் ஏதோ ஒன்று பதிவு செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். எனக்கும் தொலைக்காட்சியில் பார்த்த ஞாபகம் உண்டு. பேயைக் கண்டுபிடிக்க எடுத்துக் கொண்ட முயற்சியை காற்றைக் கண்டுகொள்ள பிரயோசனப்படுத்தியிருந்தால் பிரயோசனமாக இருந்திருக்கும் என்று நினைக்கிறேன். இதை எழுதும் போது இல்லாததொன்றை எப்படி கண்டுபிடிப்பதென்ற கேள்வி சிலருக்கு வரும். காற்று இருக்கா? இல்லையா? என்று கேட்கமுடியுமா? காற்று இருக்கிறதே என்பதை நாம் சுவாசிக்கும் வரை ஏற்றுக்கொண்டுதானாக வேண்டும். அதுதான் உண்மை.


'ஒரு சாமியாரிடம் பக்தன் சொன்னான், சாமியே எனக்கு யாராவது ஏதாவது சொன்னால் உடனேயே கோபம் வந்து விடுகிறது. என்ன செய்யலாம்' என்றவனிடம், சாமியார் 'அந்தக் கோபம் எப்படி இருந்தது. ஒரு தடவை எனக்குக் காட்டுவாயா?' என்றார். 'எப்படிச்சாமி சும்மா காட்ட முடியும்' என்று கேட்டவனுக்குச் சாமி சொன்னார், 'வந்து விடும் பக்கத்தில் இருக்கும் உன் கோபத்தை என்னிடம் காட்ட முடியாதுள்ளது. அப்படியென்றால் காட்டும் பொருளாக இல்லாத ஒன்று உனக்குள் இருப்பதாக ஏன் நீ நம்புகிறாய். அப்படி ஒன்று இனி இல்லை என்பதை நீயே உனக்குள் நம்பிக்கொள்' என்றார். நாமும் காற்றிடம் அப்படித்தான் (தொடர்ச்சி 22ஆம் பக்கம்)


## விளம்பரப் பகுதி







## மலையாள மாந்திரீகம்

உங்கள் காரியங்கள் நினைத்தது நினைத்தப்படி நிறைவேற வேண்டுமானால் என்னை சந்தியுங்கள். எத்தனை பேர்களிடம் சென்று மாந்திரீக பரிகாரம் செய்து தோல்வி கண்டவர்கள் என்னை தேடி வர காரணம் என் கை ராசியே. வாழ்க்கை பிரச்சினையாக இருந்தாலும் சரி, தீராத நோயாக இருந்தாலும் சரி என்னை கண்டு மாந்திரீக பரிகாரம் செய்தால் முன் வினை பாவகரும தோஷங்கள் நீங்கி விடும்.

வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி உரையாடல் வசதி உண்டு

## எனது தனித்தன்மை என்ன

உண்மைச் சேவையை உறுதி படுத்தும் முகமாக கடந்த 39 வருடங்களாக எனது புகைப்படத்தை மக்களுக்கு அறிமுகம் செய்கின்றேன். இது மட்டுமா? வாங்கும் பணத்திற்கும். (GURANTY CARD) வழங்குவதும் இது எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு எந்த மாதம் என்றெல்லாம் ஆணிவேறு அக்குவேராக அன்பர்களின் முகத்தை பார்த்த மாத்திரம் கூறிவிடுவேன்.

## இனி உங்கள் பிரச்சினை என்ன?

வாருங்கள் உங்கள் குறைகளை கூறுங்கள். இவையுடன் வெளிநாட்டவர்களுக்கென அதி விஷேட சாமகால பூசை நடைபெறுவது என்றால் அது அன்னை ஸ்ரீ துர்க்கையின் கருணையே

என்னால் நன்மை பெற்றவர்கள் என்ன கூறுகிறார்கள்.

பரம்பரை பரம்பரையாக 39 வருடகாலமாக தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக

**சுவிஸ் அன்பரின் கணவன்,மனைவி பிணக்கு தீரல் மடல்**
மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசிர்வாதத்தாலும் சின்னாபின்னமான எனது குடும்பத்தை 7000 முஆ க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**சுவிஸ் அன்பரின் மடல் ஸ்ரீ துர்க்கையம்மனின்ச க்தியால் பேசும் மழலை**
மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானகோடி நன்றிகள்.

**ஜெர்மன் அன்பரின் மடல் மகளின் திக்குவாய் குணமாகியது**
அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்.

**லண்டன் அன்பரின் மடல் எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்**
பெறுமதிப்புக்குறிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் அருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் 39 வயதில் அதிசயத் திருமணம்**
பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடான கோடி நன்மைகள்

**குருணாகல் அன்பரின் மடல் நெடுநாளாக தடைப்பட்ட திருமணம்16 நாளில் வெற்றி**
தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா எனது சகோதரிக்கு திருமணம் தடைபட்ட வண்ணம் இருந்ததால் உங்களிடம் பரிகாரம் நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்.

**பிரான்ஸ் அன்பரின் மடல் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி**
அன்புக்கும் மதிப்பிற்குறிய ஐயா. வெளிநாட்டுக்கு செல்ல முடியாமல் மிகவும் கஸ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்

**இத்தாலி அன்பரின் மடல் சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி**
வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் நானும் கணவரும் பிரிய நேர்ந்த சமயம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான் என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல் போதை அடிமைதனத்திலிருந்து விடுபட்டவர்**
அன்புக்குறிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதை பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்தில் புது ஒளியேற்றினீர்கள் நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல் ஜாதகத்தில் குறியது பலிதம்**
மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறிந்திருந்த எனக்கு இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் என கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தேன் என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள சேவை தொடரட்டும்.

**யாழ்ப்பாண அன்பரின் மடல் அதிசய அக்னி குண்டல பூஜை**
மதிப்பு மரியாதை கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்த்தாரையும் மறவாது மாதம் தோறும் விசேஷமாக நடைபெறும். அக்கினிகுண்டல பூஜையில் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகின்றோம் ஐயா.

**கொழும்பு அன்பரின் மடல் அச்சொட்டான கைரேகை பலன்**
அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வாழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**கண்டி அன்பரின் மடல்**
பல சிரமங்கள் மத்தியில் இருந்தேன். தினமுரசில் உங்களுடைய அற்புத சேவையைப் பார்த்து உடன் தொடர்பு கொண்டேன். உடன் எனது ஜாதகத்தைக் கணித்து என் வாழ்வில் நடப்பது நடக்க இருப்பது பற்றி மிகத் தெளிவாக கூறியிருக்கிறீர்கள். என் உள்ளம் நிறைந்த நன்றிகள். தங்களின் பரிகாரமான செயலால் என் மனம் அமைதியடைந்து சந்தோஷத்துடன் இருக்கிறேன். வாழ்க ஐயாவின் சேவை

**இனி உங்கள் மகிழ்ச்சிக்கு**
அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கபோவது இவையனைத்தும் ஜாதகம் மூலமாகவோ? கைரேகை மூலமாகவோ? தெட்டத் தெளிவாக உங்கள் பலாபலன்களை அறிந்து சிறப்பான மகிழ்ச்சியான, குபேரவாழ்வு பெற என்னை நேரில் சந்தியுங்கள். உண்மையென்பது உண்மையே.

உலக மளையாள மாந்திரீக சக்ரவர்த்தி பேராசிரியர்
டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N.) JP PROF. DR. P.K. SAMY (J.D.G.A.N.) JP

ஸ்ரீ துர்க்காதேவி மாந்திரீக உச்சாட்ட பீடம்
SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM. No- 162 KOT AHENA STREET COLOMBO 13
Tel-011-2470615, 011-2342463, 011-2342464,011-2431137

FAX-0094-11 2344831 Email- drpksamy@sltnet.lk Web:- www. drpksamy .com

எமது கிளை நிறுவனம் நுவரெலியாவில் மட்டுமே.
No-33,Daily Fair Complex, Kandy Road Nuwara-Eliya.
Tel: 052-2222508

# இன்னொருவர் பார்வையில்



# அரசுக்கும், புலிகளுக்கும் ஒரே உளவாளி!

**இலங்கை அரசுக்கும், புலிகள் இயக்கத்துக்கும் சமகாலத்தில் உளவாளியாகத் திகழ்ந்த கிளென் ஜென்வே என்ற பிரிட்டிஷ் பிரஜையின் ஞாபகக் குறிப்புகள் இங்கே தரப்படுகின்றன. தனது தந்தை பிரிட்டிஷ் இராணுவத்தில் பணியாற்றிய தமிழர் என்று குறிப்பிடும் இவரின் ஞாபகக் குறிப்புகள் 'ஆசியன் ட்ரிபியூன்' இணையத் தளத்தில் கடந்த 24ஆம் திகதி வெளியாகியிருந்தது. அதன் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.**

**பிரிட்டனில்** வாழும் பல செய்தி அவதானிப்பாளர்களைப் போன்று, பொதுநலவாய நாடான இலங்கையில் அதற்கெதிராக இடம்பெற்றுவரும் நாளாந்தப் பயங்கரவாத நடவடிக்கைகளை அவதானித்து வருபவன் நான். இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவும், அயல் நாடான இந்தியாவின் பிரதமர் ராஜிவ் காந்தியும் கொல்லப்பட்டமையும், உண்மையிலேயே எவரும் விரும்பாத சிவில் யுத்தத்தில் சிக்கிய எண்ணற்றவர்களின் நிலைமையும் என்னை வெறுப்படையச் செய்தது. இந்த இரு நாட்டுத் தலைவர்களின் கொலைகளுக்கு எதிராக, எவ்வித சர்வதேசக் கண்டனங்களுமின்றிப் போனது எவ்வாறு என்பதை என்னால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. இக் கொலைகள் பற்றிய செய்தி அறிக்கைகளையும் அரச மரியாதையுடனான இறுதிக் கிரியைகளையும் தவிர, ஏன் இந்தப் பயங்கரவாதச் செயல்கள் தடுக்கப்படவில்லை என்பதையும் என்னால் ஜீரணிக்க முடியவில்லை. இரு நாடுகளுமே தாக்கப்பட்டிருக்கின்றன. இதனை உலகில் ஜனநாயகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலென்று சர்வதேச சமூகம் பார்த்திருக்க வேண்டும். பைத்தியக்கார யுத்தத்துக்குள் சிக்கியுள்ள இலங்கை மக்களைக் குறிப்பாகத் தமிழ் மக்களை கைவிடப்பட்ட மக்கள் தொகையினரென நான் உணர்ந்து கொண்டேன்.

பி.பி.ஸி.உலக சேவையில் கூறப்படுவதைப் போல, ஐரோப்பாவில் புலிகள் இருக்கிறார்களாவென்று நான் ஆச்சரியப்பட்டேன். லண்டனில் நிறைய அகதிகள் இருக்கிறார்கள். லண்டன் அலுவலகத்திலிருந்து எல்.ரி.ரி.ஈ. அறிக்கை விடுத்ததென்று குறிப்பிட்டு, பிரிட்டிஷ் செய்திப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன. இரு பொதுநலவாய நாட்டுத் தலைவர்களைக் கொன்ற குழுவொன்று, லண்டனில் அலுவலகங்களை வைத்திருக்கவும், சுதந்திரமாகச் செயற்படவும் அனுமதிக்கப்பட்டிருப்பது போல எனக்குத் தோன்றியது. இவையெல்லாம் அப்பட்டமான தவறு என்றும் ஏதாவது செய்தாக வேண்டுமென்றும் எனக்குத் தோன்றியது.

என்பாட்டிலேயே இவை குறித்து நான் ஆராயத் தொடங்கினேன். லண்டனிலுள்ள தமிழ் அகதிகள் மையத்திலிருந்து எனது பணியை ஆரம்பிக்கத் தீர்மானித்தேன்.அதன் தொலைபேசி இலக்கத்தைக் கண்டுபிடிப்பது இலகுவாகவிருந்தது. எல்.ரி.ரி.ஈ.யினருடன் நான் தொடர்பு கொள்ள முயற்சிக்கிறேனென்றும், அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கத்தை எனக்குத் தரமுடியுமா? என்றும் என்னுடன் தொலைபேசியில் கதைத்தவரைக் கேட்டேன். அவர் எவ்வித முன்யோசனையுமின்றி முகவரியையும் தொலைபேசி இலக்கத்தையும் தந்தார்.

இரு உலகத் தலைவர்களைக் கொன்ற ஒரு பயங்கரவாதக் குழுவின் விலாசத்தை இவ்வளவு இலகுவாக லண்டனில் கண்டுபிடிக்க முடிந்தமை குறித்து நான் அதிர்ச்சியடைந்தேன். அதன் பின்னர் நான் புலிகளுக்குப் போன் பண்ணினேன். ஏ.சி.சாந்தன் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட ஒருவர் எனக்குப் பதிலளித்தார். எல்.ரி.ரி.ஈ.யின் இலட்சியங்களுக்காக நான் பணிபுரியவும் ஆதரவளிக்கவும் முடியுமாவென்று சர்வசாதாரணமாக அவரைக் கேட்டேன்.

அடுத்த முறை நான் லண்டனுக்குச் செல்லும்போது அவரோடு தொடர்பு கொண்டு, சந்திக்க முடியுமென்று அவர் கூறினார். ஒரு மணித்தியால ரயில் பயணத்தின் மூலம் அவரைச் சந்திக்கக் கூடிய தூரத்தில் நான் வாழ்ந்து வந்தேன். அவருடன் பேசி முடித்ததுமே, லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ் தானிகராலயத்தின் இராணுவ பொறுப்பதிகாரியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அவருக்கு நான் உதவி செய்யத் தயாராக இருப்பதாகக் கூறினேன். அப்போது அவர் எல்.ரி.ரி.ஈ. சம்பந்தப்பட்ட விடயங்களைக் கையாள்வதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார். தெற்காசியப் பயங்கரவாதக் குழு (எல்.ரி.ரி.ஈ.) சம்பந்தமாக உளவு பார்ப்பதற்கு பிரிட்டிஷ் ஆசியர்கள் முன்வருவது மிகக் குறைவானதால், இலங்கையர்களுக்கு உதவ ஒருவர் முன்வந்திருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அவர், என்னைச் சந்திக்க இணக்கம் தெரிவித்தார்.

ஒரு வாரத்தின் பின்னர் இலங்கை உயர் ஸ்தானிகராலய வளாகத்தில் நாம் சந்தித்தோம். ( அந்த இலங்கையரின் பாதுகாப்பு நலனுக்காக அவரது பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை) ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா மரணமடைவதற்கு முன்னர் தனது நல்ல நண்பராக விளங்கினாரென்று அவர் என்னிடம் கூறினார். அவரைச் சந்தித்த பின்னர் அவரது ஆசீர்வாதத்துடன் நான் அவரை விட்டுப் பிரிந்தேன். என்னை யாராவது பின் தொடரலாமென்று நான் நினைத்தேன். எல்.ரி.ரி.ஈ.யின் லண்டன் வட்டத்துக்குள் என்னால் ஊடுருவ முடியுமாவென்றும் "ஒரு சிறந்த தகவல் வழங்குபவராக" என்னால் விளங்க முடியுமாவென்றும் நான் பரீட்சித்துப் பார்க்கப்பட்டேன். குறிப்பிட்ட புத்தகமொன்றினைப் பெற்றுத் தருமாறும் எனக்கு அறிவுறுத்தப்பட்டது.

நான் நிலத்துக்கடியிலான ரயில் மூலம் ஈஸ்ட்ஹாமை வந்தடைந்தேன். இலக்கம் 211, கத்தரீன் றோட்டிலுள்ள புலிகளின் அலுவலகத்துக்குப் போன் பண்ணினேன். ஸ்டேசனுக்கு அருகே நிற்குமாறு அவர்களிடமிருந்து எனக்குப் பதில் வந்தது. சிறிது நேரத்தின் பின்னர் புலிகளின் அலுவலகத் தலைவர் என்னை அணுகினார். அவர் என்னை அணுகிக் கைகுலுக்கிய பின்னர், கதைப்பதற்காக அருகிலிருந்த கபேக்குச் சென்றோம். எனது உண்மையான தந்தை ஒரு தமிழரென்றும் கடந்த வருடமே அதனை நான் தெரிந்து கொண்டேனென்றும் என்னை எனது தாயாரே வளர்த்து வந்தாரென்றும் அவருக்கு நான் விளங்கப்படுத்தினேன். எனது தமிழ் தொடர்புகளை நான் அறிந்து கொண்டதும், இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் குறித்து நான் கவலைப்பட்டேன். (அது உண்மை. ஆனால் புலிகளுக்காக நான் கவலைப்படவில்லை.) எனது தந்தை முன்னர் பிரிட்டிஷ் இராணுவத்தில் கடமையாற்றியவர் என்றும் அவரது அடிச்சுவட்டைத் தொடர விரும்புகிறேன் என்று கூறி, எல்.ரி.ரி.ஈ.யுடன் இணைந்து செயற்பட விரும்புகிறேனென்றும் கூறினேன்.



ரணசிங்க பிரேமதாசா

எல்.ரி.ரி.ஈ.அலுவலகத் தலைவருக்கு என்னைப் பற்றி நன்மதிப்பு ஏற்பட்டது போல் தெரிந்தது. இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களைப் பற்றி அவர் பேசத் தலைப்பட்டார். மேலும் மேலும் அவர் கூறியதைக் கேட்ட எனக்கு, அவர் பல தடவைகள் பேசிப் பழகி மனப்பாடம் செய்த வசனங்களைத் திரும்பத் திரும்பக் கூறியது போல் பட்டது. மக்களை வென்றெடுப்பதற்கும் புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காகவும் அவர் ஒரே வசனங்களை திரும்பத் திரும்பக் கூறினார். தமிழ் மக்களின் சடலங்களைக் காட்டும் புகைப்படங்களை அவர் எனக்குக் காண்பித்தார். இப்புகைப்படங்களில் ஒன்றாவது ஏன் பிரிட்டிஷ் பத்திரிகையில் வெளிவரவில்லையென்று அவரை நான் கேட்டேன். தேவையேற்பட்டால் புலிகள் இயக்கத்தின் பத்திரிகை அலுவலகத்துக்கு உதவி புரியத் தயாராக இருப்பதாகவும் நான் அவரிடம் கூறினேன்.

பத்திரிகைத் துறையுடன் எனக்குத் தொடர்பு இருந்ததால் சடலங்களின் புகைப்படங்கள் எனக்குத் தரப்பட்டன. ஒரு மணித்தியால சம்பாஷனையின் பின்னர் புலிகளின் இலச்சினை பொறித்த சில புத்தகங்களும் பத்திரிகை அறிக்கைகளும் எனக்குத் தரப்பட்டன. வீடியோக்கள் மற்றும் விபரங்கள் அடங்கிய பொதியொன்று தபால் மூலம் எனக்கு அனுப்பி வைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது. தபால் முகவரி சரியானதா என்பதை கண்டறியவும் படிப்படியாக எனக்கு மூளைச் சலவை செய்யலாமென மதிப்பிடுவதற்காகவுமே இந்த முறைகளை அவர்கள் கையாளுகிறார்கள் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

மறுநாள் லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ் தானிகராலயத்துடன் நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். எனக்குச் சில தகவல்கள் தரப்பட்டமை குறித்தும் சர்வதேசப் பத்திரிகைகளுக்கு புலிகள் நாளாந்த அறிக்கைகளை அனுப்புவதற்கு முன்னர் எனக்கு அனுப்புவார்கள் என்று எனக்குத் தெரிவித்த உறுதிமொழியையும் நான் அவரிடம் தெரிவித்தேன். எல்.ரி.ரி.ஈ.யினர் கூறியது உண்மைதான். மறுநாளே வீடியோ நாடாக்கள், புத்தகங்கள், பத்திரிகை அறிக்கைகளைக் கொண்ட பெரிய பார்சல் ஒன்று எனது விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. நான் அவற்றை உடனடியாகவே இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் இருந்த ராஜதந்திரிக்கு அனுப்பி வைத்தேன். சர்வதேச ஊடகங்களுக்கு எல்.ரி.ரி.ஈ.யினரின் தலைமையகத்திலிருந்து அறிக்கைகள் அனுப்பிவைக்கப்படுவதற்கு முன்பதாக அவை எனக்கு தொலைநகல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. பெயர்கள், கிராமங்கள், நகரங்கள் பற்றிய முதன்மைத் தகவல்களைப் பெறுவதற்கு அந்த அறிக்கைகள் எனக்கு உதவின. வீடியோ நாடாக்கள் மூலம் எல்.ரி.ரி.ஈ.யின் வலுவிடங்களையும் யுத்த உத்திகளையும் அறிந்துகொள்ள முடிந்தது.

இலங்கையிலுள்ள புலிகளின் பகுதிகளுக்கெதிராகப் பாரிய இராணுவ நடவடிக்கையொன்று எடுக்கப்படவிருப்பதாக எனக்குத் தகவல் கிட்டியது. இலங்கை இராஜதந்திரியின் வார்த்தைகளில் சொல்வதானால், "சமாதானத்துக்குக் கொண்டு செல்லக்கூடிய பாரிய தாக்குதல்" என்று கூறப்பட்டது. யுத்தத்துக்கூடாகச் சமாதானம் என்று பெயரிடப்பட்டதாகவும் எனக்குக் கூறப்பட்டது. புலிகளைக் கையாள்வதற்கு இருக்கக்கூடிய ஒரே வழி, பயங்கரவாதத்தைப் பயங்கரவாதத்தால் முறியடிப்பதே என்பதால், யுத்தத்துக்கூடாகச் சமாதானம் என்ற எண்ணக் கருத்தை நான் பெரிதும் விரும்பினேன். அப்போதைய இலங்கை ஜனாதிபதி மக்களுக்கு சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக உண்மையிலேயே முயற்சிகளை மேற்கொள்கிறாரென்றும் அவரால் எல்.ரி.ரி.ஈ.யைச் சரிவரப் புரிந்துகொள்ள முடிந்ததென்றும் நான் உணர்ந்து கொண்டேன். யுத்தத்தைத் தவிர வேறெதிலும் எல்.ரி.ரி.ஈ.க்கு அக்கறையில்லை. அதுதான் அவர்கள் உயிர் வாழவும் செழிக்கவும் உதவுகிறது. சமாதானம் அவர்களது அழிவுக்கே வழிவகுக்கும் என்பதை வரலாறு காட்டும்.

நான் உளவாளியென்பதை மறைத்துக் கொள்வதற்காக, எல்.ரி.ரி.ஈ.யின் அறிக்கைகளைச் செய்திப் பத்திரிகைகளுக்கும் லண்டனிலுள்ள தூதுவராலயங்களுக்கும் அனுப்பிவைத்தேன். பின்னர் கிடைக்கும் பதில்களை இலங்கைப் புலனாய்வுப் பிரிவு அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்தேன். இவற்றின் பதில்களை எல்.ரி.ரி.ஈ.யின் லண்டன் அலுவலகத்துக்கு அனுப்பி வைப்பேன். நான் நல்லமுறையில் பணியாற்றுகிறேனென்று எல்.ரி.ரி.ஈ.க்குக் காட்டுவதற்காகவே இவ்வாறு செய்தேன்.


புலிகள் இயக்கம் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தும் வாராந்தக் கூட்டத்துக்கு ஒரு நாள் நான் அழைக்கப்பட்டேன். லண்டனிலுள்ள புலி முக்கியஸ்தர்கள் திட்டச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கு நடத்தும் கூட்டங்கள் இவை. அதன் பின்னர் புலிகளின் சகல கூட்டங்கள், பேரணிகள், பத்திரிகையாளர் மாநாடுகளுக்கு நான் அழைக்கப்பட்டேன். இதற்குப் பின்னர், தங்களது பெயரில் அறிக்கைகளை எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பி வைக்கும் பொறுப்பையும் எனக்குத் தந்தார்கள். லண்டனிலுள்ள எல்.ரி.ரி.ஈ. அலுவலகங்களுக்கு இலங்கையிலிருந்து நாளாந்தம் செய்தி அறிக்கைகள் வந்து கொண்டிருந்தன.

இலங்கை விமானப் படையின் பல விமானங்கள் புலிகளின் விமான எதிர்ப்புப் பீரங்கிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அறிக்கையொன்று கூறியது. இலங்கை விமானப்படை விமானங்கள் ஒரே வான் பாதையிலேயே பறப்பதாகவும், தமது இயக்கத்தவர்கள் அந்தப் பாதைகளில் விமான எதிர்ப்புப் பீரங்கிகளை வைத்திருப்பதாகவும் எல்.ரி.ரி.ஈ.யின் லண்டன் அலுவலகம், ஒரு தடவை தம்பட்டமடித்துக் கொண்டது. நான் இது குறித்து இலங்கைப் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவித்தேன். இதன் பின்னர் விமானப் பயணப் பாதைகள் மாற்றியமைக்கப்பட்டன.

இளவரசர் சார்ள்ஸ் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டபோது, இலங்கையில் அவரது பந்தோபஸ்து வேலைகளைக் கவனிக்கும் பொறுப்பு, எனது மேலதிகாரிகளில் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. விருந்தாளியாக வரும் இராஜதந்திரிகளை பாதுகாக்கும் பணியை அவர் செல்லும் நாட்டுப் பாதுகாப்புப் படைகளே கவனித்துக் கொள்வது சர்வதேச விதிமுறையாகும். சந்தர்ப்பம் கிடைத்தால், புலிகள் இளவரசரைத் தாக்குவார்களாவென்று கண்டறியுமாறு நான் கேட்கப்பட்டேன். அப்படிச் செய்யப் போவதில்லையென்று புலிகளின் லண்டன் அலுவலகம் அறிவித்தது. ஆனால் அவர் வடக்குக் கிழக்குக்கு விஜயம் செய்யாவிட்டால், அது பற்றிப் பரிசீலிப்போமென்றும் புலிகள் இயக்கம் அறிவித்தது.

புலிகளுக்கு ஆயுதங்கள் விற்க முடியுமாவென்று கேட்டு ஒரு தடவை, எல்.ரி.ரி.ஈ. லண்டனிலுள்ள தூதுவராலயங்களை அணுகியது. இதற்குப் பிரதியுபகாரமாக இலங்கையில் தமது பகுதிகளில் கடற்தள வசதி செய்து தருவதாக எல்.ரி.ரி.ஈ. அறிவித்தது. ஒரேயொரு நாடு மட்டும் இதற்குப் பதிலளித்தது. ஆயுதங்கள் விற்பனை செய்யக் கூடிய நமது நாட்டுக் கம்பனியின் பெயரையும் அது குறிப்பிட்டிருந்தது. உடனடியாகவே நான் இது குறித்து இலங்கை உயர் ஸ்தானிகராலயத்திலுள்ள எனது மேலதிகாரிக்கு அறிவித்தேன்.

தொழிற் கட்சியைச் சேர்ந்த ஓர் உள்ளூராட்சிச் சபையின் அங்கத்தவர்கள் குழுவொன்று எல்.ரி.ரி.ஈ. முக்கியஸ்தர்களை ஒரு தடவை விருந்துபசாரத்துக்கு அழைத்திருந்தது. அந்த உள்ளூராட்சிச் சபையின் தலைவர் இறுதியில் உரை நிகழ்த்தினார். புலிகளுக்கு ஆதரவு வழங்குவோமென்றும் அவர்கள் தெரிவித்தனர். இது குறித்த தகவல்களையும் புகைப்படங்களையும் இலங்கைத் தூதுவராலயத்துக்கு அனுப்பி வைத்தேன்.



ராஜீவ் காந்தி

நான் எனது வீட்டிலிருந்தே செயற்பட்டேன். ரயில் மூலம் கத்தரீன் வீதியிலுள்ள எல்.ரி.ரி.ஈ. அலுவலகத்துக்குச் செல்வேன். பின்னர் இலங்கைத் தூதுவராலயத்திலுள்ள எனது மேலதிகாரியைச் சந்திப்பது வழக்கம்.

கண்டியிலுள்ள ஸ்ரீ தலதா மாளிகை தாக்கப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்தன. ஆனால் அன்றைய எல்.ரி.ரி.ஈ.யின் அறிக்கை இது பற்றி எதுவுமே குறிப்பிடாமல் வேறு தகவல்களைத் தெரிவித்திருந்தது. நான் சலிப்படைந்தேன். இந்த அழகான நாட்டின் சமாதானத்துக்காக நான் ஏதாவது செய்ய வேண்டுமென்று எனக்குப் பட்டது. இப்போது நான் யுத்தத்துக்கு உதவும் ஒரு தரப்பாக விளங்குவதை உணர்ந்தேன். இப்போதெல்லாம் எல்.ரி.ரி.ஈ.யினரின் நாளாந்த அறிக்கைகளை இராஜதந்திர வட்டாரங்களுக்கு இரகசியமாக அனுப்பிவைப்பது எனது பணியாக இருந்தது. வெறுமனே இரு தரப்புகளுக்கும் செய்திகளை அனுப்புவதை விடுத்து, சமாதானப் பேச்சுகளுக்காகப் பணியாற்ற விரும்பினேன். இரு வருடங்களின் பின்னர் நான் அதனைச் செய்தேன்.

நான் இப்பொது மிரட்டல்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான, குறிப்பாக கெரில்லாத் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்கான பெரிய உளவு நிறுவனமொன்றின் ஓர் அங்கம். அங்கீகாரமில்லாத, ஆனால் எல்.ரி.ரி.ஈ.யின் 'உத்தியோகபூர்வ' கடிதத் தலைப்பில் தென்னாபிரிக்கர்களுக்கு நான் அனுப்பிய செய்தி சகலவற்றையும் மாற்றியமைத்தது. இரு தரப்பினரும் சம்பந்தப்பட்ட விடயங்களை நான் தொலைநகலில் தென்னாபிரிக்கர்களுக்கு அனுப்பிய செய்தி, நிலைமையைக் கணிசமாக மாற்றியமைத்தது. உண்மையான சமாதானத்துக்குச் சந்தர்ப்பமொன்றினை அது வழங்கியுள்ளதாக நான் கருதுகிறேன்.

இரு தரப்புகளுக்கும் உளவாளியாகப் பணியாற்றும் ஏனைய பலரை விட, எனக்கு இரு தரப்பினருடனும் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு நிறையச் சந்தர்ப்பங்கள் இருந்தன. சண்டையிலீடுபட்டுவரும் இரு தரப்புகளுக்குமிடையில் ஊடுருவித் தகவல் வழங்கும் பாலமாக நான் செயற்பட்டிருக்கிறேன். இதனால் வடக்கிலுள்ள தமிழ் அகதிகளுக்கு அவசர உணவு மற்றும் மருத்துவப் பொருட்களுடன் இரு செஞ்சிலுவைச் சங்கக் கப்பல்களைப் பாதுகாப்பாக அனுப்பி வைப்பதற்கான ஒழுங்குகளை என்னால் செய்ய முடிந்தது. பிரிட்டிஷ் செஞ்சிலுவைச் சங்கத்தில் இலங்கைக்குப் பொறுப்பான அதிகாரியாக விளங்கிய ஜோன் இங்கிலிஷ் என்பவருடன் தொடர்புகொண்டு இதனை என்னால் செய்ய முடிந்தது. இரு தரப்புகளுடனும் எனக்குத் தொடர்பிருந்ததால் எல்.ரி.ரி.ஈ. யினர் இக் கப்பல்களைத் தாக்காமல் தடுக்க முடிந்தது. எனினும் இலங்கை அரசுக்கும், எல்.ரி.ரி.ஈ.க்குமிடையில் சமாதானப் பேச்சுகள் தொடர்பான கூட்டங்களை ஒழுங்கு செய்தபோது, புலிகள் நோர்வேயைத் தவிர வேறெவரையும் விரும்பவில்லையென்பதை அறிந்து கொண்டேன். சமாதானமா? யுத்தமா? என்ற நிலைப்பாட்டில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திய விடயம் இது. எனினும் கதை இத்துடன் முடிந்து விடவில்லை. உலகின் மிக மோசமான பயங்கரவாதக் குழுக்களிலொன்றான எல்.ரி.ரி.ஈ. பற்றி உளவு பார்ப்பதில் இலங்கை புலனாய்வுத் துறையினரிடமிருந்து நான் கற்றுக்கொண்ட பாடங்கள், லண்டனிலுள்ள தீவிரவாத மத குருவான அபூ ஹம்சாவைச் சுற்றிவளைக்க உதவியது.


'இணையத்தளத்தின் யுத்தம்' என்ற எனது அடுத்த நூலில் இஸ்லாமிய மற்றும் இஸ்லாத்துடன் சம்பந்தப்படாத பல பயங்கரவாதக் குழுக்கள் தொடர்பான எனது அனுபவங்கள் வெளியிடப்படும். உதாரணத்துக்கு பிரிட்டிஷ் காமன்ஸ் சபைக்கு புலிகளை அழைத்துச்சென்ற பிரிட்டிஷ் எம்.பி.யின் பெயரும் வெளியிடப்படும்.

*நன்றி :- 'ஆசியன் ட்ரிபியூன்'*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

சென்னை வானொலியில் அந்நாளில் பணிபுரிந்து கொண்டிருந்த திரு. அகிலன் அவர்கள், நான் சென்னை வானொலியில் அடிக்கடி கவிதைகள் வாசிக்க வேண்டுமென்று என்னை வற்புறுத்தி அழைத்தார். திரு.அகிலன் அவர்கள் என் பால்ய நண்பர். அவர் நம்பர் ஐந்து, பட்டாபிராமப் பிள்ளை தெரு, தென்னூர், திருச்சி என்னும் விலாசத்தில்



குடியிருந்தபோதே, ஸ்ரீரங்கத்திலிருந்து ஞாயிறுகளில் அவர் இல்லம் சென்று நான் அளவளாவுதல் உண்டு.

ஆகவே, அவர் என்னிடம் ஒரு நாள் தொலைபேசியில் அன்போடு கடிந்து கொண்டார்.

"வாலி! நீங்க சினிமாவ்ல பாப்புலர் பொயட்டா ஆயிட்டீங்க. ஆனா, அடிப்படையில ஒரு தமிழ்க் கவிஞன் என்கிற முறையில, உங்களுக்கு சில சமூகப் பொறுப்புகள் இருக்கு. நாட்டுல நடக்கிற நல்லது கெட்டதுல, உங்களுக்கு உடன்பாடானவை உடன்பாடாகாதவை- இவை பற்றியெல்லாம் நீங்க நிறையக் கவிதைகள் எழுதணும். வானொலியில் நேயர் விருப்பத்திலயும், தேன் கிண்ணத்திலயும் உங்க பெயர் உச்சரிக்கப்படாத நாளில்லே, இருந்தாலும் காலம் உங்க பெயரை கவிஞர்கள் வரிசையிலே வெச்சுக் கௌரவப்படுத்தணும்னா, நீங்க தனிக்கவிதைகள் நிறையப் பாடணும். அதுக்கு வானொலியப் பயன்படுத்திக்கங்க. வேலைக்குப் போகும் பெண்கள், மருமகளா இருந்து கொண்டு கொத்தடிமையா வாழற பெண்கள், இன்னும் வரதட்சணை, பெண் விடுதலை...இப்படிப் பல விஷயங்களப் பத்தி - புதுக் கவிதையாவோ மரபாவோ நீங்க பாடணும்கறது என் ஆசை. உங்க நேரத்தை அனுசரிச்சு நான் ரிக்கார்டிங்கை வைச்சுக்கிறேன். எப்ப வர்றீங்க, ரேடியோ ஸ்டேஷனுக்கு?"

உடன் பிறந்த சகோதரனைப் போல் இவ்வளவு மெய்யன்பொழுக திரு. அகிலன் அழைத்த போது, என்னால் அதைத் தட்ட இயலவில்லை. அப்போது நான் வானொலியில் வாசித்த சில கவிதைகளை இப்போது வாசகர்கள் முன் வைக்கிறேன்.

'முக்காபுல! முக்காபுலா!' என்று படத்தில் பாட்டெழுதும் எனக்கும், சமூகப் பொறுப்புகளைப் பற்றிய பிரக்ஞை உண்டு என்பதைக் கீழ்கண்ட கவிதைகள் ஓரளவேனும் எடுத்தோதும் என எண்ணுகிறேன்.

பெண்கள் சம்பந்தப்பட்ட மூன்று கவிதைகளைத் தொடர்ச்சியாக வானொலியில் வாசித்தேன். இதோ! முதல் கவிதை:

"அப்பா -
தன்னிடம் இருந்த
இரண்டில் ஒன்றை விற்று...
அக்காளின் திருமணத்தை
முடித்தார்.
அம்மா-
தன்னிடம் இருந்த
இரண்டில் ஒன்றை விற்று...
இன்னொரு அக்காளின்
திருமணத்தை முடித்தாள்.
மூன்றாவது
மகளாகிய நான் மட்டும்...
கல்யாணமாகாமல்
காலமெல்லாம்
கன்னியாக.
என் செய்வது?
என்
கல்யாணத்தை முன்னிட்டு...
அப்பாவும் அம்மாவும்-
தங்களிடம் மீதமுள்ள
இன்னொன்றையும் விற்றால்...
இறந்தே போவார்கள்.
அவர்கள் உயிர் வாழ-
ஆளுக்கொரு சிறுநீரகமாவது
வேண்டாமா?"

மேற்சொன்ன கவிதையை வாசித்தவுடன் ரிக்கார்டிங் அறையிலிருந்து கண்ணாடி வழியாக அகிலனைப் பார்த்தேன். அவர் கண்கள் கலங்கியிருந்தன.

(தொடரும்.......)





---

**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....**

**அது** தெரிந்த நிலையிலும் அவருடைய வீட்டுக்கு அருகாமையிலேயே அவர் சுட்டுக் கொல்லப்படுகின்ற நிகழ்ச்சி எப்படி நிகழ்ந்தது? சீக்கியர்களை நியமிக்கக்கூடாது என்கிற அளவுக்கு உஷாராக இருந்த IB சீக்கியர்கள் நியமிக்கப்பட்ட பிறகு அவர்களின் நடவடிக்கைகளை ஏன் கண்காணிக்கவில்லை? இந்தக் கேள்விக்கெல்லாம் இன்று இல்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள் பதில் கிடைக்குமா என்பதும் சந்தேகமே.

ஆனால் ஒரு விஷயம் மட்டும் சந்தேகத்திற்கு இடமின்றித் தெளிவாகிறது. நம்முடைய தலைவர்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளில் சில குறைபாடுகள் இருக்கவே செய்கின்றன. இந்திரா காந்தி கொலை செய்யப்பட்ட விதம் இதைத் தெளிவுபடுத்திவிட்டது.

இந்திரா காந்தியின் மரணத்திற்குப் பிறகு அப்போது பிரதம மந்திரியாக இருந்த ராஜீவ் காந்திக்கு விசேஷமான பாதுகாப்புகள் அளிக்கப்பட்டு வந்தன. பிரதமர் ராஜீவ் காந்தி பழைய வீட்டைக்காலி செய்துவிட்டு புதிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் அமைந்துள்ள ரேஸ் கோர்ஸ் வீட்டில் குடியேறினார். அந்த வீட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டுமென RAW சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த பாதுகாப்புத் துறை நிபுணர் ஒருவரின் ஆலோசனையைக் கேட்டுப் பெற்றிருந்தனர். புதிய வீட்டில் நிறைய பாதுகாப்புச் சுவர்களும், தடுப்புச் சுவர்களும் கட்டப்பட்டு வந்ததைப் பார்த்த இஸ்ரேல் நிபுணர், இவை மட்டுமே சிறந்த பாதுகாப்பு




ஏற்பாடுகள் ஆகிவிடாது என்கிற கருத்தைத் தெரிவித்தாராம்.

இஸ்ரேல் நாட்டுப் பிரதமர் கிராமப்புறப் பகுதியில் வசிப்பதாகவும் ஒன்றிரண்டு ஆயுத வீரர்களே அவருக்குப் பாதுகாப்பு அளிப்பதாகவும் அந்த நிபுணர் சுட்டிக் காட்டினாராம். அவர் சொன்னதற்கு அப்படியே பொருள் கொண்டு விட முடியாது. அதாவது பலமான பாதுகாப்புச் சுவர்கள் கட்டி அதன் மத்தியில் ஒருவர் இருப்பது மட்டும் அவருக்குப் பாதுகாப்பு ஆகிவிடாது. அவர் வாழ்கின்ற இடத்திற்கு அருகாமையில் கூட வன்முறையாளர்கள் நெருங்காதபடி ஓர் ஏற்பாட்டைச் செய்வது அவசியம் என்ற கருத்தினையே இப்படிச் சொல்லியிருந்தார்.

பிரதமரைச் சுற்றி இருக்கின்றவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான மனிதர்கள் தானா எனத் தெரிந்துகொள்வதும், அவர்கள் பிரதமருக்கு எவ்வளவு வேண்டியவர்களாக இருந்தாலும் அவர்களின் நடவடிக்கையைக் கண்காணிப்பதும் உளவு இலாகாவின் முக்கிய கடமையாகும். பிரதமர் வெளியில் செல்லுகின்றபோது ஆயுதம் தாங்கிய பலர் அவரைச் சுற்றிச் செல்லுவது மட்டும் அவருக்குப் பாதுகாப்பாகி விடாது. முன்னாள் தலைவர்களான அமெரிக்க ஜனாதிபதி ரீகன், பிரிட்டிஷ் பிரதம மந்திரி தாட்சர், க்யூபாவின் அதிபர் ஃபிடல் கெஸ்ட்ரோ ஆகியோருக்கும் மிகக் கடுமையான அளவில் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. ஆனால், அவர்களுக்குப் பாதுகாப்பாக ஆயுதம் தாங்கிய வீரர்கள் ஓரிருவர்தான் இருப்பார்கள். எனினும் சிவிலியன் உடையில் அவர்களோடு வருகின்ற பலர் வெளியே தெரியாமல் ஆயுதங்களை வைத்திருப்பார்கள். கொல்ல வருகின்றவனுக்கு யாரிடம் ஆயுதம் இருக்கிறது என்பது தெரியாது. அதே சமயம் சிவிலியன் உடையில் உள்ளவர்கள் எந்தப் பிரமுகரின் பாதுகாப்புக்கு வருகிறார்களோ அந்தப் பிரமுகரைச் சுற்றி இருக்கின்ற அனைவரையும் கண்காணித்துக் கொண்டே இருப்பார்கள்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---

**1990ஆம் ஆண்டு ஒக்டோபர் 30ஆம் திகதி வடக்கிலிருந்து முஸ்லிம் மக்களை புலிகள் பலவந்தமாக வெளியேற்றிய நாள். 24 மணி நேரத்திற்குள் உடுத்த உடையுடன் – 150 ரூபா பணத்துடன் – உடைமைகளையும், சொத்துக்களையும் விட்டுவிட்டு வெளியேற முஸ்லிம்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அந்தக் கறுப்பு நாளை நினைவுகூரும் முகமாக இக்கவிதையை கவிஞர் யாழுமீர் மர்சூன் எழுதியுள்ளார்.**

என் முகவரி
தொலைந்த
கரி நாள் அது!
உன் முகத்திரை
கிழிக்கப்பட்ட
தினமும் அதுவே!!

உன்
சுயரூபத்தை
நான்கண்டு
கொள்ள
உதவியதும்
அந்நாளே!!



எண்பத்திமூன்றின்
கறுப்பு ஜூலை
போன்றே
தொண்ணூறின்
கறுப்பு ஒக்டோபர்
அது!!!

ஒரு தாய்
மக்களென்றும்
தொப்புள் கொடி
உறவென்றும்
வித விதமாக
வகை வகையாக
வார்த்தை
ஜாலங்களால்
நீயுரைத்த புகழாரம்
புஷ்வாணமான
நாளும் அதே!!

திட்டமிட்டே
எனை நீ
ஓட்டாண்டியாக்கி
அலங்கோலப்படுத்தி
உனை அலங்கரித்தாய்!
ஆடம்பரித்தாய்...!!
அனுபவித்தாய்...!!

பொன்னான
என் வாழ்வை
மண்ணாக்கிய
பாவத்தின் பளுவை
உன் தோள்கள்
சுமந்தாக
வேண்டும்!!

எனை நீ
அடித்திருந்தால்...
வதைத்திருந்தால்...
அதை நான்
தாங்கிக் கொள்வேன்

ஆனால்...
நீயோ என்
இருப்பையல்லவோ
பறித்துக் கொண்டாய்!!

ஏனென்று
எதற்கென்று
தெரியாமல்
நான்பட்ட
துன்பத்தை
நீ அறிவாயா!

என் மண்ணிலிருந்து
நான் விரட்டப்படும்போது
தாயைப் பிரிந்த
கன்று போல்
கதறினேனே...!!
பதறினேனே...!!
கண்ணீரில்
உருகினேனே...!!
உன் காதில் அது
விழவில்லையோ? !

கல்லான உன்
உள்ளத்தில்
கனிவும் ஏது!
காலத்தால்
அழியாத
வரலாறு அது!!!


"அண்ணன்
அடித்தால்
தம்பி சகிப்பான்!"
இருப்பை பறித்தால்...
எவன் பொறுப்பான்!
ஆனாலும்...
பொறுமைகாத்தேன்...
பொறுமை காத்தேன்...
என் பொறுமையும்
உனக்கு சிறுமை
ஆனதோ!

நீ பட்ட துன்பங்களின்
வலி அறிந்தவன்
நான் – உன் தோளோடு
தோளாக நின்றவன்
நான்!!

ஆனால் நீ
நன்றி கொன்றாய்,
நலங்கெட வைத்தாய்
எனை!!

மெலியாரை
வலியார் மிதித்தால்...
வலியாரை
யார் மிதிப்பார்!?
இறுதியில்
உன்னிடமொன்று...

ஒருமுறையேனும்
உன்னை நீ
சுய ஆய்வு
செய்து பார்!!
என் ஆதங்கத்தில்
உள்ள நியாயத்தை
அப்போது நீ
அறிந்து கொள்வாய்!!



# இலங்கைக்கு கச்சதீவு ‘தானம்’!
# எதிர்ப்பை மீறி மத்திய அரசு ஒப்பந்தம்!!

தமிழ்நாடு அரசின் வேண்டுகோளைப் புறக்கணித்து, இலங்கைக்கு கச்சதீவை மத்திய அரசு தானம் கொடுத்தது.

### கச்சதீவு


தமிழகத்திற்கும், இலங்கைக்கும் இடையில் உள்ளது கச்சதீவு. ராமேஸ்வரத்தில் இருந்து 12 மைல் தூரத்திலும், இலங்கையில் இருந்து 13 மைல் தூரத்திலும் இது அமைந்துள்ளது.

### இலங்கை உரிமை கொண்டாடியது

முன்பு இந்தத் தீவு ராமநாதபுரம் ராஜாவின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்தது. ஆனால், இது தங்களுக்கே சொந்தம் என்று இலங்கை உரிமை கொண்டாடியது. முன்னாள் இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா டெல்லி வந்திருந்த போது, பிரதமர் இந்திரா காந்தியுடன் இதுபற்றி பேச்சு நடத்தினார். கச்சதீவு பிரச்சினையில் உடன்பாடு காண்பது என்று அப்போது தீர்மானிக்கப்பட்டது.

### தமிழக அரசு எதிர்ப்பு

“கச்சதீவு தமிழ்நாட்டுக்கே சொந்தம். அதை இலங்கைக்கு தரக்கூடாது” என்று தமிழக அரசு வலியுறுத்தியது. முதல் - அமைச்சர் கருணாநிதி, பிரதமர் இந்திரா காந்தியை சந்தித்த போது, இதை வலியுறுத்தினார்.


முதல்வர் கருணாநிதி


### இலங்கைக்கு ‘தானம்’

ஆனாலும் கச்சதீவை இலங்கைக்குக் கொடுப்பது என்று, மத்திய அரசு முடிவு செய்தது. இதுபற்றிய அதிகாரபூர்வ அறிவிப்பு 28.06.1974 அன்று டெல்லியிலும், இலங்கையிலும் ஒரே நேரத்தில் வெளியிடப்பட்டது. இதற்கான ஒப்பந்தத்தில், பிரதமர் இந்திரா காந்தி கையெழுத்திட்டார்.

### 280 ஏக்கர் நிலப்பரப்பு

கச்சதீவு 280 ஏக்கர் பரப்புள்ளது. கிழக்கு மேற்காக ஒரு மைல் நீளமும், தெற்கு வடக்காக அரை மைல் அகலமும் உள்ளது. அங்கு கிறிஸ்தவ கோவில் ஒன்று இருக்கிறது. ஆண்டுதோறும் கச்சதீவில் திருவிழா நடைபெறும்போது, இந்தியாவில் இருந்தும், இலங்கையில் இருந்தும் கிறிஸ்தவர்கள் படகுகளில் செல்வார்கள்.

இரு தேசங்களையும் சேர்ந்த மீனவர்களும் கச்சதீவுக்கு சென்று மீன் பிடிப்பது உண்டு. அங்கு சற்று ஓய்வு எடுத்து, மீன் வலைகளைக் காய வைப்பது உண்டு. கச்சதீவில் குடி தண்ணீர் இல்லை என்பதால், அங்கு மக்கள் நிரந்தரமாகத் தங்குவதில்லை.




### ராஜா கண்ணீர்!

கச்சதீவு தானம் கொடுக்கப்பட்டது பற்றி ராமநாதபுரம் ராஜா ராம சேதுபதி, நிருபர்களிடம் கூறுகையில், “மத்திய சர்க்காரின் முடிவு துக்ககரமானது. கண்ணீர் விட்டு அழுவது தவிர வேறு வழி இல்லை” என்று கூறினார்.

தமிழரசு கழக தலைவர் ம.பொ.சிவஞானம் கூறியதாவது :-

கச்சதீவு தமிழ்நாட்டுக்கே சொந்தமானது. இலங்கைக்கு அதன் மீது பாத்தியதை கிடையாது. சரியாகச் சொன்னால் தமிழகத்தின் ஒரு பகுதியாகவே அதனைக் கருத வேண்டும். இலங்கைக்கு அதனை வழங்கியது, சர்வதேச அரசியலில் இந்தியா பலவீனமாக உள்ளதையே காட்டுகிறது.

தமிழகம் இந்திய அரசால் எவ்வளவு அலட்சியமாக நடத்தப்படுகிறது என்பதற்கு, இதுவும் ஒரு எடுத்துக்காட்டாகும். மத்திய அரசின் முடிவை மாற்ற முடிகிறதோ இல்லையோ, அதனை எதிர்ப்பதன் மூலம் தன்னுடைய தன்மான உணர்வை தமிழகம் வெளிப்படுத்த வேண்டும்.

மேலும் எதையும் சொல்வதற்கு முன்பு தமிழக அரசின் கருத்து அறிய காத்து இருக்கிறேன். இவ்வாறு ம.பொ.சிவஞானம் கூறினார்.

பிரதமர் இந்திரா காந்திக்கு தந்தி ஒன்றையும் அனுப்பினார்.

### கருணாநிதி கடிதம்

முன்னதாக “கச்சதீவு பிரச்சினை பற்றி உங்கள் கருத்து என்ன?” என்று பிரதமர் இந்திரா காந்தி எழுதிய கடிதத்துக்கு 1974 ஜனவரி 6ஆம் திகதி (அதாவது 6 மாதங்களுக்கு முன்பு) முதல் - அமைச்சர் கருணாநிதி பதில் எழுதினார்.

### அந்தக் கடித விவரம் வருமாறு

கச்சதீவு பிரச்சினை குறித்து வெளிநாட்டு இலாகா செயலாளர் கேவல்சிங் என்னுடன் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து, எனது இலாகா அதிகாரிகள் கச்சதீவு பற்றிய ஆதாரங்களைச் சேகரித்தார்கள். கச்சதீவு, இலங்கை அரசுக்கு உட்பட்ட தீவாக ஒருபோதும் இருந்ததில்லை என்று நிரூபிப்பதற்குத் தேவையான ஏராளமான ஆதாரங்கள் கிடைத்து உள்ளன.

நெதர்லாந்து நாட்டு மன்னருக்கும் - கேன்டி அரசருக்கும் இடையே 14.2.1766இல் ஏற்பட்ட ஒப்பந்தம், டச்சு நாட்டிடம் இருந்த கடற்கரைப் பகுதிகள் இங்கிலாந்து அரசுக்கு மாற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தம், 17.3.176இல் ஜான் சுரூடர் என்பவர் எழுதிய நினைவுக் குறிப்புகள், டச்சு, போர்த்துகீசிய மன்னர் காலத்து வரை படங்கள் ஆகிய எல்லாக் குறிப்புகளும் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்பதைக் காட்டவில்லை.

1954ஆம் ஆண்டு வெளியான இலங்கையின் வரைபடத்திலும் (மேப்) கச்சதீவு இலங்கையின் ஒரு பகுதியாக குறிக்கப்படவில்லை.

### ராமநாதபுரம் ராஜா

நெடுங்காலமாக தமிழ்நாட்டு கடற்கரைப் பகுதியில் முத்துக் குளித்தல், சங்கு எடுப்பு ஆகிய உரிமைகள் ராமநாதபுரம் ராஜா உள்பட தென் இந்திய மன்னர்களுக்கே உரித்தானது என்பதை வரலாற்று ஆதாரங்கள் காட்டுகின்றன.

கச்சதீவுக்குச் செல்லும் பாதையிலும், கச்சதீவின் மேற் பகுதிக் கரை ஓரத்திலும் சங்கு எடுக்கும் உரிமை ராமநாதபுரம் ராஜாவுக்கு இருந்தது என்பதைக் காட்ட ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அங்கு சங்கு எடுத்ததற்காக, அவர் எந்தக் காலத்திலும் இலங்கை அரசுக்குக் கப்பம் கட்டியது இல்லை.

### நிரூபிக்க முடியும்

இப்போத கிடைத்து இருக்கும் இந்த ஆதாரங்களைக் கொண்டு கச்சதீவு, இந்தியாவின் ஒரு பகுதிதான் என்பதை எந்த அகில உலக கோர்ட்டிலும் எடுத்துக்கூறி நிரூபிக்க முடியும் என்று சென்னை சட்டக் கல்லூரியின் ஆராய்ச்சிப் பிரிவு கருத்து தெரிவித்து இருக்கிறது.

எனவே, இலங்கை பிரதமர் இந்தியாவுக்கு வரும்பொழுது இந்த ஆதாரங்களை எடுத்துக்காட்டி கச்சதீவு இலங்கைக்கு சொந்தமல்ல என்று நிரூபிக்க முடியும் என்று எண்ணுகின்றேன்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் கருணாநிதி குறிப்பிட்டிருந்தார்.

### காங்கிரசில் குழப்பம்

கச்சதீவு தானம் வழங்கப்பட்ட விவகாரத்தில் தமிழக காங்கிரசாரிடையே பிளவு ஏற்பட்டது. மத்திய அரசின் முடிவுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ராமையா, முன்னாள் முதல் - மந்திரி பக்தவச்சலம் ஆகியோர் ஆதரவு தெரிவித்தனர்.

ஆனால் சட்டசபை இ.காங்கிரஸ் தலைவரான ஏ.ஆர்.மாரிமுத்து, முதல் - அமைச்சர் கூட்டிய அனைத்துக் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு கச்சதீவை இலங்கைக்குக் கொடுக்கக்கூடாது என்ற தீர்மானத்தில் கையெழுத்துப் போட்டார். இதேபோல் மேல் - சபை இ.காங்கிரஸ் உறுப்பினர் ஆறுமுகசாமியும், தீர்மானத்தை ஆதரித்து கையெழுத்திட்டார்.

### அனைத்துக் கட்சி கூட்டம்

கச்சதீவை இலங்கைக்கு மத்திய அரசு தானம் செய்தது பற்றி விவாதிக்க அனைத்துக் கட்சி கூட்டத்தை முதல் - அமைச்சர் கருணாநிதி கூட்டினார்.

இந்தக் கூட்டத்தில் பொன்னப்ப நாடார் (ப.காங்கிரஸ்), ஏ.ஆர்.மாரிமுத்து (இ.காங்கிரஸ்), திருப்பூர் மொய்தீன் (முஸ்லிம் லீக்), அரங்கநாயகம் (அ.தி.மு.க.) வெங்கடசாமி (சுதந்திரா), ஈ.எஸ்.தியாகராஜன் (தமிழரசுக் கழகம்), ஏ.ஆர்.பெருமாள் (பார்வர்டு பிளாக்), மணலி கந்தசாமி (தமிழ்நாடு கம்யூனிஸ்டு), ம.பொ.சிவஞானம் (தமிழரசு), ஜி.சாமிநாதன் (சுதந்திரா), அப்துல் வகாப் (முஸ்லிம் லீக்), ஆறுமுகசாமி (இ.காங்), சக்தி மோகன் (பா.பிளாக்), ஏ.ஆர்.தாமோதரன் (ஐக்கிய கட்சி) ஆகியோர் கலந்து கொண்டார்கள்

வ.கம்யூனிஸ்டு பிரதிநிதிகள் யாரும் கலந்து கொள்ளவில்லை. எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சி (உழைப்பாளர் கட்சி வந்த கார், வழியில் பழுதடைந்ததால் கூட்டத்துக்கு அவரால் வரமுடியவில்லை. ஆயினும் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை ஆதரிப்பதாக அவர் தெரிவித்து இருந்தார்.

தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன் அ.தி.மு.க.பிரதிநிதி வெளிநடப்புச் செய்தார்.

### தீர்மானம்

**கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான வாசகம் வருமாறு :-**

“இந்தியாவுக்குச் சொந்தமானது என்று நாம் கருதுவதும், தமிழ்நாட்டுக்கு நெருக்கமான உரிமை கொண்டதுமான கச்சதீவு பிரச்சினையில் மத்திய அரசு எடுத்துள்ள முடிவை இந்தக் கூட்டம் விவாதித்து, தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, மத்திய அரசு இதனை மறு பரிசீலனை செய்து கச்சதீவின் மீது இந்தியாவுக்கு அரசு உரிமை இருக்கும் வகையில் ஒப்பந்தத்தை திருத்தி அமைத்து தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறது”

மேற்கண்டவாறு தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது.

### இந்திரா காந்திக்கு

அனைத்துக் கட்சித் தலைவர் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானம், பிரதமர் இந்திரா காந்திக்கு அனுப்பி வைக்கப்படும் என்று முதல் அமைச்சர் கருணாநிதி நிருபர்களிடம் கூறினார்.

### அவர் மேலும் சொன்னதாவது

“கூட்டத்துக்கு வந்திருந்த எல்லாக் கட்சித் தலைவர்களும் தீர்மானத்தில் கையெழுத்துப் போட்டு ஒப்புதல் தெரிவித்து இருக்கிறார்கள். அ.தி.மு.க. பிரதிநிதி தீர்மானத்தில் கையெழுத்துப் போட மறுத்துவிட்டு போய்விட்டார். கச்சதீவு பிரச்சினையில் தமிழ்நாடு அரசு ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று தீர்மானம் போடும்படி அவர் சொன்னார். அது ஏற்றுக்கொள்ளப்படாததால், வெளியேறினார்.


இந்திரா காந்தியுடன் திருமதி பண்டாரநாயக்கா

இ.காங்கிரஸ் உள்பட எல்லாக் கட்சிக்காரர்களும் கொடுத்த திருத்தங்களை ஏற்றுத்தான் இந்த தீர்மானம் முடிவு பெற்று இருக்கிறது.

இவ்வாறு கருணாநிதி கூறினார்.

### வழக்கு


கச்சதீவை இலங்கைக்கு கொடுப்பதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்படும் என்று ஜனசங்க தலைவர் வாஜ்பாய் அறிவித்தார். அதன்படி தமிழ்நாடு ஜனசங்க செயலாளர் கே.கிருஷ்ணமூர்த்தி வழக்குத் தொடர்ந்தார்.



பிணிகளுக்கு மாற்றுண்டு, – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி !
பேதமைக்கு மாற்றில்லை, – எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி !

– சுப்பிரமணிய பாரதியார்

# தலைவிதி!



**மணலூர்** என்ற கிராமத்தில் பிச்சைக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் இறைவனுடன் பூமியை உலா வந்தனர் தேவதூதர்கள். அப்போது இந்த பிச்சைக்காரனைக் கண்டதும் அவன் மீது இரக்கப்பட்டு அவனுக்கு உதவும்படி இறைவனைக் கூறினர் தேவதூதர்கள். அதற்கு இறைவன், "அவன் தலைவிதி பிச்சையெடுப்பது; உங்களால் அதை மாற்ற முடியாது," என்றார் கடவுள்.

ஏன் மாற்றமுடியாது? அவனுக்கு நாங்கள் உதவி செய்வோம் என்றனர் தேவதூதர்கள். அவன் தினமும் பிச்சை எடுத்து முடிந்தவுடன் ஊர் எல்லையில் மண்டபம் போகும் வழியில் ஒரு பணமுடிப்பைப் போட்டனர். பிச்சைக்காரன் வந்து கொண்டிருந்தான். திடீரென அவனுக்கொரு யோசனை தோன்றியது. பார்வை இருக்கும்போதே இத்தனை கஷ்டப்படுகிறோமே...குருடனாகி விட்டால் என்ன செய்வோம்? என நினைத்து ஒத்திகை பார்க்க எண்ணி கண்களை மூடிக் கொண்டு கோலின் உதவியோடு நடந்தான். பணப்பைக்கு அப்புறமும் இப்புறமுமாக காலை வைத்துத் தாண்டி பத்து அடி வந்த பிறகு விழிகளைத் திறந்தான்.

பரவாயில்லை... நமக்கு பார்வை தெரியாவிட்டாலும் சமாளித்துக் கொள்வோம் என்று திருப்திப்பட்டுக் கொண்டான்.

சிறிது நேரத்திற்குப் பின் அந்த வழியே ஒரு பணக்காரர் மாட்டு வண்டியில் வந்தார். பணப்பை கிடக்கும் இடத்துக்குச் சிறிது முன்னால் வந்ததும், நடேசா வண்டியை நிறுத்து...உட்கார்ந்து கொண்டே வந்ததால் எனக்கு ரொம்ப கால் வலிக்குது. சிறிது தூரம் காலார நடக்கிறேன் என்றவர் இறங்கி நடந்தார். அவர் பார்வையில் பணப்பை தென்பட்டது. எடுத்துப் பார்த்தவர் பூரித்துப் போனார். என் தகப்பனார் செய்த தான, தர்மங்கள் எனக்கு மீண்டும் கிடைத்துள்ளது என்று சொல்லியடி வண்டிக்குத் திரும்பி விட்டார். திடுக்கிட்டனர் தேவதூதர்கள்.

இறைவா! இந்த ஏழைக்கு உதவ நினைத்தோம். இப்படி செய்துட்டானே...ஏன் பணக்காரனுக்கே பணம் சேருது? என்றனர் கவலையுடன்.

விதியினால்தான் இப்படி ஆயிற்று. அவன் காலமெல்லாம் பிச்சைக்காரனாகத்தான் இருக்க வேண்டும் என்பது அவனது தலைவிதி, என்றார் இறைவன்.

இது என்ன அநியாயம்? என்றனர் தேவ தூதர்கள்.

இந்தப் பிச்சைக்காரனின் மூதாதையர்கள் மிகவும் பணக்காரர்களாக இருந்தனர். அதனால் நிறைய ஏழை மக்களைச் சுரண்டி, அநியாயம் செய்து சொத்து சேர்த்தனர். அந்த ஏழைகள் விட்ட சாபத்தினால் அந்தப் பணக்காரனின் சந்ததியில் வந்த இவன், பிச்சைக்காரனாகி தங்கள் மூதாதையரில் ஏழு தலைமுறையினர் வரை செய்த பாவத்தை இவன் சுமக்கிறான்.

ஆனால், அந்தப் பணக்காரனின் மூதாதையர் மிகுந்த சாதாரண வசதியுடையவர்களாக இருந்தும் கூட தான, தர்மங்கள் செய்து நல்லதையே தலை முறை தலைமுறையாக செய்து வந்ததால் அந்தப் புண்ணியத்தில் இவன் இப்போது பணக்காரனாக இருக்கிறான். இப்போதும் இந்தப் பணம் இவனுக்கு கிடைக்க வேண்டும் என்பது இவன் தலையில் எழுதியுள்ள விதி. இந்தப் பணத்தைக் கொண்டு இவன் நல்லதைச் செய்து புண்ணியத்தைச் சேர்த்து வைத்தால் இவன் சந்ததியினர் மேலும், மேலும் சிறப்பாக வாழ்வர்.

அப்படி இல்லாமல் பணம் கிடைத்த மமதையில் இவன் பாவம் செய்து அக்கிரமம் செய்ய ஆரம்பித்தால் இவனது சந்ததியினரும் பிச்சை எடுக்க நேரிடலாம். இவை எல்லாமே என்னுடைய திருவிளையாடல்கள்தான் என்றார் இறைவன்.

தங்கள் அறியாமையை எண்ணி தலை குனிந்தனர் தேவதூதர்கள்.

பாப்பா முரசு சிறுகதை

# ஆத்திசூடி

## சக்கர நெறி நில்

**நீ வாழும் நாட்டின் அரசு வகுக்கும் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு அதற்கு அமைய நட.**

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

# கல்வி - கலையில் சிறந்திடுவீர்!

சின்னஞ் சிறிய பிள்ளைகளே!
சிறிய நல்ல முல்லைகளே!
காலை வேளையில் எழுந்திடுவீர்!
கனிவாய் மொழிகள் பகன்றிடுவீர்!
மாலை வெயிலில் மகிழ்ந்திடுவீர்!
மயங்கும் போதினில் கற்றிடுவீர்!
பெரியோர் தன்னைப்
போற்றிடுவீர்!
பெரிய காரியங்கள் ஆற்றிடுவீர்!
சிறியோர் செய்யும் செயல்களிலே
சிறப்புகள் செய்து உவந்திடுவீர்!
பெரியோர் சிறியோர் என்பதெல்லாம்




அவரவர் ஆற்றும் பணிகளிலே
சிறியோர் பெரியோர்
ஆவதெல்லாம்
சிறியோர் பெரியோர் குணமதிலே
நாடுகள் பலவும் அறிந்திடுவீர்!
நட்பு தன்னைப் பேணிடுவீர்!
நாடும் பேறுகள் பெற்றிடுவீர்!
நாட மட்டும் மறந்திடாதீர்!
நாடு மொழியும் கடந்திடுவீர்!
நாட்டை மட்டும் மறந்திடாதீர்!
காடு மலைகள் கடந்திடுவீர்!
கல்வி கலையில் சிறந்திடுவீர்!

# அதிசய உலகம்


## பாலூட்டியின் பல் பத்தடி!

**ஒரு** பாலூட்டியின் பல் 10 அடி நீளத்திற்கு வளர்கிறது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா?...நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும்.



ஆம், கடலில் வாழும் பாலூட்டி விலங்கான நர்வால் என்னும் திமிங்கலத்திற்குத்தான் இப்படி பல் வளர்கிறது. பொதுவாக இந்த இன திமிங்கலத்திற்கு மேல்தாடையில் இரண்டு பற்கள் உண்டு. ஆனால் ஆண் நர்வால் திமிங்கலத்திற்கு மட்டும் அந்த இரண்டு பற்களில் ஒன்று 10 அடி வரை வளர்கிறது. இதன் உடல் நீளம் 20 அடி இருக்கும். (இதில் பல்லின் நீளம் கணக்கில் கொள்ளப்படுவதில்லை.)


இந்தப் பல் முறுக்குக் கம்பியைப் போன்ற அமைப்பைக் கொண்டிருக்கிறது. இவை ஆர்க்டிக் வட்டாரப் பகுதியில் மட்டுமேகாணப்படுகின்றன. தற்போது 50 ஆயிரம் வரையிலான நர்வால் திமிங்கலங்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. சுறா மீன்கள், பனிக்கரடிகள் மனிதர்களால் அதிக அளவில் வேட்டையாடப்படுவதால் இவற்றின் எண்ணிக்கை கணிசமாக குறைந்து விட்டது:



இவை கூட்டங்கூட்டமாக வாழும். ஒரு குடும்பத்தில் 4 முதல் 20 வரையிலான நர்வால் திமிலங்கள் இருக்கும். இவை விதவிதமான ஒலிகளை எழுப்பி ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்கின்றன. அபாய எச்சரிக்கைக்கு ஒரு மாதிரியாகவும், வழி காட்டிச் செல்வதற்கு இன்னொரு விதமாகவும் ஜாலியாக சுற்றுவதற்கு புதுவிதமாகவும் ஒலியை எழுப்புகின்றன.

பிறக்கும்போது 80 கிலோ எடை உள்ள நர்வால், முழு வளர்ச்சி பெறும்போது 2 டன் எடை வரை இருக்கின்றன. இவற்றின் ஆயுட் காலம் 50 ஆண்டுகள் ஆகும்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 07.11.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 667**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 665

**பரிசுக்குரியவர்:**
**அன்ஸ்க்கா தர்சனா றோச், ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஜெ. மயூரன், தரம் - 3, தோமஸ் கல்லூரி, பண்டாரவளை. | என். விதுஷன், 32/5, ஹனபொல, மாத்தளை |
| கிரிதரன், கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, முகத்துவாரம், கொழும்பு - 15 | கே. பிரசாந்தி, 89, பாபா பதி இல்லம், ரொசிட்டா வீடமைப்பு திட்டம், கொட்டகலை |
| சாஜிதா நஸார், தரம் 3A, பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு - 12 | வை. பிர்ளா ஜும்லாட், மக்குளூற்று, வெள்ளைமணல். |
| ஜே. பி. சுதர்ஷிலா, 32/2, கோனவல ரோட், திகன, ரஜவெல்ல. | க. ஹரிணி, 19, பன்சல் வீதி, இராகலை. |
| எஸ். பாத்திமா சாஹாமா, 30,03 ஆம் குறுக்கு வீதி, புத்தளம். | ஜெ. திவாரீசன், தரம் 2A, மத்திய கொழும்பு இந்து வித்தியாலயம், கொழும்பு - 13 |


# சில விடுகதைகள்

1. உறவினர் அல்ல ஆனாலும் சட்டென்று ஒட்டிக் கொள்வான் அவன் யார்?
2. நாலு கால் பாய்ச்சல்காரன் நன்றிக்குச் சொந்தக்காரன் அவன் யார்?
3. பார்வைக்கு சிறு கூடு ஆனாலும் எங்கள் அத்தைக்கு அது வீடு அது என்ன?
4. வெடித்து சிதறியவன் வீணாய்ப் போகவில்லை அவன் யார்?
5. இருந்த இடத்தில் இருந்தபடி நாளெல்லாம் ஆட்டம் காவல்துறையைக் கண்டால் மட்டும் ஓட்டம் அது என்ன?
6. கல்லை சுமந்தபடி பந்தலிலே தொங்குதடி பச்சைப்பாம்பு அது என்ன?
7. அவன் சாய்ந்து கிடந்தால் உணவுக்குப்பஞ்சமில்லை அவன் யார்?
8. உதை பட்டவன் உறுமியபடி ஓடுவான் அவன் யார்?
9. ஏங்கி ஏங்கி அழுபவனுக்கு எட்ட இருந்தும் ஆறுதல் சொல்ல முடியலை அது என்ன?
10. வானம் போட்ட மின் விளக்கு வெட்டி வெட்டி எரியும் அது என்ன?

**விடைகள்**
1. பசை
2. நாய்
3. நத்தை
4. இலவம் பஞ்சு
5. சீட்டாட்டம்
6. புடலங்காய்
7. நெற்கதிர்
8. ஸ்கூட்டர்
9. சினிமாக்காட்சி
10. மின்னல்.





## சேதம்



உலகிலேயே மிக அதிக பொருட் சேதத்தை ஏற்படுத்திய மழையுடன் கூடிய புயல், 1984ஆம் ஆண்டு மே மாதம் ஜெர்மனியிலுள்ள மூனிச் நகரில் வீசியது. இதன் போது மழைத்துளிகளை விட ஐஸ்கட்டிகளாகவே மழை பொழிந்தது. வீடுகள், கட்டடங்கள், வாகனங்கள் மரங்களெனப் பலத்த சேதமேற்பட்டது. இப் பொருட் சேதங்களுக்கு 500 மில்லியன் டொலர்கள் காப்புறுதி நஷ்டஈடு கோரப்பட்டது. காப்புறுதி செய்யப்படாத கட்டடங்கள் மற்றும் அரசாங்கச் சொத்துக்களும் சேதமடைந்தன. இவற்றின் சேத மதிப்பீடுகளையும் சேர்த்துப் பார்த்தால் மொத்த நஷ்டம் எவ்வளவு தெரியுமா? ஒரு பில்லியன் டொலர்களென மதிப்பிடப்பட்டது.

## ஓட்டம்



2006ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் திகதி டோகா கட்டாரில் நடைபெற்ற சர்வதேச அமெச்சூர் விளையாட்டுப் போட்டிகளில், ஆண்களுக்கான நூறு மீற்றர்கள் ஓட்டப் போட்டியில் 9.77 செக்கன்களில் ஓடி முடித்துச் சாதனை படைத்தார் ஜஸ்ரின் கற்லின் என்ற அமெரிக்கர். 2005ஆம் ஆண்டு ஜுன் மாதம் 14ஆம் திகதி கிரீஸின் ஏதென்ஸ் நகரில், ஜமெய்க்காவைச் சேர்ந்த அசாபா போவல் என்பவர் ஏற்படுத்திய சாதனையை இவர் சமப்படுத்தினார். அதிவேக ஓட்ட வீராங்கனை என்ற சாதனையை நிகழ்த்தியவர் அமெரிக்காவைச் சேர்ந்த புளோரன்ஸ் கிரிவித் ஜொய்னர். அமெரிக்காவின் இன்டியானாபோலிஸ் என்ற இடத்தில் நடைபெற்ற நூறு மீற்றர் ஓட்டப் போட்டியில் 10.49 செக்கன்களில் ஓடி முடித்துச் சாதனை படைத்தார் இவர்.

## நீண்ட ஆயுள்



உலகிலேயே இன்னமும் உயிருடன் வாழும் ஆகக்கூடிய வயதுடைய மனிதர் பியூட்டோரிக்கோ என்ற லத்தீன் அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர். 1891ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி காபோ ரொஜோ என்ற கிராமத்தில் பிறந்த எமிலியானோ மொர்காடோ டெல் ரொஜோ என்ற பெயர் கொண்ட இந்த மனிதர், கடந்த வருடம் ஜனவரி மாதம் 17ஆம் திகதி மெற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி 113 வருடங்கள் 149 நாட்கள் என்ற வயதுக் கணக்கை எட்டியிருந்தார். உயிர் வாழும் மிகவும் வயது கூடிய மனிதரென்ற சாதனையும் இவரைச் சார்ந்தது. 1918ஆம் ஆண்டு, முதலாவது உலக மகா யுத்த காலத்தின் போது, இவர் அமெரிக்க இராணுவத்தில் சேர்ந்திருந்தார். ஆனால் இரண்டு மாத கால ஆயுதப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தபோது 1918 நவம்பர் பதினோராம் திகதி முதலாவது உலக யுத்தம் முடிவுக்கு வந்தது. இதனால் இவர் போர்க்களத்துக்குச் செல்லவில்லை. இவர் இராணுவச் சேவையிலிருந்து நீக்கப்பட்ட போது வழங்கப்பட்ட காகிதமும் படத்தில் காணப்படுகின்றது.

## நிதி வசூலிப்பு...



புல் பூண்டுகளைச் செதுக்கி, நிலத்தைச் செழுமைப்படுத்தும் தனது வாகனத்தில்(இயந்திரத்தில்) 260 நாட்கள் தொடர்ச்சியாகப் பயணம் செய்து 14,594.5 மைல்களைக் கடந்திருக்கிறார் அமெரிக்காவைச் சேர்ந்த ஹரி கற்றர் என்பவர். தனது முதுகுப்புறத்தில் ஏற்பட்ட காயத்துக்கு அறுவை சிகிச்சை செய்வதற்குத் தேவையான நிதியைச் சேகரிப்பதற்காக அமெரிக்காவின் போர்ட்லாண்ட் என்ற இடத்திலிருந்து 2000ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி தனது பயணத்தை ஆரம்பித்த இவர், நிலத் தொடர்புகளைக் கொண்ட 48 அமெரிக்க மாநிலங்களுக்கூடாகவும், கனடா மற்றும் மெக்ஸிக்கோவூடாகவும், பயணித்து 2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி புளோரிடாவின் டேய்ரோனா கடற்கரையை வந்தடைந்தார். இவர் தனது இயந்திரத்தின் முற்பகுதியில் நான்கு சில்லுகளையும் பின்புறத்தில் மூன்று சில்லுகளையும் இணைத்து மணிக்கு ஒன்பது மைல்கள் வேகத்தில் இவர் பயணம் செய்திருக்கிறார். இதுவே அந்த வாகனத்தில் பயணிக்கக் கூடிய அதிகூடிய வேகமாகும்.



தனுஷ் - ஸ்ரேயா
திருவிளையாடல் ஆரம்பம்

## சுந்தர் .சி - கோபிகா இணையும் 'யாழ்ப்பாண[ம்]'

இயக்குனர் சுந்தர் சி. மீண்டும் மேக்கப் போடுகிறார்! 'ரெண்டு' படத்தில் பிஸியா[க] இருப்பவர் கிடைக்கிற கேப்பில் இளங்கண்ணனுடன் டிஸ்கஷனில் இறங்கிவிடுகிறார். இளங்கண்ணன், அர்ஜுன் நடித்த ஒற்றன் படத்தை இயக்கியவர். சுந்தர் . சி நடிக்கும் புதிய படத்தை இயக்கப் போகிறவர்.

தலைநகரம் படத்தின் விநியோக உரிமையை வாங்கிய ஆஸ்கார் பிலிம்ஸ் ரவிச்சந்திரன் இந்தப் படத்தைத் தயாரிக்கிறார். தலைநகரம் படத்திற்குக் கதாநாயகியை தேடோ தேடென்று தேடி கடைசியில் குஷ்புவின் ரெகமன்டேஷனில் சுந்தர். சி.க்கு ஜோடியானார் ஜோதிர்மயி. இந்த முறை சுந்தர் சி.யுடன் சேர்ந்து நடிக்கப் போகிறவர் கோபிகா!

புதிய படத்தில் பொலிஸ் அதிகாரியாக வருகிறார். புலனாய்வு செய்யப் போகிறார் என்றெல்லாம் சுந்தர் . சி.யின் கேரக்டர் பற்றி ஏகப்பட்ட பில்டப்புகள். அதற்கேற்ற மாதிரி படத்துக்கு 'யாழ்ப்பாணம்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

'ரெண்டு' படம் அடுத்த மாதம் இறுதியில் திரைக்கு வருகிறது. அதையடுத்து டிசம்பரில் யாழ்ப்பாணம் படத்தின் ஷூட்டிங். யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே 'கன்' ஷூட்டிங் நடப்பதால் இந்த யாழ்ப்பாணத்தில் எதை ஷூட் செய்யப் போகிறார்கள் என எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள் கோடம்பாக்கத்தில்!



ஆர்யா - கீரத்
வட்டாரம்

## பட்டாசு வெடிக்கிறது பாவனாவின் பேச்சில்!

**♥சொந்தப்பெயரே பாவனாவா?**

எக்ஸ்பிரஷன்....பாவனை!

நான் நிச்சயம் நடிக்கப் போறேன்னு அப்பவே தெரிஞ்சு வெச்ச பேர் மாதிரி. அவ்வளவு பொருத்தமா அமைஞ்ச பேர்!

**♥நல்ல படங்களை மட்டுமே தேர்ந்தெடுக்கிறீங்க. எப்படி அந்த வித்தையைக் கத்துக்கிட்டீங்க?**

அதிர்ஷ்டம் தான்.

மலையாளத்தில் பாவனாவுக்குன்னு கதை எழுத ஆள் இருக்காங்க. ஆனா, தமிழில் எனக்கு நல்ல நல்ல படங்கள் அமைவது அதிர்ஷ்டம். எனக்கு இங்கே கமல் சார் ரொம்பப் பிடிக்கும். மூன்றாம் பிறை, நாயகன், தேவர் மகன், மகாநதின்னு அவரோட பெஸ்ட் படங்கள் எல்லாமே பார்த்திருக்கேன். கமல் சாருடன் ஒரு படம் பண்ணினால், அது ஆக்ஸ்போர்ட் யுனிவர்சிட்டியில் பாடம் கத்துக்கிற மாதிரியாமே.

எனக்குப் பிடிச்ச ஹீரோயின்னா, அது ஸ்ரீதேவி மட்டும்தான். அவங்க இப்போ சினிமாவில் இல்லேன்னாலும், தேங்க்ஸ் டு டி.வி. அவங்க படங்கள், பாடல்கள்னு பார்த்துட்டே இருக்கேன்.

**♥கிளாமர் செஞ்சாதான் இருக்க முடியும்னு ஒரு நிலைமை வந்தால் என்ன பண்ணுவீங்க?**

திருச்சூருக்கு டிக்கெட் எடுக்க வேண்டியதுதான். வாம்மா!ன்னு அம்மாவைக் கூட்டிக்கிட்டு. இதுதான் நான் கொடுக்கிற கடைசிப் பேட்டின்னு சொல்லிவிட்டு ஓடிடுவேன்!

**♥ஜாலியா ஹாலிடே கிடைச்சா, எங்கே போவீங்க?**

எகிப்து, எனக்குச் சின்ன வயசிலிருந்தே பிரமிடுகள் மேல ஒரு கண்ணு. ரொம்ப ஆசை பார்க்கணும்னு யாராவது அங்கே ஷூட்டிங் வெக்கிறேன்னு சொன்னால், உடனே கால்ஷீட்!

திடீரென்று எஸ்.எம்.எஸ்.இல் யாராவது ஐ லவ் யூ சொன்னால் என்ன பண்ணுவீங்க?

ஹலோ, என் செல்போன் எப்பவுமே என் அம்மாவிடம் தான் இருக்கும்! என்கிறார் பட்டாசு பாவனா.




அர்ஜூன் - மல்லிகா கபூர்
வாத்தியார்

## சினி
## தங்கர்பச்சானை வெளியேற்றிய குஷ்பு -சுடச்சுட பெரியார் நியூஸ்

பெரியார் படத்தில் நடித்தே தீருவே[ன்] என்று பிடிவாதம் பிடித்த குஷ்புவின் ஆசை ஒரு வழியாக நிறைவேறியுள்ள[து]. பெரியாரில் மணியம்மை கதாபாத்திரத்தில் நடிப்பதற்காக சத்யராஜும் இயக்குனர் ஞானசேகரனும் தே[ர்வு] செய்தது குஷ்புவை.

ஆனால் அந்த படத்திற்கு ஒளிப்பதிவு செய்யும் தங்கர்பச்சான் இதற்கு ஆட்சே[பம்] தெரிவித்தார். கடந்த சில மாதங்களுக்கு முன் குஷ்புவுக்கும் - தங்கர்பச்சானுக்கும் இடையே நிகழ்ந்த விவாதப் போர்தான் இதற்குக் காரணம்.

இருப்பினும் குஷ்புவை மணியம்மையாக நடிக்க வைப்பதில் தீவிரமாக இருந்தார் சத்யராஜ். இதன் பின்னணியில் பழைய பாசம் இருப்பது தனிக் கதை என்றாலும், சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவித்தது என்னவோ தங்கர்தான்.

இந்நிலையில் பெரியாரில் குஷ்பு நடிப்பது சில நாட்களுக்கு முன் முடிவாக, குஷ்பு நடிக்கும் காட்சி பகுதிகளுக்கு மட்டும் ஒளிப்பதிவு செய்வதில்லை என்று முடிவெடுத்தார் தங்கர்.

அதன்படி தற்காலிகமாக பெரியார் படத்திலிருந்து வெளியேறியிருக்கிறார் தங்கர்பச்சான். அவருக்குப் பதிலாக மணியம்மை சம்பந்தப்பட்ட காட்சிகளுக்கு ராஜ்குமார் ஒளிப்பதிவு செய்கிறார்.

## என் கவுண்டர் அதிகாரியாக மாதவன்!



எஸ். ஜே. சூர்யா
வியாபாரி

'திமிரு' படத்தை இயக்கியவர் தருண் கோபி. இப்படம் 86 தியேட்டர்களில் 50 நாட்கள் ஓடியது. 72 தியேட்டர்களில் இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறது. தருண் கோபி அடுத்து 'அகராதி' என்ற பெயரில் புதிய படம் இயக்குகிறார். ஜி.வி.பிலிம்ஸ் இப்படத்தை தயாரிக்கிறது.

மாதவன் இதில் கதாநாயகனாக நடிக்கிறார். என் கவுண்டர் அதிகாரியாக அவர் வருகிறார். யுவன்சங்கர்ராஜா இசையமைக்கிறார்.

இப்படத்துக்கு பின் 'நீ ஓட நான் துரத்த' என்ற பெயரிலும் இன்னொரு படம் இயக்குகிறார். லட்சுமி மூவி மேக்கர்ஸ் இப்படத்தைத் தயாரிக்கிறது.

தெலுங்குப் படமொன்றையும் தருண் கோபி இயக்குகிறார். இப்படத்துக்கு ஐதராபாத்தில் இருந்து கடப்பா வரை என்று பெயரிட்டுள்ளனர். திமிரு படத்தை தெலுங்கில் பொகரு என்ற பெயரில் டப்பிங் செய்து வெளியிட்டுள்ளனர். 120 தியேட்டர்களில் இப்படம் ரிலீஸாகியுள்ளது.



# டி.ராஜேந்தர் பக்திப் பாடல்


டைரக்டர் விஜயடி.ராஜேந்தர் இஸ்லாமிய பக்திப் பாடல்கள் பாடி வெளியிட்டுள்ளார். ரம்ஸான் பண்டிகையையொட்டி அருள் தரும் அல்லா என்ற பெயரில் இந்தப் பாடல் கெசட் வெளியாகிறது. இதிலுள்ள 8 பாடல்களில் 3 பாடல்களை டி.ராஜேந்தர் இசையமைத்துப் பாடியுள்ளார். குறள் மீடியா டெக் என்ற பெயரில் ஆடியோ நிறுவனம் தொடங்கி, அதன் மூலம் இந்த கெசட்டுகளை வெளியிடுகிறார். டி.ராஜேந்தர் டைரக்ட் செய்து நடித்துள்ள வீராசாமி படத்தின் கெசட்டுகளையும் இந்த நிறுவனம் மூலம் வெளியிடுகிறார்.



மாதவன் ரீமாசென்
ரெண்டு



# ரஜினியை மிஸ் பண்ணினேன் - ஐஸ்வர்யாராய் வருத்தம்



ஸ்ரேயா

சென்னை பார்க் ஷெரட்டன் ஹோட்டலின் லாயிட்ஸ் ஹால்... நூற்றுகணக்கான கண்கள் மொய்த்துக் கொண்டிருக்க, அங்கு தரிசனம் தந்து கொண்டிருந்தார் ஐஸ்வர்யாராய்.

'குரு' படப்பிடிப்புக்காக மதுரை வந்துவிட்டு மும்பை திரும்பும் வழியில் ஒரு நிகழ்ச்சிக்காக சென்னைக்கு விசிட் அடித்திருந்தார்.

கிடைத்த அவகாசத்தில் சில கேள்விகளை கேட்க, பந்தா இல்லாமல் பதிலுரைத்தது ஐஸ்ஸின் உதடுகள்.

தமிழ் இண்டஸ்ட்ரி மீது எனக்கு நல்ல மரியாதை இருக்கு. மணி சார் (மணிரத்னம்), ஷங்கர் சாருன்னு பிரமாதமான இயக்குனர்களும், டெக்னீஷியன்களும் இருக்குற பீல்டு இது.

தமிழ் சினிமாவில் தொடர்ந்து நடிக்கணும்னு ஆசைப்படுறேன். பட் டைம் இல்லை. சிவாஜி படத்துலகூட நடிக்க கூப்பிட்டாங்க. அப்போ டேட் இல்லை. ஒரு பாட்டுக்காவது ஆடுங்கன்னு ஷங்கர் சொன்னார். அதையும் பண்ண முடியலை.

சூப்பர் ஸ்டார் ரஜினியுடன் ஜோடியாக நடிக்க எனக்கும் ஆசை இருக்கு. அதற்கான சந்தர்ப்பம் அமையாததால அவருடன் நடிக்கும் வாய்ப்பை மிஸ் பண்ணிட்டேன் என உச் கொட்டும்போதுகூட ஐஸ் நைஸ்.

# சிம்பு- நயன்தாரா முத்தக்காட்சி தவறல்ல!

## -கீர்த்திசாவ்லா சொல்கிறார்

ஆழ்வார் படத்தில் அஜீத்குமார் ஜோடியாக நடிப்பவர் கீர்த்தி சாவ்லா. இவர் நகரியில் உள்ள அம்மன் கோவிலில் ராகுகால பூஜை நடத்தினார். பின்னர் 60 ஏழைப் பெண்களுக்கு இலவச சேலை வழங்கினார். அங்கு புதிதாக கட்டப்படும் விநாயகர் கோவிலுக்கு ரூபா 5 ஆயிரம் நன்கொடையும் வழங்கினார்.

பின்னர் கீர்த்தி சாவ்லா நிருபர்களிடம் கூறியதாவது :-

தமிழில் அர்ஜுனுடன் நடித்த 'ஆணை' தான் என் முதல் படம். தெலுங்கில் ஜூனியர் என்.டி.ஆருடன் நடித்த ஆதி படம் 200 நாட்கள் ஓடியது. இதுவரை 10 படங்களில் நடித்துள்ளேன்.

நான் நடிப்பு பயிற்சி பெற்று சினிமாவுக்கு வந்தேன். ஸ்ரீதேவியின் ரசிகை நான். டைரக்டர் மணிரத்னத்தைப் பிடிக்கும்.

முத்த காட்சியில் நடிக்க நான் தயங்க மாட்டேன். கதைக்கு தேவையென்றால் உதட்டோடு உதடு பொருத்தி முத்தம் கொடுத்து நடிக்கத் தயாராக இருக்கிறேன்.

வல்லவன் படத்தில் சிம்புவும் நயன்தாராவும் முத்தக் காட்சியில் நடித்தது தவறல்ல. அவர்கள் முத்தம் கொடுத்த போஸ்டர்களை சிலர் கிழித்து எதிர்ப்பு தெரிவித்தது சரியல்ல. கதைக்குத் தேவைப் பட்டால் அது மாதிரி காட்சியில் அவர்கள் நடித்தனர். இவ்வாறு கீர்த்தி சாவ்லா கூறினார்.

## வி சி ட்

ம்பாவின்
அவதாரம்


ஒரு காலத்தில் தமிழ் சினிமா ரசிகர்களைத் தன் தொடையழகால் தன்வசப்படுத்தி வைத்திருந்த ... தயாரிப்பாளர் அவதாரம் எடுத்து ... படத்தை சொந்தமாகத் தயாரித்து ... ஆனார்.

இதன் மூலம் தொடைத்தட்டி(காட்டி) ... சேர்த்த பணமெல்லாம் தொலைந்துபோக ... இருந்த அம்மணிக்கு சொந்த ... ஆந்திராவும் அபயம் அளிக்கவில்லை. ... சென்னை இல்லத்தை காலி செய்துகொண்டு, ... போய் உடம்பை ஒத்த பாட்டுக்கு குலுக்கிய ... பாச்சா அங்கும் பலிக்கவில்லை.

அதனால் பல்லை இளித்துக்கொண்டு ... யாரோ ஒரு புண்ணியவான் போஜ்புரி மொழியில் வாய்ப்பு இருப்பதாக ... அழைத்துப்போக, வாய் பிளந்தவர் வந்த வாய்ப்பை லயக்கிக்கொண்டு போஜ்புரி மொழி ... கலக்கிவருகிறார். இந்த முறையாவது தொடைத் தட்டியும், காட்டியும், ஆட்டியும் சம்பா... துட்டை மீண்டும் படம் காட்டுகிறேன்... ...கிறேன்... தயாரிக்கிறேன்... என்று விட்டுவிடாதிருந்தால் ...



- அசின்
போக்கிரி



விசால் - மம்தா மோகன்தாஸ்
சிவப்பதிகாரம்



# தேன் கிண்ணம்

## கன்னிகாதானத்துக்கான கவிதை

தேநீர்க்கலவை உதடுகளின்
தீர்த்தக்கரை
புனித நீராடுகின்றது.
செவ்வானத்தின்
சிம்மசொப்பனக் கனவு
விழித்தாரகையில்
சிந்திய தீ
உடன் கட்டை ஏறுகின்றேன்
உயிர் நீத்த நினைவுகளுடன்.

மோவாய் தடவிப்போவாய் நீ
சாவால் புகுந்து -
சதா என் வாய்
இரவுப் பாடகனை
விருந்தழைக்கின்ற
இம்சை தாங்கொண்ணா

பொசுங்கிய நாற்றத்தில்
முகம் சுளிக்கின்ற
மூக்கின் துவாரச்சாலையில்
கால்நடைப் பயணம்
செல்ல மாட்டாயா நீ?
கஸ்தூரி பற்றியதொரு
கவிதை கேட்கின்றார்கள்
என்னிடம் இப்போதெல்லாருமே.

வியூகம் வகுத்து
பூக்களின் இதற்களத்தில்
போர் புரிய
முஸ்தீபுகள் எழுதும்
முரட்டு வண்ணாத்திகளின்
சமிபாட்டுத்தொகுதி
இனிச்செரிக்காதென்னை.

நெடுகிலும் நிழல் பரப்பி
நடக்கின்றாய் நீ
நரகத்து வெயிலில் உழல்கிறேன்
நான்.

சூனிய ராச்சியத்தின்
சனிப்பெயர்ச்சியில்
செவ்வாய் தோஷம் செல்லாதே
சாபங்கள் வளர்த்த
தபோவனத்தில்
சந்நியாசியின் பிரார்த்தனை.

முதிர்க்கன்னிகளின்
உப்புக்கரிக்கும் சுடுநீர்
முற்றத்து வெளியில்
பொங்கிப் பிரவகித்து
எனை விழுங்கி ஏப்பமிடுகின்றது.

செத்துக் கொண்டே ஏகிய
சித்தப்பிரமை
மூர்ச்சித்துக் கொண்டே
மரண மோட்சத்தின் பிரபந்தம்.

தொலைவிலே இருந்து கொண்டு
எப்படியுன்னால் முடிகின்றது
நிம்மதியா
தொல்காப்பியம் படிக்க.

*-கிண்ணியா சபருள்ளா,*
*கிண்ணியா - 06.*

## கனவுக் கணைகள்

கருமை நிறைந்த
என்
ராத்திரிப் பொழுதுகளை
அலங்கரிக்கும்
ரகசியக் கனவென
என் துன்பத்துலாபாரத்தில்
நீ முகிழ்வாய்...

காடடர்ந்த பயங்களை
நடுக்க நுகர்வுகள்
பட்டைத் தீட்டிக்கொண்டு
நகம் கீறிப்போகலாம்...

குருதி உறைந்து...
சீழ் கட்டி...
இருளைச்
சொட்டிக்கொண்டிருக்கும்
என் அந்தரங்க பயம்

உயிர் பயமற்றுப்போய்
ஊனப்பட்டதான கனவு...
ஆந்தைக் குரலில்
அலறிக்கொண்டிருக்கும்
உன் வடிவில்...

தலை தட்டும்
விழுது பயத்தில்
விறைப்புகள் தளர்ந்தெழும்...
தடுமாறும்...
உறங்கிய உணர்வுகள்
கலைந்து காலிடறிவிடும்
நீ அழைத்ததாய்...

ஆயினும் இதுவரை
உன்னையன்றி
ஒரு கனவு
உளற வைத்தோ
உறக்கம் கலைத்தோ
போனதேயில்லை...!

*-பெரியசாமி விக்னேஸ்வரன்,*
*ஹட்டன்.*

## தாய்

மனித உயிர்க் கருவை
தன் கருவறையில் தாங்கி
பத்துத் திங்கள் சுமந்திருந்து
பக்குவமாய்ப் பாதுகாத்து
உடல் வளர்த்து
உயிர் கொடுத்து
வேதனையின் எல்லைதொட்டு
வாழ்வா? சாவா?
எதுவரினும் ஏற்று
அவனிதனில் சிசு ஒன்றை
தவழ விட்டவள் தாய்!

தீர்க்கதரிசிகள், ஞானிகள்,
விண் அளந்த அறிஞர்கள்,
அறிவுலக மேதைகள்,
சன்மார்க்கப் பெரியார்கள்,
வீரர்கள், வித்துவான்கள்,
வல்லோர்கள், நல்லோர்கள் -
என
உலக உயர்வுக்காய்
ஈன்று தந்தவள் தாய்!
தான் பெற்ற சேய்க்காக
மெழுகுவர்த்தியாய் உருகியவளே!

சந்தோஷ உந்துதலால்
உன் மென் மிகு அடிவயிற்றில்
பாதங்களால் நான் உதைத்த
வலிமை மிகு உதைகள்
நீ தாங்கியதெப்படி?
உன் உதிரத்தைப் பாலாக்கி
நான் உயர வாழ்ந்தவளே!
அன்னையே அருள்வடிவே!!

ஜென்மங்கள் எத்தனை
எடுத்திட்ட போதிலும்
தாயே உன் கடனை
தீர்த்திட முடியாது.
தாயே! எமக்காக நீ பட்ட
அரும்பாடுதனை எழுத
எழுதுகோல் எத்தனை
இருந்தாலும் போதாதே!

தாயின் பாதத்தடியில் சுவர்க்கம்
நவின்றார் நபிகளார்!
அந்த மாதரசி மலரடி
தினம் தொட்டுத் தொழுவோம்
நாம் பட்டகடனை
கண்ணீரால் கழுவுவோம்.

*-கர்பிட்டி*
*வஹாப்.*

## அழகு இராஜ்யம் நீ!

நிலவின் பால் புழுதிகள்
பொறுக்கி நீ!
உருவாக்கப்பட்டாயா?

முத்துக்களைச் சீவி எடுத்து
உனக்கு யார்
நகம் செய்தது?

இருந்தாலும் பனித்துளிகளை
உன் விழிகளில்
தூவிவிட்டிருக்கக் கூடாது.

பல்லாயிரம் மின்னல்களுக்கு
கறுப்புத் தடவி...
ஏன் நீ கூந்தல் என
முடித்துவைத்துள்ளாய்?

இரத்தினக் கற்கள் துருவி,
கரும்புச் சார் வடித்து
பாரிஜாதப் பூவில்
பிரட்டி எடுத்து
எதற்காக...
நெஞ்சு வளர்த்தாய்?

விலங்கினமற்ற
அன்னப்பட்சியென்று
உனக்கு!
அங்கீகாரம்
குத்தி விட்டால்
அழகாய் இருக்கும்.

என்னதான் ஆடையால்
மூடினாலும்
அத்தனை அழகும்
ஒழுகிவிடும்
ஒரு புன்னகையில் மட்டும்.

ஒரே ஒரு தடவை
கால் கழுவித் தா...
குடித்துத் தொலைக்கிறேன்:
மோட்ஷமாவது கிடைக்கும்.

*-து.செல்வகுமார்,*
*தர்காநகர்.*

## விரைவில் வரட்டும் தீர்வு!

தீர்ந்த பாடில்லை
இனப்பிரச்சினை
ஓய்ந்தபாடில்லை
யுத்தப் பேரலை!

நடந்த பாடில்லை
பேச்சுவார்த்தை
நலிந்த பாடில்லை
உயரும் பொருள் விலை!

நின்ற பாடில்லை
நித்தம் கொலைகள்
நிறுத்தவில்லை
தொடரும் கொள்ளை!

முடிந்த பாடில்லை
அகதிப் பிரச்சினை
முடிவுக்கு வரவில்லை
அமைதி எல்லை!

நிற்கவில்லை
கடத்தல் நாடகம்
நிமிரவில்லை
இயல்பு வாழ்க்கை!

நிம்மதி இல்லை
நிதமும் தொல்லை

எம் மதத்தவரும்
சம்மதம் சொல்ல
ஏற்புடைத் தீர்வொன்று
விரைவில் வரட்டும்!

*-கவிக்குயிலன்,*
*சேனையூர்.*

## உறைவிடம்!

**மண்ணுக்காக**
**ஆயுதங்கள் முழங்க,**
**மனித உரிமைக்கு**
**ஐ.நா.க்கள் முழங்க**
**ஓயாத யுத்தத்தில்**
**உயிர்கள் மடிய**
**உறைகளுக்குள்**
**உறைவிடங்களோடு**
**ஊர் ஊராய்**
**நாங்கள்!**

*-எம்.சண்முகராஜா,*
*கொழும்பு - 11.*

## செல்லக் கவிதைகள்!

பால்ய கால நண்பன்...
நீண்ட நாள் பிரிவு...
சந்தித்த வேளை
நினைவில் வந்தன
திருப்பித் தராத கடன்கள்!

நான் சிகரெட் வாங்கினேன்.
பற்றவைத்தாள் தங்கை
அப்பாவிடம்.

ஆங்கிலம் பேசலுக்கான
ஒருநாள் வகுப்புகள்.
நேர்முகப் பரீட்சை.

சாப்பாட்டிற்கே
தாளம் போட்டவனும்
சாப்பாட்டில்
தாளம் போடுகிறான்.
கொத்துரொட்டியிடும்போது!

வியர்த்துப் போனேன் நான்
விசிறிகளுக்குள் சிக்கி.

*-மெய்யன் நட்ராஜ்,*
*டோஹா - கட்டார்.*

## உனக்காக

மூங்கில் காட்டையே அழித்து
ஒரே ஒரு புல்லாங்குழல் செய்தேன் -
உனக்காக!
ஊதும் போதுதான் தெரிந்தது -
அது ஊமை என்று!

பிரிவுகளைப் பிரசவித்தாய்
எரிவுகளை ஏற்படுத்தினாய் - இதனால்
இன்று எனக்குள்ளே
நெருப்புக் கோளம்!

கோளமும் ஓர் நாள்
சிக்குண்டு சிதறக் கூடும்
அப்போது நீயறிவாய்
என் பிரிவைப் பற்றி!

அந்நொடி வருமுன் - நீ
ஒரு முறையாவது சொல்வாயா
உனக்காக நான் என்று?

*-எஸ்.நிஸ்பியா,*
*சாய்ந்தமருது - 17.*

# மக்களே மக்களை ஆளவேண்டும்!

**மக்களே மக்களை ஆள வேண்டும்! தேர்தல்கள் என்றாலே ஊழல், மோசடி, வன்முறை, ஏமாற்று என்றாகிவிட்டது. இதற்குக் காரணம், தேர்தல்கள் பற்றிய போதிய அறிவின்மையும், மக்கள் மத்தியிலிருக்கும் நம்பிக்கையீனமுமாகும். இன்னொரு காரணம், மக்களே மக்களை ஆளுகின்ற வாய்ப்பை காலங்காலமாக மோசடிக் கும்பல்களிடம் தாரைவார்த்து விட்டதுமே ஆகும்.**

'கூட்டத்தில் கூடி நின்று
கூவிப் பிதற்றலின்றி
நாட்டத்திற் கொள்ளாரடி - கிளியே
நாளில் மறப்பாரடி.'

என விடுதலைக்கு முன்பே பாடினார் மகாகவி பாரதி. அரை நூற்றாண்டு தாண்டியும் நமக்கு இன்னும் அடிமை மனோபாவம் மாறவேயில்லை. கண்ணுக்கு முன் அநியாயம் நடக்கும்: கூட்டமாகக் கூடி நின்று கூவிப் பிதற்றுவோம். ஆனால், அந்த அநியாயத்தைத் திருத்த வேண்டும் என்கிற எண்ணமே நமக்கு வராது. மறுநாளே, அதை மறந்துவிட்டு வேறொரு இடத்தில் வேறொரு விஷயத்துக்காகக் கூடிப் பிதற்றிக் கொண்டு இருப்போம். இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் இப்படியே இருக்கப் போகிறோம்?



இதோ, உள்ளாட்சித் தேர்தல் நெருங்குகிறது. நாம் வரி கட்டுகிற ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்ற மக்கள் சேவை அமைப்பைத் தலைமை ஏற்று நடத்துகிற அதிகாரத்தை, பொறுப்பை யாருக்கு வழங்குவது என்று முடிவெடுக்கும் நேரம் இது.

குப்பை எடுக்க ஆள் வருவதில்லை, குடிநீர் வரவில்லை, சாலை வசதி இல்லை, தெரு விளக்கு எரிவதில்லை, பிறப்பு - இறப்புச் சான்றிதழ் வாங்க இலஞ்சம் கேட்கிறார்கள்.... இப்படி ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு, ஆளுக்கு ஆள் எத்தனை எத்தனை குற்றச்சாட்டுகள்! ஆனால், நம்மில் 100-க்கு 45 பேர் கூட வாக்குச் சாவடிக்கு வந்து ஓட்டுப்போடுகிற கடமையைச் செய்வதில்லை. நாடாளுமன்ற, உள்ளாட்சித் தேர்தல்களை நாம் எங்கே மதிக்கப் போகிறோம்?

வாக்குரிமை இருக்கும் குடிமக்கள், உள்ளாட்சித் தேர்தல் பற்றிய அடிப்படைகளை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். 'உங்களுக்கு முடிவு எடுக்கிற தகுதி இல்லை. அதனால், நாங்கள் சொல்வதை மட்டும் கேளுங்கள்' என்று உங்கள் வீட்டுக்குள் நுழைந்து யாரேனும் சொன்னால், அனுமதிப்பீர்களா? 'நாடு காப்பதற்கே உனக்கு ஞானம் சிறிதும் உண்டோ?' என்று நம்மைப் பார்த்து அரசியல் கட்சிகள் கேட்பது நமக்கு அவமானம் இல்லையா? 'உங்கள் பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சித் தலைவர்களை உங்களால் தேர்ந்தெடுக்க முடியாது. அதனால் உங்களை ஆள்வதற்கு எங்கள் கட்சி சார்பில் யாரையாவது நாங்கள் அனுப்புகிறோம்.' என்று அவர்கள் சொன்ன பிறகும், நமக்கு ரோஷம் வரவில்லை என்றால் எப்படி?

மக்களே ஆளுகிற ஆட்சி முறைக்குப் பெயர்தான் மக்களாட்சி. ஆனால், மக்களை ஆட்சி செய்வதை மக்களாட்சி என்று அர்த்தப்படுத்திக்கொண்டு விட்டோம். நம்மை நாமே ஆளுகிற பக்குவம் உள்ளாட்சித் தேர்தலில் இருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். 'எங்கள் தெருவில் விளக்கு இல்லை, நல்ல சாலை இல்லை' என்று மனுக்களை எழுதி, யாரிடமோ கையேந்தி நிற்பதற்கு நம்முடைய தெருவை, பகுதியை நாமே ஏன் பார்த்துக்கொள்ள முடியாது? மக்கள் மன்னராக மாறக் கூடிய அற்புதமான வாய்ப்பை வழங்குவதுதான் உள்ளாட்சித் தேர்தல். ஆனால், நாம் ஏதோ ஓர் அரசியல் கட்சியின் பிரதிநிதிக்கு ஓட்டுப்போட்டு விட்டு, மனுக்களைத் தூக்கிக் கொண்டு காலமெல்லாம் அவர்கள் பின்னால் திரிந்துகொண்டு இருக்கிறோம்.

மாநில சுயாட்சி வேண்டும் என்கிற உரிமையைப் போலவேதான், உள் சுய ஆட்சி வேண்டும் என்கிற உரிமையும், சுயமரியாதையை அடிப்படையாகக் கொண்டது.

வேலைவாய்ப்பு, கல்வி, மருத்துவம் போன்ற பல்வேறு காரணங்களுக்காக நகரத்தை நோக்கிப் படையெடுக்கும் நம் கிராம மக்களைக் காப்பாற்ற ஒரே வழி, நம்மில் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கிற இந்த உள்ளாட்சித் தேர்தல்தான். 'அரசாங்கம் திட்டம் போடும். மக்கள் அதன் மூலம் பயன் அடைவார்கள்.' என்கிற மனோபாவம் மாற வேண்டும். மக்கள் தங்களுக்கான திட்டத்தை ஊழலற்ற முறையில் தாங்களே போட்டுச் செயல்படுத்தும் வண்ணம் அவர்களே பிரதிநிதிகளாக மாறவேண்டும். மாற்றங்களைப் பிறரிடமிருந்து மட்டுமே எதிர்பார்க்காமல், தன்னிடமிருந்தே தொடங்க வேண்டும்.


ஒவ்வொரு பகுதியிலும் இந்த முறை பின்பற்றப்பட்டால், நம்முடைய 90 சதவிகித பிரச்சனைகளை நம்மால் முடிவுக்குக் கொண்டுவந்துவிட முடியும். அரசியல் மாநாடுகள் நடத்தி, கட்சியின் சின்னத்தை அறிமுகப்படுத்தி, கோடிக்கணக்கில் செலவு செய்துதான் நமக்கான மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்கிற அவசியமே இல்லை. நம் பகுதியில் இருப்பவர்களிலேயே ஒரு நல்லவரை அடையாளம் கண்டு, அவரை மக்கள் வேட்பாளராக்கி ஓட்டுப் போட்டால், ஐந்து ஆண்டுகள் நம் தலையெழுத்தை நாமே மாற்றி எழுதிவிட முடியும். இந்த வாய்ப்பைத் தவறவிட்டால், மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு 'அடிதடி ரகளையில் ஈடுபடும் நம் மாண்புமிகு கட்சிப் பிரதிநிதிகளின் பின்னால் மனுக்களோடு திரிவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

விழிப்பு உணர்வு என்பது சின்ன நெருப்பு. அதன் வீரியத்தை பாரதியின் வார்த்தைகள்தான் விளக்க முடியும்.


*'அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை*
*அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்!*
*வெந்து தணிந்தது காடு - தழல் வீரத்தில்*
*குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ!'*

நன்றி ஆ. வி.

# பேனா நண்பர் பகுதி - பேனா நண்பர் பகுதி



பெயர் : முகமது றிஸ்பான்
வயது : -
முகவரி : வேலுவன வீதி, தெமட்டகொட, கொழும்பு - 09
பொழுதுபோக்கு : வழமையானவை.



பெயர் : ச. மகேஸ்வரன்
வயது : 19
முகவரி : சல்லித் தீவு வீதி, பனிச்சங்கேணி, வாகரை.
பொழுதுபோக்கு : வழமையானவை.

# கவலையைப் போக்கும் கடலைப் பருப்பு 'பேக்'!

என்னதான் குளித்து முடித்து உற்சாகமாக வந்தாலும் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் எண்ணெய் வழிந்து டல்லாகி விடுகிறீர்களா? உங்களின் துயரையும் எண்ணெயையும் சேர்த்தே துடைக்கிறது இந்தக் கடலைப் பருப்பு பேக்...

தோலுடன் இருக்கும் கடலைப்பருப்பு அரை கிலோ, துளசி இலை 50 கிராம், வேப்பங் கொழுந்து 5 கிராம்...இவற்றை நிழலில் உலர்த்தி, நன்றாக அரைத்துக் கொள்ளுங்கள். இதனுடன் இரண்டு துளி எலுமிச்சைச் சாறு சேர்த்து முகத்துக்கு பேக் போட்டு ஐந்து நிமிடம் கழித்து வெதுவெதுப்பான தண்ணீரால் முகத்தைக் கழுவுங்கள்.

வாரம் இருமுறை இதைச் செய்து வந்தால், பளபளவென்று முகம் பிரகாசிக்கும்.

எண்ணெய் வடிகிற முகம் என்றாலே, பருக்களின் தொந்தரவும் இருக்கும். பரு தொல்லையால் அவதிப்படுகிறவர்களுக்குக் கடலைப் பருப்பில் அட்டகாசமான சிகிச்சை இருக்கிறது.

கடலைப் பருப்பு 1 தேக்கரண்டி, ஒரு மிளகு இவற்றை எடுத்து ஒரு தேக்கரண்டி பாலில் ஊறவையுங்கள். இதனுடன் கால் தேக்கரண்டி முல்தானி மட்டி பவுடரைச் சேர்த்து கலக்குங்கள். பிறகு இதை முகத்தில் பேக் ஆகப் போட்டு, உலர்ந்ததும் அலசுங்கள். பருக்கள் இருக்கும் இடத்தில் மட்டும்



அவற்றை மூடுவது போல் கொஞ்சம் அதிகமாகப் பூச வேண்டும்.

தொடர்ந்து இப்படிச் செய்து வாருங்கள்...பருக்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும்.

முகம், உள்ளங்கை, அக்குள் என்று வியர்வை படியும் இடங்களில் பூசிக் குளிப்பதற்கென்றே அசத்தலான வாசனை வைத்தியம் இருக்கிறது கடலைப் பருப்பில்.

கடலைப் பருப்பு அரைக் கிலோ, துண்டங்களாக்கிய வெட்டிவேர் 10 கிராம், கிழங்கு மஞ்சள் 10 கிராம்...இந்த மூன்றையும் மிஷினில் கொடுத்து நைசாக அரைத்துக்கொள்ளுங்கள். இந்தப் பொடியை தண்ணீர் விட்டு பேஸ்ட்டாக்கி, தினமும் மஞ்சள் தேய்த்துக் குளிப்பதுபோல், உடம்பு முழுவதும் பூசிக் குளித்து வர, வியர்வைத் தொல்லை இனி இல்லை என்ற சந்தோஷ சிறகடிக்கலாம்.

தலை கசகசவென வியர்த்துக் கொட்டி, கூந்தல் எப்போதும் பிசுபிசுப்புடன் மங்கலாகவே இருக்கிறதா? பளபளக்கிற ஹேர் ஸ்டைலுக்கெல்லாம் நாம் கொடுத்துவைக்கவில்லை என்று கவலைப்பட்டது போதும். உங்களுக்கே, உங்களுக்கான சிறப்பு கடலைப் பருப்பு சிகிச்சை இதோ...

கடலைப் பருப்பு அரைக் கிலோ, வெட்டி வேர் 10 கிராம், உலர்ந்த செம்பருத்திப்பூ 200 கிராம், இந்த மூன்றையும் நன்றாக அரைத்துக் கொள்ளுங்கள். இந்தப் பவுடருடன் கற்றாழை ஜெல்லைக் குழைத்து, தலையின் எல்லாப் பாகங்களிலும் படும்படி பேக் ஆகப் போடுங்கள். பத்து நிமிடம் கழித்து, தலையை நன்றாகத் தேய்த்து நிறைய தண்ணீர் விட்டு அலசுங்கள்.

இதை வாரம் இரு முறை செய்து வந்தால், பிசுபிசுப்பு நீங்கி, கூந்தல் பளபளக்கும்.

உச்சந் தலை, முன்பகுதி, வகிடு போன்ற தலையாய ஏரியாக்களில் முடி உதிர்ந்து மண்டையோடு பலருக்கு வெளியே தெரியும். வயதை சற்றே அதிகரித்துக் காட்டுகிற இந்தத் தோற்றத்தை யார்தான் விரும்புவார்கள்? இந்தப் பிரச்சினைக்கும் தீர்வு இருக்கிறது, கடலைப் பருப்பிடம்!

கடலைப் பருப்பு 2 தேக்கரண்டி, கசகசா அரை தேக்கரண்டி, கொட்டை எடுத்த புங்கங்கொட்டை தோல் 3, வெங்காயச்சாறு 1 தேக்கரண்டி அல்லது 3 சின்ன வெங்காயம்...இவற்றை தண்ணீரில் அரை மணி நேரம் ஊற வைத்து



அரைத்துக் கொள்ளுங்கள். முடி உதிர்ந்த பகுதிகளில் இந்த விழுதை வைத்து 15 நிமிடம் நன்றாக மசாஜ் செய்து, பிறகு அலசுங்கள்.

வாரம் இரு முறை இப்படிச் செய்து வர, முடி உதிர்வது நின்று கொட்டிய இடத்தில் திரும்பவும் முடி முளைக்கும்.

தேமலும் கரும்புள்ளிகளும் அழகைக் கெடுக்கும் அரக்கர்கள்! இவர்களை விரட்டியடிக்கவும் வழி வைத்திருக்கிறது கடலைப் பருப்பு.

கடலை மா 1 தேக்கரண்டி, பசு மஞ்சள் விழுது 1 தேக்கரண்டி, தேன் 1 துளி, எலுமிச்சைச்சாறு 4 துளி - இவற்றை பேஸ்ட் போலாக்கி, தேமல் உள்ள பகுதியில் பூசி, அரை மணி நேரம் கழித்து அலசுங்கள்.

இப்படிச் செய்து வந்தால் கரும்புள்ளியும் தேமலும் இருந்த தடம் கூடத் தெரியாமல் தேகம் மின்ன, "யார் இந்த தேவதை?" என்று ரகசியம் பேசுவார் உங்களவர்.

கழுத்தைச் சுற்றிலும் சிலருக்கு கறுப்புக் கறுப்பாக வளையம் விழுந்து கவலை வளையத்தை ஏற்படுத்திவிடும். இதற்கான தீர்வு:

கடலைப் பருப்பு கால் கிலோ, பார்லி கால் கிலோ - இரண்டையும் தனித்தனியே அரைத்து வையுங்கள். இரண்டிலிருந்தும் ஒவ்வொரு தேக்கரண்டி எடுத்து, அதனுடன் பொடியாக்கிய பச்சை கற்பூரத்தை கடுகளவும், முல்தானி மட்டியை 1 சிட்டிகையும் சேர்த்து, கழுத்தைச் சுற்றிப் பூசி, காய்ந்ததும் அலசுங்கள்.

தினமும் இதைச் செய்து வர, கழுத்து வரிகள் காணாமல் போய்விடும்.

# லேடிஸ் ஸ்பெஷல்

## கொடி இடை வேண்டுமா?

**இளம்** பெண்கள் பலர் கன்னாபின்னாவென்று சாப்பிட்டு உடல் பருமனால் அலங்கோலமாய்க் காட்சியளிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் உடல் எடைக் குறைப்புக்காக நவீன சிகிச்சை, மெஷினில் உடற்பயிற்சி என்று ஆயிரக்கணக்கில் செலவு செய்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் இனி செலவே செய்யாமல் கொடியிடை பெறலாம்.

**அதற்கான சிறு சிறு பயிற்சிகள் இதோ...**



கச்சிதமான உடலுடன் இருக்க விரும்பும் பெண்களுக்கு உடலில் அதற்குத் தகுந்த மாதிரி தசை இருப்பது அவசியம். சிறிய தசைகள் மீது போதிய கவனம் செலுத்தினால் உடல் நல்ல வடிவத்தைப் பெறும். இந்தத் தசைகளைச் சுற்றி குறைந்த அளவு கொழுப்பே இருப்பதால் மேக்ரோ ஏரியாக்கள் எனப்படும் தொடை மற்றும் பிட்டங்கள் மீதே நாம் அதிக கவனம் செலுத்துகிறோம்.

ஆனால் மைக்ரோ ஏரியாக்களில் (சிறிய தசைகள்) கவனம் செலுத்துவதன் மூலம் குறைந்த காலத்தில் சிக்கென்ற உடம்பைப் பெற முடியும்.

### தோள் பட்டை பயிற்சி

நல்ல வடிவமான தோள்கள் உங்கள் இடுப்பைச் சிறியதாகக் காட்ட உதவும். இதற்கு மிக எளிதான பயிற்சி ஒன்று உள்ளது. தரையில் கவிழ்ந்து படுத்துக் கொண்டு கைகளைப் பக்கவாட்டில் வைத்துக் கொள்ளுங்கள். கால்களை நீட்டிக் கொள்ளுங்கள். இந்த நிலையில் தலை மற்றும் மார்பை உயர்த்தவும்.

தோள் பட்டையைக் குறுக்கி வயிற்றுத் தசைகளை இறுக்கமாக வைத்துக் கொண்டு நிமிரவும். இந்த நிலையில் ஒன்று முதல் ஆறு வரை எண்ணவும். இந்தப் பயிற்சியை 12 தடவைகள் செய்யவும்.

### முதுகுப் பயிற்சி

வலிமையான முதுகு உங்கள் தோற்றத்தைச் செம்மையாக்கும். உங்களை ஸ்லிம்மாகக் காட்ட உதவும்.

ஒரு நாற்காலியில் உட்கார்ந்து பாதங்களைத் தரையில் பதித்துக் கொள்ளுங்கள்.

அப்படியே முன்புறமாக முதுகை (நிமிர்த்திய நிலையில்) வளைத்து முழங்கால்களின் மீது மார்பு படும் நிலைக்கு வரவும். உங்கள் கைகள் ஒவ்வொன்றிலும் 2 அல்லது 3 கிலோ எடையைப் பிடித்துக் கொண்டு கீழ் புறமாகத் தொங்க விடவும். கைகளை மெல்ல தோளுக்கு இணையாக (பக்கவாட்டில்) உயர்த்தவும். பிறகு மெல்ல கீழிறக்கவும். 8 முதல் 12 தடவை இப்படிச் செய்யவும். இடைவெளி விட்டுவிட்டு இந்தப் பயிற்சியை 3 முறை செய்யவும்.

### வயிற்றுப் பயிற்சி

தட்டையான வயிற்றைப் பெற இந்தப் பயிற்சியைப் பெறவும். தரையில் மல்லாந்து படுக்கவும். பாதம் தரையில் படும்படி இருக்க வேண்டும். கைகளை விட்டம் நோக்கி உயர்த்தும் போது வயிற்றை இறுக்கமாக வைத்திருக்கவும். இடுப்புப் பகுதியிலிருந்து கால்களை உயர்த்தவும். கெண்டைக் கால் தரைக்கு இணையாக இருக்க வேண்டும். முதுகை தட்டையாகத் தரையில் படும்படி வைத்து கைகளை தலையை நோக்கிக் கொண்டு வரவும். இதே சமயத்தில் உங்கள் வலது காலை நீட்டவும்.

ஒரு நிமிடம் இதே நிலையில் இருக்கவும். மீண்டும் பழைய நிலைக்கு வந்து இடது காலை நீட்டவும்.


# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

45

பெயர் : ..................

முகவரி : ..................

..................

..................

தே-அ- அட்டை இல : ..................

கையொப்பம் : ..................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.

மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -45**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
07.11.2006

பரிசுப் போட்டி இல - 43
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

எம். ஏ. நஸீர், இல. 06, றம்லின் மாவத்த, குடாப்பாடு, நீர்கொழும்பு.

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.


# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* —ஷோபா—

## பிரட் குலோப்ஜாமூன்

***தேவையான பொருட்கள் :-***

பிரட் ஸ்லைஸ் - 5 அல்லது 6
பால் - 1 கப்
சர்க்கரை - 1 கப்
தண்ணீர் - 1 கப்
வாசனைக்கு ஏலக்காய்
பிடித்தமான எஸன்ஸ், குங்குமப்பூ.

***செய்முறை :-***

பிரட்டின் ஓரங்களை கட் பண்ணி எடுத்து விட்டு, கைகளினால் நன்றாகப் பிரட்டை பொடித்து, கொஞ்சம் கொஞ்சமாகப் பாலை விட்டுப் பிசைய வேண்டும். கைகளினால் உருட்டும் பதம் வந்ததும் பாலை நிறுத்தி விடவும். நன்கு பிசைந்த பிரட்டை சிறு சிறு உருண்டைகளாக உருட்டி வைக்கவும்.

அடுப்பில் சர்க்கரை, தண்ணீர் இரண்டையும் ஒன்றாகக் கலந்து, ஒரு பாத்திரத்தில் போட்டு சர்க்கரை கரையும் வரை கொதிக்க விடவும். பின்பு இறக்கி வைத்து ஏலப்பொடி, எஸன்ஸ், குங்குமப்பூ போட வேண்டும். வாணலியில் எண்ணெய் ஊற்றி அடுப்பில் வைத்து மிதமான சூட்டில், உருட்டி வைத்த பிரட் உருண்டைகளை எண்ணெயில் போட்டு பொன் நிறமாக வறுத்து உடனே சர்க்கரைப் பாகில் போட வேண்டும். சிறிது நேரம் ஊறிய பிறகு மிகவும் சா.்.ப்டாக இருக்கும். இதை 10 நிமிடத்தில் தயாரித்து விடலாம்.





**அங்கே** இருநூறு பெருவியாதிக்காரர்கள் இருக்கிறார்கள். அங்கே வார்டர்கள் கிடையாது. உடம்பு நன்றாயிருக்கிற எவனும் அங்கே போகமாட்டான். டாக்டர் கூடக் கிடையாது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு படகு அங்கே போகிறது இருபத்துநாலு மணி நேரத்துக்குத் தேவையான உணவுகளை எடுத்துக் கொண்டு. சமைக்காத உணவு. நோயாளிகளுக்காக எவரும் அந்தத் தீவில் கால் வைப்பது கிடையாது. பெருவியாதிக்காரர்கள், தாங்களாகவே வைக்கோலைக் கொண்டு சிறிய குடிசைகள் கட்டிக்கொண்டு வசித்து வருகிறார்கள். ஒரு மத்திய கட்டடம் இருக்கிறது. அங்கே கூடிப் பேசுவார்கள். கோழி, வாத்து முதலியவை வளர்க்கிறார்கள். ரேஷன் பற்றாக்குறைக்கு அது உதவும். சட்டப்படி தங்கள் தீவிலிருந்து எதையும் அவர்கள் விற்பனை செய்வது கூடாது. ஆகையால் கள்ள வியாபாரம் நடத்தி வருகிறார்கள். மொத்தப் பேரும் பயங்கரமான கொலைகாரர்கள். தங்களுக்குள் ஒருவரையொருவர் கொலை செய்வது அதிகம் கிடையாது. ஆனால் சத்தம் போடாமல் தீவை விட்டு வெளியே போய்ப் பல வேலைத்தனம் பண்ணுவார்கள். வேலை முடிந்ததும் தீவுக்கு வந்து ஒளிந்துகொண்டு விடுவார்கள். இப்படி வெளியே நழுவுவதற்காகப் பக்கத்துக் கிராமத்திலிருந்து நல்ல படகுகளைத் திருடிக்கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். படகு வைத்துக் கொண்டிருப்பது மிகப் பெரிய குற்றம். புளு தீவுப் பக்கமாய் எந்தப் படகாவது வருவது, போவது தெரிந்தால் வார்டர்கள் துப்பாக்கியால் சுடுவார்கள்.

"ஆகையால் இந்தப் பெரு வியாதிக்காரர்கள் தங்கள் படகுகளைத் தண்ணீரில் அமிழ்த்திக் கல்லைப் போட்டு நிரப்பி வைப்பார்கள். படகு தேவைப்படும் போது தண்ணீருக்குள் மூழ்கி, கல்லை எடுத்து விடுவார்கள். படகு மேலே வரும். அங்கே எல்லா வகையான படகுகளும் இருக்கின்றன. பல நிறங்களில் பல நாடுகளைச் சேர்ந்தவை. பிரான்ஸின் பல பகுதிகளிலிருந்தும் வந்தவை இருக்கின்றன. உங்கள் படகு ஆற்றில் போகத்தான் உதவும். கடல் பிரயாணத்துக்கு லாயக்கில்லை. அதற்குப் புளு தீவுக்குத்தான் போக வேண்டும்."

"படகு கிடைப்பதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?"

"கேள். நானும் உங்களுடன் ஆற்றோடு வருகிறேன், புளு தீவு கண்ணில் படுகிற தூரம் வரையில். உங்களால் அந்தத் தீவைக் கண்டு பிடிக்க முடியாது. அல்லது வேறெதையாவது பார்த்து அதுதானாக்கும் என்று நினைத்து விடுவீர்கள். ஆறு கடலில் சேரும் இடத்திலிருந்து நூறு மைல் தூரத்தில் இந்தத் தீவு இருக்கிறது. ஆகவே மறுபடி நீங்கள் எதிர்த்திசையில் செல்ல வேண்டும். உங்கள் படகையும் கூடவே இழுத்துக் கொண்டுபோவோம். புளு தீவுக்கு எவ்வளவு அருகில் போக முடியுமோ அவ்வளவு அருகில் வரை நான் வந்து விட்டுத் திரும்பி விடுகிறேன். அப்புறம் உங்கள் சமர்த்து."



"நீயும் ஏன் வரக் கூடாது?"

"அம்மாடியோ! ஒரு தடவை - ஒரே ஒரு தரம்தான் - அங்கே கால் வைத்தேன். அது உணவுப் படகு வருகிற அதே நாள். சரியான பகல் வேளை. நான் அங்கே பார்த்த காட்சி! போதுமடா சாமி! வேண்டாம் பட்டாம்பூச்சி! என் ஆயுளில் இன்னொருதரம் அங்கே கால் வைக்கமாட்டேன். அவர்கள் பக்கத்தில் நிற்கிறபோது, அவர்களோடு பேசுகிற போது, அவர்களுடன் வியாபாரம் செய்கிறபோது - என்னால் என்

எழுதியது: ஹென்ரி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

அருவருப்பை வெளிக்காட்டாமல் மறைத்துக் கொள்ள முடியாது. அதனால் உங்களுக்குக் கெடுதல் தான் நேருமே தவிர, நல்லது செய்யாது."

"எப்போது போகலாம்?"

"ராத்திரி."

"இப்போது மணி என்ன?"

"மூன்றாகிறது."

"சரி நான் கொஞ்சம் தூங்குகிறேன்."

"கூடாது. உன் சாமான்களை ஒழுங்காய்ப் படகில் ஏற்ற வேண்டுமே?"

"இங்கே நம் ஜோன்ஸை சாமான்களுக்குக் காவல் வைத்துவிட்டு நான் காலிப் படகில் போகிறேன். பிறகு திரும்ப வந்து ஜோன்ஸை அழைத்துக் கொள்கிறேன்." "ஒரு நாளும் நடவாது! உன்னால் மறுபடியும் இந்த இடத்தை அடையாளம் கண்டுபிடிக்க முடியாது. பட்டப்பகல் வேளையாக இருந்தாலும், சரிதான் அத்தோடு பகல் வெளிச்சம் இருக்கும்போது நீஆற்றில் போவது கூடவே கூடாது. உங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் இன்னும். எல்லாம் முடிந்து விட்டதாக நினைக்காதே. இன்னும் ஆற்றில் போவது ஆபத்தானதுதான்" என்றான் பிரிட்டன்.

மாலை நேரமும் வந்தது.

பிரிட்டன் தன் சிறு படகை எடுத்து வந்தான். எங்கள் படகின் பின்புறம் அதைக் கட்டினோம்.

முன் துடுப்பைப் பிரிட்டன் பிடித்துக்கொள்ள, அவனுக்குப் பின்னால் ஜோன்ஸ் படுத்துக் கொண்டான். அவனுக்குப் பின்னே மாசுரெட். நான் முன்புறத்தில் அமர்ந்திருந்தேன். மெதுவாகச் சிற்றோடையிலிருந்து வெளிவந்து, ஆற்றில் சேர்ந்து கொண்டோம்.

இரவு வரவிருந்தது. தொலைவில் கடற்கரைப் பக்கம், பழுத்துச் சிவந்த சூரியன் அடிவானத்தைத் தகதகக்கச் செய்து கொண்டிருந்தான். கணக்கில்லாத வாண வேடிக்கைகள்! பிரமாண்டமான ஜால வித்தைகள்! ஆதவனின் கிரணங்களுக்குள் கடும் மஞ்சளைக் காட்டிலும் மஞ்சள். சிவப்பைக் காட்டிலும் சிவப்பு- வண்ணங்கள் ஒன்று கலக்கும் போது ஏற்பட்ட பட்டைகள்- அப்பப்பா! எப்படிப்பட்ட அதியற்புதக் காட்சிகள்! பத்து மைலுக்கப்பால், இந்த அருமையான ஆறு, வெள்ளையும் சிவப்புமாகப் பளபளத்துக் கொண்டு கடலுக்குள் பாய்கின்ற காட்சி கண்ணுக்குத் தெரிந்தது.

"சீக்கிரம் இன்னும் ஒரு மணி நேரத்தில், கடல் நீர் ஆற்றுக்குள் நுழைந்து விடும். வெள்ளத்தை உபயோகப்படுத்திக் கொள்வோம். ஆற்றின் ஓட்டமே நம்மை மேலே இழுத்துச் சென்றுவிடும். சிரமம் இருக்காது. அந்தத் தீவுக்குப் போய்விடுவோம்." என்றான் பிரிட்டன்.

இரவு ஒரே வீச்சாக விழுந்து பரவியது.

"துடுப்பைப் பலமாகப் போடு. ஆற்றின் நடுவுக்கு நாம் போய்விட வேண்டும். யாரும் புகைபிடிக்க வேண்டாம்" என்றான் பிரிட்டன்.

துடுப்புகள் தண்ணீரைத் துளைத்தன. சலக்,சலக்,சலக் நானும் பிரிட்டனும் அழகாய் இணைந்து துடுப்புப் போட்டோம். மாசுரெட்டும் தன்னால் இயன்ற அளவு வலித்தான். ஆற்றின் நடுவை அடைய அடையத் தண்ணீரின் வேகத்தை அதிகமாய் உணர்ந்தோம். விரைந்து வழுக்கிக் கொண்டு சென்றோம். அரை மணிக் கொருமுறை வித்தியாசம் புலப்பட்டுக் கொண்டிருந்தது. அலைகளின் வலு அதிகரித்தது. எங்களை மேலும் மேலும் வேகமாகத் தள்ளியது.

ஆறு மணி நேரமாயிற்று. தீவுக்கு வெகு அருகில், அதை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். ஒரு பெரிய கறுப்புத்திட்டாக, ஏறத்தாழ ஆற்றின் மத்தியில்,சற்று வலப்பக்கமாக அது தெரிந்தது.

"அதுதான்," என்றான் பிரிட்டன் தாழ்வான குரலில்.

இரவு அப்படியொன்றும் இருட்டாக இல்லை. ஆனால் எட்டத்திலிருந்து பார்க்கிறவர்களுக்கு நாங்கள் தென்பட்டிருக்க முடியாது. காரணம், நீர்ப்பரப்பின் மீது படர்ந்திருந்த மூடுபனிதான்.

இன்னும் நெருங்கிச் சென்றோம். தீவிலுள்ள பாறைகளின் வெளிக்கோடுகள் தெளிவாய்ப் புலப்பட்டன.

பிரிட்டன் சட்டென்று தன்னுடைய சிறிய படகுக்குத் தாவிக் கொண்டான். திரும்பத் தொடங்கினான்.

"வருகிறேன் எல்லாம் நல்லபடி நடக்கும்!"

"ரொம்ப நன்றி."

"சே, சே! என்ன பிரமாதமான உதவி இது!"

வழி காட்டும் பிரிட்டனின் துணை இல்லாமல், நாங்களே நேராகத் தீவை நோக்கிச் சென்றோம். இப்படியும் அப்படியுமாக அலையுண்டது படகு. அதை நேராக்க முயன்று, எதிர்ப்பக்கமாகத் திரும்பினேன். துடுப்பைக் கொண்டு 'பிரேக்' போட நான் எவ்வளவோ முயன்றும், ரொம்ப வேகமாகப் படகு கரையில் தண்ணீர்ப் பரப்புக்கு மேலாகத் தாழ்ந்து வளர்ந்துள்ள புதர்களில் போய்ச் சிக்கிக்கொண்டது. அது மட்டும் பாறையாக இருந்திருக்குமானால், அந்த வேகத்தில் படகு சுக்குநூறாகச் சிதறியிருக்கும்.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*

# துளிர் விடும் மலையகம்




**இவ்** ஆங்கில பதத்திலிருந்து மருவியே கங்காணி என்ற பெயர் வந்தது. இக்கூட்டங்களுக்கு ஒரு தலைவனைப் போல செயலாற்றினார். இந்தியாவில் காணப்பட்ட வறட்சி, பொருளாதார நெருக்கடி, சமூக ரீதியாக புறக்கணிக்கப்பட்ட நிலை , தோட்ட நிர்வாகிகள் அவர்களுக்குக் கூறிய வார்த்தைகள், போன்றவற்றைச் சாதகமாக பயன்படுத்தி இந்தியாவிற்குச் சென்ற தொழிலாளிகளை மீண்டும் அழைத்து வர கங்காணிகள் முயன்றனர்.

ஒரு கங்காணி கூட்டி வரும் ஒவ்வொரு தொழிலாளிகளுக்கும் ஒரு மாதத்திற்கு ஒரு சதம் வீதம் எத்தனை கூலிகளைக் கொண்டு வருகின்றாரோ, அத்தனை சதம் ஒவ்வொரு மாதமும் கிடைக்கும். ஒருவர் நூறு தொழிலாளிகளைக் கொண்டு வந்திருந்தால் ஒவ்வொரு மாதமும் ஒரு ரூபா கிடைக்கும். இதன்நிமிர்த்தமாக கங்காணிமார் மிகத்தீவிரமாக பலவித யுக்திகளையும் ஏமாற்று வித்தைகளையும் கையாண்டு பலரை ஏமாற்றி இலங்கைக்குக் கூட்டி வர முயன்று வெற்றி கண்டனர். இவ்வாறு அழைத்து வருவதன் மூலம் நிறையப் பணம் சம்பாதிக்கலாம் என்ற பேராவலினால் மிக சிரத்தையாகச் செயற்பட்டனர்.



இந்தியாவில் மக்கள் கூடும் இடமான அம்பலம் அல்லது கோவிலுக்குச் சென்றனர். அங்கு தங்களது பொய்யான பசப்பு வார்த்தைகளைக் கூறி, மக்களை ஏமாற்றுவதற்கு முயன்றனர். ஏற்கனவே இலங்கைக்கு சென்று திரும்பியிருந்த சில கிராமவாசிகள் இதனை நம்பவில்லை. மனிதசஞ்சாரமற்ற விலங்குகள் நிறைந்த காடுகளை அழித்து, குளிரான ஊரில் குடியிருப்பது , கடினமானதென்று மறுத்தனர்.

எனவே மீண்டும் சில யுக்திகளை நடைமுறைப்படுத்தினர். இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு திரும்பும்போது மைசூர்பருப்பு, மாசிக்கருவாடு, உருளைக்கிழங்கு தேங்காயெண்ணெய், கித்துள் முளை, கோப்பித்தூள், என்பவற்றை எடுத்துச் சென்றனர். இப்பொருட்களை வைத்து கிராமவாசிகளுக்கு விருந்து கொடுத்தனர். சம்பா சோற்றின் மீது தூவிய மாசிக்கருவாட்டுடன், மைசூர் பருப்பும் உருளைக்கிழங்கும் சேர்த்த குழம்பு , தேங்காயெண்ணெயில் பொரித்த அப்பளம், என்பவற்றையும் வழங்கி , சாப்பாட்டின் பின் கோப்பியுடன் கித்துள் முளையையும் கொடுத்தனர். இதன் சுவையில் நாக்கையும் மனதையும் பறிகொடுத்து மதி மயங்கியிருந்த வேளையில், அழகான அடுக்கடுக்கான பொய்முட்டைகளை அவிழ்த்து பூமழையாய் பொழிந்தனர்.

இலங்கை மிகவும் செழிப்பான நாடு. அங்குள்ள கோப்பி மரத்தின் மீது கித்துள் முளை முளைக்கிறது. கோப்பி செடியின் அடிப்பாகத்தை தோண்டினால் மைசூர் பருப்பு கிடைக்கும். தேயிலை செடியின் வேரை முறித்து உலர்த்தினால் சுவை மிக்க மாசிக்கருவாடு கிடைக்கிறது. இதனை நாங்கள் கண்டோம், அதையே உங்களுக்கும் கொடுத்துவந்தோம். நீங்களும் சுவைத்து திருப்தியாக சாப்பிட்டீர்கள். இன்னமும் இந்த நிறைவை பெற்றுக்கொள்ள, உங்களை அழைத்து செல்ல விரும்புகின்றோம் என்று பல பொய்களைக் கூறி, அப்பாமார்களைக் கங்காணிமார் ஏமாற்றுகின்றனர். அக் கிராமவாசிகள் இப் பொய்யை உண்மையென நம்பி, திரள், திரளாக கங்காணிமார்களைப் பின்பற்றினர்.

எதிர்நோக்கும் வாழ்க்கை நிலை என்னவென்று தெரியாது ஏமாந்து இலங்கை வந்து சேர்ந்தனர்.

கங்காணிமார் இலங்கை வந்த தொழிலாளருக்குக் கடன் உதவி வழங்கினர்.மேலும் அவர்கள் கடையிலிருந்து கடனுக்குப் பொருட்களை வழங்கினர். பெரிய கங்காணிமார், உதவி கங்காணிமார்களைக் கொண்டு தொழிலாளர்களுக்குக் கடிதங்கள் எழுதுவது, வாசிப்பது, புராணங்கள் படிப்பது, பூசாரிகளை வரவழைத்து பூசை நடத்துவது போன்ற காரியங்களைச் செய்து , மென்மேலும் தொழிலாளர்களை அடிமைப்படுத்தினர். 'கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளர்ப்பேன்' என்பது போல இவர்களை மிகக்குறுகிய வட்டத்துக்குள் வாய்பேசா பூச்சிகளாக நசுக்கினர். "நாங்கள் ஏன் இவ்வாறு கஷ்டப்படுகின்றோம்" என்ற எண்ணம் உண்டாவதற்கோ ஒரு எழுச்சி ஏற்படவோ முடியாதபடி இத்தொழிலாளர் களைப், பெரிய கங்காணிமார் அடக்கியாண்டனர். இந்நிலையினால் அவர்களின் கடின உழைப்பை நன்றாக இக்கங்காணிமார் பயன்படுத்திக் கொண்டனர்.

மனிதக் குடியேற்றமே இல்லாத இடங்களைப் பயிர்ச்செய்கை செய்யக்கூடிய இடமாகவும், மனிதர்கள் வாழக்கூடிய இடமாகவும் மாற்றினர். தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் அயரா உழைப்பும் வியர்வையும் கங்காணிமார்களைச் செல்வச் சீமான்களாக்கியது. நாட்டை வளமாக்கியது. பிரித்தானியரை வல்லரசாக்கியது. ஏமாற்றுப் பேர்வழிகளின் ஏமாற்று வித்தையால், ஏமாந்துப்போன ஏழைத் தொழிலாளிகளின் ஏக்கம் நிறைந்த வாழ்வு எவ்வித முன்னேற்றமும் பெறாமலே ஏனோதானோ என்று தொடங்கியது. கங்காணிமார் தங்கள் சதையை கொழுப்பாக்க தொழிலாளர்களின் எலும்பையும், தோலையும் வைத்து பாடிப்

**ஸ்ரீ முகன்**

பிழைத்துக்கொண்டு வந்தனர்.

## ஒடுக்கு முறைகள்

இன்றைய உலகில் சமத்துவமின்மை, பணக்காரன், ஏழை உயர்சாதி- தாழ்சாதி என்றப்பிரச்சினை வேரோடிக்கிடக்கின்றது. ஆதிக்க சக்திகள், வகுப்புவாத சக்திகள், ஒடுக்கு முறைகள் என்பன மனிதனை வெட்டி வீழ்த்துகின்றன. முகத்திற்கு முன்னால் சிரிப்பதும், முதுகிற்குப் பின்னால் சீறுவதும் பக்கத்தில் இருந்துக்கொண்டே எப்போது கவிழ்க்கலாம் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் வஞ்சகம் நிறைந்த வரலாறுகளே உலகத்தில் தொடருகிறது.மனிதனை தெய்வ சாயலாக மாற்ற சமயங்கள் விரும்புகின்றன, ஆனால் மனிதனை மனிதனாக்கும் முயற்சியிலே இன்னும் முழுமையான வெற்றி பெறவில்லை என்பது போலதான், அடக்கு, ஒழுங்கு முறைகள், நலிந்து கிடக்கின்றன. இதிலிருந்து விடுபடுவதற்காக அன்றிலிருந்து இன்னமும் எத்தனையோ சக்திகள் முயன்றபோதும், முழுமுயற்சியாய் போராடினபோதும், உலகின் எங்கோ ஒரு இடத்தில் புற்றுநோய் போல ஒரு சமூகத்தை இது அரிக்கின்றது.

*(துளிர்க்கும்)*

சிறப்பு 29

# வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்



**பல** ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள லண்டன் மாநகரத்தில், நிற்க நிழலின்றி, உண்ண உணவின்றி, ஒவ்வொரு நாளும் ஒரு யுகமாகக் கழித்த சிறுவன் அவர். அவருக்கு மட்டும் ஏன் அந்தக் கஷ்டத்திலும் வாழ முடிந்தது? இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? வசதியான குழந்தை இறக்க, வசதியில்லாத சிறுவன் வாழ்ந்து வரக் காரணங்கள் என்ன? இதற்கெல்லாம் யார் பொறுப்பு? கடவுளா? சமூகத்தின் அமைப்பா? எது? இந்த வகையில் சென்றது அவருடைய சிந்தனை அலைகள். மறைந்த தன் மகன், தன்னைப் போல ஒரு ஏழையாக இருந்திருந்தால் உயிருடன் இருந்திருப்பானோ? இப்படியெல்லாம் சிந்தித்தார். ஒரு அநாதைச் சிறுவனை, பாசம் நிறைந்த மற்றொரு அநாதை எந்த வகையில் வளர்த்திருப்பான்? வெறும் பாசத்தால் மட்டும் உலகத்தில் ஒரு ஏழையால் குழந்தையை வளர்க்க முடியுமா? தகப்பன் பெயர் தெரியாது பிறக்கும் குழந்தைகளுக்குத் தந்தை யார்? எடுத்து வளர்ப்பவன் கடலளவு பாசத்தைக் கொட்டினாலும், அவன் உண்மையில் தந்தை ஆவானா? தன்



தந்தை, தன் தாயையும், மகன்களையும் விட்டுச் சென்றது ஏன்? சில தந்தைகள் ஏன் அவ்வாறு நடந்து கொள்கிறார்கள்? இப்படி அவர் மனதில் பல வகையான கேள்விக் குறிகள்... சந்தேகங்கள் வளரத் தொடங்கின.
அவைகளுக்கெல்லாம் பதிலைத் தேடி அலையத் தொடங்கினார். தன்னுடைய எண்ணங்களுக்கும், கேள்விகளுக்கும் பதில்கள் நிஜ வாழ்க்கையில் கிடைக்காது என்பதை அவர் உணர்ந்திருக்கிறார். அதற்கெல்லாம் பதிலைக் காணும் வகையில் அவர் உருவாக்கிய படம்தான் 'தி கிட்.'

"தி கிட்" சாப்ளின் உருவாக்கிய வரலாறு படைத்த முழு நீளப் படம். இது அந்த வகையில் அவருடைய முதல் முயற்சி. நான்காண்டுகளுக்கு முன்பு அவர் நடித்த அப்படிப்பட்ட முழு நீளப் படம் 'டில்லிஸ் பங்சர்டு ரொமான்ஸ்'. மேக்ஸென்னட்டால் இயக்கப்பட்டது. இவர் அதில் நடித்ததோடு சரி.

அடுத்த படத்தைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்த நேரத்தில், சாப்ளின் ஒரு 'வாட்வில்' காட்சியைப் பார்க்கச் சென்றார். அதில் ஒரு சிறுவன் தன் தந்தையோடு நடித்துக் கொண்டிருந்தான். அவன் செய்யும் விஷமங்கள், அவன் நடை, உடை பாவனைகள் பொடிப் பையனின் குறும்புத்தனங்கள்- இவையெல்லாம் கூடியிருந்த மக்களைச் சிரித்துக் கொண்டே இருக்க வைத்தன. ஒருவர்! சிரிப்பின் சிற்பியைச் சிரிக்க வைக்க வேண்டுமென்றால், அந்த வாண்டுப் பயலுக்கு எவ்வளவு திறமை இருந்திருக்க வேண்டும்! அதைக் கவனித்த சாப்ளின், தந்தையைச் சந்தித்தார். தந்தை, தன்னைத்தான் சாப்ளின் நடிக்க வைப்பார் என்ற எண்ணத்தில் மகிழ்ந்து போனான். ஆனால், சாப்ளினின் மனதில் மகன்தான் இருந்தான், தந்தையல்ல! ஐந்து வயது சுட்டிப் பயலை சாப்ளின் நடிக்கக் கூப்பிடுகிறாரே என்று எண்ணியபொழுது, அந்தத் தந்தையால் நம்ப முடியவில்லை. தான் இருக்கும் பொழுது, மகனை வைத்துக் கொண்டு இவர் என்ன செய்வார் என்பது அவருக்குப் புரியவில்லை! ஆனாலும் அவர் சம்மதித்தார். ஆனால் ஒரு நிபந்தனை, பையனை நடிக்க வைக்கும் படத்தில் தனக்கும் ஒரு வேடம் கொடுக்க வேண்டும் என்பது தான் அது. மகனுக்கு இருந்த திறமையில் தந்தையிடம் நூற்றில் ஒரு பங்கு கூடக் கிடையாது என்பதைச் சுலபமாகவே புரிந்து கொண்டார் சாப்ளின். ஆனாலும், நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு இருவரையும் ஒப்பந்தம் செய்தார். இதில் ஒரு வேடிக்கை, படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்கப் போகும் பொடிப் பயலுக்கு சம்பளம் வாரம் எழுபத்தைந்து டாலர்கள் மட்டுமே. தந்தையின் சம்பளம் 125 டாலர்! தந்தையைத் தன் வலையில் அதிக சம்பளம் கொடுத்துச் சிக்க வைக்கவில்லை யென்றால் படத்தின் வளர்ச்சிக்கு தந்தை தடையாக இருப்பாரோ என்ற சந்தேகம் சாப்ளினுக்கு.



இதிலிருந்து சாப்ளின் வர்த்தகத்திலும் வல்லுநர் என்பது புரிகிறது.!

அந்தப் பொடிப் பயலின் பெயர் 'ஜாக்கி கூகன்'. அவன் கண்களில் சோகம் நிறைந்த சிரிப்பின் ஒளி... குழந்தைத்தனம் நிறைந்த அவன் முகத்தில் இனம் புரியாத ஏதோ ஓர் ஏக்கம்.... இவைகளெல்லாம் சாப்ளினை வெகுவாகக் கவர்ந்தன. அது மட்டுமல்ல, ஜாக்கியை, சாப்ளின் தன் இளமைக் கால பிரதிபலிப்பாகவே பார்த்தார்.

ஐந்து வயதுக்குழந்தையை மையமாக வைத்து திரைக்கதையை எழுதத் தொடங்கினார். ஆகவே படத்திற்குத் தலைப்பே 'The Kid' என்று வைத்தார். தன்னுடைய குழந்தைப் பருவத்தின் பல அனுபவங்களை மேலும் சுவையூட்டி அதில் கற்பனை கற்கண்டுகளையும் சேர்த்துக் காட்சிகளையும் அமைத்தார். எவ்வளவு சிறிய சம்பவமாக இருந்தாலும், படத்தைப் பார்ப்பவர்களின் மனதில் அதில் மோதும் எண்ண அலைகளை எழுப்ப வேண்டும் என்று எண்ணினார். குழந்தைகளை வளர்க்கப் பெற்றோர்கள் படும் பாடுகளைப் பற்றிக் குழந்தைக்கு ஒன்றுமே தெரியாது. இந்த ஒரு சாதாரண உண்மையையும் சாப்ளின் இந்தப் படத்தில் புது வழிகளில் காட்டினார். இந்தப் படத்தை எழுதி நடித்து, தயாரித்து, இயக்கி முடிக்க சாப்ளினுக்கு ஓராண்டு காலம் தேவைப்பட்டது. பலர் இந்த நீண்ட கால இடைவெளியைப் பற்றிப் பல வகையாகப் பேசத் தொடங்கினார்கள். மில்பிரிட்டுடன் பட்ட கஷ்டங்கள்.... விவாகரத்தின் சலசலப்புகள்... மூன்றே நாள் வாழ்ந்து மறைந்த மகனால் ஏற்பட்ட துயரம்.... இவைகளெல்லாம் சாப்ளினின் கற்பனை வளத்தை அழித்து விட்டன என்றெல்லாம் வதந்திகள் உலாவத் தொடங்கின. இந்தப் படத்தின் தயாரிப்பின் பொழுது சாப்ளின், பத்திரிகைக்காரர்களுடன் பேச மறுத்து விட்டார். இது அந்த வதந்திகளுக்கு மேலும் தூபம் போட்டது. ஆனால் அதைப் பற்றியெல்லாம் அவர் கவலைப்படவே இல்லை. அவருடைய உடல், மனது, பொருள், ஆவி எல்லாமே படத்தின் மீதுதான் லயித்திருந்தன.

'தி கிட்' ஒரு தர்ம பிரசவ ஆஸ்பத்திரியின் வாசலில் இருந்து தொடங்குகின்றது. கையில் குழந்தையுடன் ஒரு பெண் வெளியில் வருகிறாள். கதவைச் சாத்தும் வேலைக்காரர்கள் அவளை ஒரு விதமாகப் பார்க்கிறார்கள். அதற்கு ஒரு ஆழமான காரணம் உண்டு. அந்தப் பெண் (எட்னா பர்வேயன்ஸ்) திருமணம் ஆகாமலே குழந்தையைப் பெற்றவள். அதற்குக் காரணமாக இருந்த காதலன் ஒரு ஓவியன். அவளை 'அம்மோ' என்று விட்டு ஓடிவிட்டான்.

**(தொடரும்)**

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்

33

**மார்சியா இராணி**

**ப**ல்வேறு சதிப் புரட்சிகள், ஆட்சிக் கவிழ்ப்புகள் மற்றும் மாற்றங்களின் பின்னர் ரோமப் பேரரசு ஓரளவு தலை நிமிர்ந்தது, கி.பி. முதலாம் நூற்றாண்டில்தான். கி.பி. 150 ஆம் ஆண்டு முதல் ரோமை ஆட்சி செய்து வந்தவர் மார்க்கஸ் அவ்ரோலியஸ் மன்னர். கடந்த காலங்களில் மோசமாக நிகழ்ந்த பல சம்பவங்களை அடுத்து மீண்டும் ஓர் சீரான நிர்வாகத்தினை ஏற்படுத்தியவர் அவர்தான். மார்க்கஸ் அவ்ரோலியஸ் மன்னரின் மகன் கம்மோடஸ் ஆவான். மன்னரின் ஒரே மகனும் முடிக்குரிய இளவரசனுமாகிய கம்மோடஸ், அந்நாட்களில் ஓர் பேர்பெற்ற உதவாக்கரையாக விளங்கினான். சிறு வயது முதலே எந்தவிதமான பொறுப்பும் இல்லாமல் தனது கெட்ட நண்பர்களுடன் தேசம் சுற்றுவதிலும் ஊதாரித்தனத்திலுமே நாட்களைக் கடத்தினான்.

அந்நேரத்தில் அவனுக்கு மோசமான பெண்களின் சகவாசம் கூட இருந்தது. நாளொரு பெண்ணும் பொழுதெல்லாம் போதையுமாகத் திரிந்த அவனுக்கு மார்சியா எனும் பெண்ணின் சகவாசம் கிடைத்தது. மார்சியாவுடன் கூத்தும் கும்மாளமுமாக இருந்த கம்மோடஸ், ஒரு கட்டத்தில் அவளுடன் குடித்தனமே நடத்த ஆரம்பித்து விட்டான். முதுமை காரணமாக மன்னர் மார்க்கஸ் அவ்ரோலியஸும் இவற்றைக் கண்டுகொள்ளவில்லை.

இந்நிலையில் கி.பி.180ஆம் ஆண்டில் ரோம் மன்னர் மார்க்கஸ் அவ்ரோலியஸ் முதுமை காரணமாகக் காலமானார். அவரது மறைவினை அடுத்து கம்மோடஸ் அரசனாக முடிசூடப்பட்டான். இச்சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த மார்சியா உடனடியாகவே அரண்மனையில் குடியேறிவிட்டாள்.

கம்மோடஸை திருமணம் முடிக்காமல் - மகாராணியாக முடிசூடாமல் அரண்மனையில் குடியேறிய மார்சியா போட்ட ஆட்டம் கொஞ்ச நஞ்சமல்ல. கம்மோடஸுடனான தொடர்பு ஏற்படுவதற்கு முதலே அவள் மிக மோசமான வாழ்வினை வாழ்ந்தவள். அத்துடன் அவளுக்கு ஏராளமான ஆண் நண்பர்களும் இருந்தனர். கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட அவள், தனது ஆண் நண்பர்களை அரண்மனை பணியாளர்களாக மாற்றினாள்.

ரோம அரண்மனையில் அரச மெய்ப்பாதுகாவலர்கள் முதல் பணியாளர்கள் வரை மார்சியாவின் காதலர்களே பணிக்கு அமர்த்தப்பட்டனர். கம்மோடஸை எந்த வேளையும் மதுரசம் அருந்தக்கொடுத்து போதையில் வைத்திருந்த மார்சியா, தனது பழைய காதலர்களுடன் கூத்தும் கும்மாளமுமாக இருந்தாள். ரோமிலுள்ள அந்தப்புர கட்டிலில் மார்சியாவுடன் சல்லாபமாக இருந்தது அரசர் கம்மோடஸ் அல்ல. அவளது காதலர்களே வேளைக்கு ஒருவராக அங்கு சல்லாபம் புரிந்தனர்.

ஆயினும் அரண்மனைப் பிரதானிகள், அரச நிர்வாகிகள் எவருக்கும் அதனைத் தட்டிக் கேட்கத் துணிவு இருக்கவில்லை. ஏனெனில் மார்சியா, கம்மோடஸை தனது கைப்பொம்மையாகவே வைத்திருந்தாள். இவ்வாறு இருக்கையில் கம்மோஸ் மன்னருக்கு அந்நாட்டு உளவுத்துறை பிரதானியிடமிருந்து முக்கிய தகவல் ஒன்று கிடைத்தது. அதில் கம்மோடஸ் மன்னரைக் கொலை செய்வதற்குத் திட்டமிடுவதாக ஒரு முக்கிய தகவல் காணப்பட்டது. இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால், அரசனைக் கொல்வதற்கு உண்மையில் திட்டமிட்டது மார்சியாவும் அவளது கூட்டாளிகளும்தான். அதே தகவல் அரசரைத் தனது கைப்பொம்மையாக வைத்திருக்கும் மார்சியாவின் கைகளுக்கு வந்ததுதான் உச்சக்கட்ட வேடிக்கை. இதனையடுத்து தனது திட்டத்தை மாற்றிக்கொண்ட மார்சியாவும் அவளது கள்ளக் காதலனான எக்லெக்டஸ் என்பவனும், மல்யுத்த வீரன் ஒருவனைக் கூலிக்கு அமர்த்தி, கம்மோடஸ் மன்னர் நந்தவனம் ஒன்றிற்கு



உலாவச் சென்றபோது கழுத்தை நெரித்துக் கொலை செய்வித்து விட்டனர்.

இக்கொலையினை அடுத்து, ரோம நாட்டு நிர்வாகத்தில் பெரும் குழப்பம் நிலவியது. உண்மையில் கம்மோடஸை ஆள் வைத்து மார்சியா கொலை செய்ததன் நோக்கம், தான் ரோம நாட்டு மகாராணியாக முடி சூடி ஆட்சி செய்ய வேண்டும் என்பதற்காகவே. ஆனால் முறைப்படி திருமணம் அல்லது அரசரின் மனைவிக்குரிய அடையாள அந்தஸ்து எதனையும் கொண்டிராமல் அவசரப்பட்டு அவள் மேற்கொண்ட கொலையே மார்சியாவிற்குப் பாதகமாகத் திரும்பியதுதான் வரலாறு.

இத்தனைக்கும் கம்மோடஸை தனது கைப்பொம்மையாக வைத்திருந்த மார்சியாவிற்கு அவனை உரிய முறையில் திருமணம் செய்வதென்பது மிகவும் இலகுவான காரியமாகவே இருந்தது. ஆயினும் அதற்கு வேண்டிய அறிவோ முன்யோசனையோ அவளிடம் இருந்திருக்காதபடியினால் அவள் அதனைச் செய்யவில்லை.

கம்மோடஸின் மரணத்தின்பின் அரண்மனைப் பிரதானிகள் விழித்துக்கொண்டதுடன் உடனடியாகச் செயற்பட்டு ரோம் நகர செனட்டரான பப்ளியஸ் பெர்ட்டினாக்ஸ் என்பவரை நாட்டின் அரசராக நியமித்தார்கள்.

உண்மையில் சிறந்த அறிவும் நிர்வாகத் திறமையும் மிக்க பப்ளியஸ் பெர்ட்டினாக்ஸ், அரசராகப் பொறுப்பேற்க தனிப்பட்ட முறையில் விரும்பியிராவிட்டாலும் நாட்டின் பிரதானிகளின் வற்புறுத்தலின் பேரில் மன்னராக முடிசூடிக் கொண்டார். அதுமட்டுமின்றி கண்டிப்பான ஆட்சியினையும் நடாத்தத் தொடங்கினார். ஆனால் கம்மோடஸின் ஆசை நாயகியான மார்சியாவை அரண்மனையினை விட்டு அப்புறப்படுத்த மட்டும் அவரால் முடியாமல் போனது.

ஆயினும் மார்சியாவின் கள்ளக் காதலர்களை அரண்மனையை விட்டு ஒவ்வொருவராக வீட்டுக்கு அனுப்பத் தொடங்கினார்.

நிலைமை விபரீதமாவதை உணர்ந்த மார்சியா, இப்படியே போனால் தனது இருப்பிற்கே ஆபத்து வந்துவிடும் என்பதை அறிந்து கொண்டு மற்றுமோர் சதித் திட்டத்தினைத் தீட்டினாள். அதன்படி அரண்மனை மெய்ப்பாதுகாவலர்களாக இருந்த மார்சியாவின் கள்ளக் காதலர்களினாலேயே பப்ளியஸ் பெர்ட்டினாக்ஸ் படுகொலை செய்யப்பட்டார். இக்கொலை முயற்சியில் ஈடுபட்ட தனது கள்ளக் காதலர்களுக்கு பொன்னும் பொருளும் கொடுத்த மார்சியா, அவர்களை அண்டை நாடான பிரிட்டனுக்கு தப்பி ஓட வைத்தாள்.

ஆனால் நிலைமை வெகுநாள் நீடிக்கவில்லை. உரிய நிர்வாகமற்ற தன்மையும் குழப்பமான நிலைமையும் காணப்பட்டபடியினால் அண்டை நாடுகளில் ஒன்றான பன்னோனியா மன்னன் செப்டிபியஸ் செவரஸ் ரோம் மீது படை எடுத்தான். ரோமில் இராணுவ கட்டமைப்புச் சீர்குலைந்து காணப்பட்டபடியினால் இலகுவாக அவன் ஆட்சியைக் கைப்பற்றினான். அப்போது அரண்மனையில் தங்கியிருந்த மார்சியா, பன்னோனியா படையினரால் கைது செய்யப்பட்டாள். பல்வேறு சதித் திட்டங்கள் தொடர்பாகப் பலத்த சித்திரவதை செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட அவள், இறுதியாக விசாரணையின் போதே மரணமடைந்தாள்.

**(இரகசியங்கள் தொடரும்...)**

# முட் பாதையில் மரித்து மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## தேர்தலில் போட்டியிடக் கூடாதென புலிகள் இயக்கம் மிரட்டல்.

1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சிங்களப் பகுதிகளில் நடத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களில் ஐ.தே.கட்சியும் அதன் கூட்டாளிக் கட்சிகளும் வெற்றி பெற்றன. வடக்கு, கிழக்கிற்கு மாகாண சுயாட்சி வழங்கினால் அது நாடு பிரிவினைக்கு வழிவகுக்கும் என்று சிங்கள மக்கள் மத்தியில் இருந்த அச்சத்தைப் போக்குவதற்குச் சிங்களப் பகுதியில் நடத்தப்பட்ட தேர்தல் ஓரளவுக்கு உதவியது. புலிகள் இயக்கம் ஜனநாயக அரசியல் நீரோட்டத்திற்குத் திரும்பப் போவதில்லையென்று ராஜிவ் காந்தி திடமாக நம்பினார். 1985ஆம் ஆண்டு திம்புப் பேச்சுவார்த்தை முதல் மேற்கொள்ளப்பட்டு




வந்த பல்வேறு முயற்சிகளைப் புலிகள் இயக்கம் முறியடித்த விதம் இதற்கு உதாரணமாக விளங்கியதாகவும் ராஜிவ் காந்தி அபிப்பிராயம் வெளியிட்டார். எனவே வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு ராஜிவ் காந்தி அறிவித்தார். சிங்களப் பகுதிகளில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களில் ஐ.தே. கட்சியும் அதன் பங்காளிக் கட்சிகளும் பெற்றிருந்த வெற்றி, ஜெயவர்த்தனாவுக்கு உற்சாகத்தை அளித்திருந்தது. வடக்கில் பெரும்பான்மையாக தமிழ் மக்களே வாழ்வதால் கிழக்கில் போட்டியிடுவதற்கு ஐ.தே.கட்சியுடன் ஏனைய சிங்களக் கட்சிகளையும் முஸ்லிம் கட்சிகளையும் போட்டியில் ஈடுபடுத்த முடியுமென்று ஜெயவர்த்தனா திடமாக நம்பினார். போட்டியிடும் வேட்பாளர்களுக்கு இந்திய அமைதிப் படை பாதுகாப்பளிக்க வேண்டுமென்று ஜெயவர்த்தனா கோரிக்கையும் விடுத்தார்.

இந்தியாவின் ஆலோசனையின் பேரிலேயே இலங்கை ஆயுதப் படையினரையும் அதிரடிப்படை கொமாண்டோக்களையும் யாழ்ப்பாணத்திலிருந்து முற்றுமுழுதாகவும் கிழக்கின் சில பகுதிகளிலிருந்தும் வாபஸ் பெறப்பட்டிருப்பதால், இந்தப் பொறுப்பை இந்தியப் படையே கையேற்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார். முதல் தடவையாக எம்.எச்.எம்.அஷ்ரப்பின் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸும் தேர்தல் களத்தில் இறங்கத் தயாரானது.

அப்போது இந்தியப் பாதுகாப்பமைச்சராக விளங்கிய கே.சி.பந்த் இருநாள் விஜயமொன்றினை மேற்கொண்டு கொழும்பு வந்து சேர்ந்தார். 1988ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் திகதிக்கும் ஜூன் மாதம் முதலாம் திகதிக்குமிடையில் கொழும்பு விஜயத்தை மேற்



கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் 1988ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசாநாயக்கா இலங்கை – இந்திய ஒப்பந்தம் பற்றி விளக்குகையில் எடுக்கப்பட்ட படம்.

கொண்டிருந்த பாதுகாப்பமைச்சர் பந்த், ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடனும் இந்தியப்படை அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு அங்கீகாரம் அளித்து விட்டு, புலிகள் இயக்கம் அதைக் குழப்ப முயன்றாலும், இந்தியா தனது கடமையை மேற்கொள்ளுமென்று அவர் உறுதியளித்தார்.

பிரதமர் பிரேமதாசாவும் பந்தோபஸ்து அமைச்சர் லலித் அதுலத்முதலியும் புலிகள் இயக்கத்திற்கு நிதி மற்றும் ஆயுத உதவிகள் வழங்குவது பற்றி புதுடில்லிக்குத் தெரியுமென்று இந்திய பாதுகாப்பு அமைச்சர், ஜெயவர்த்தனாவுக்குச் சுட்டிக் காட்டினார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்குப் புறம்பாக வேறொரு ஒப்பந்தத்தை புலிகள் இயக்கத்துடன் செய்து கொள்வதற்கு இந்த இருவரும் முயற்சி செய்வதாகவும் அவர்களைக் கட்டுப்படுத்துமாறும் பந்த் சுட்டிக் காட்டினார். இவர்களின் நடவடிக்கைகள் அனுமதிக்

**(அரசியல் தொடர்)**

கப்பட்டால் இலங்கையில் அமைதியின்மையும் வன்செயல்களுமே அதிகரிக்குமென்றும் அமைச்சர் பந்த் சுட்டிக் காட்டினார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமென்றும் இந்தியா வலியுறுத்தியது. இதற்கிடையில் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் கண்டறியுமாறு கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலய அதிகாரிகளுக்கு இந்தியா உத்தரவிட்டது. இது தொடர்பான அறிக்கை ஜூன் மாத ஆரம்பத்தில் இந்திய அரசுக்குக் கையளிக்கப்பட்டது. இலங்கையின் வடக்கு, கிழக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு இருக்கக் கூடிய சாதக, பாதக அம்சங்கள் பற்றி ஜூன் மாதம் 24ஆம் திகதிக்கும் 28ஆம் திகதிக்குமிடையில் பல சுற்றுப் பேச்சுகளை பிரதமர் ராஜிவ் காந்தியும் வெளிவிவகார இணையமைச்சர் நட்வார் சிங்கும் நடத்தினர். வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு இந்தியா எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்தும் ஆராயப்பட்டது. புலிகள் இயக்கத்தை ஜனநாயக அரசியல் நீரோட்டத்திற்குக் கொண்டு வருவதற்காக இந்திய புலனாய்வு அமைப்பான 'றோ' புலிகள் இயக்க முக்கியஸ்தர்களுடன் நடத்தி வரும் பேச்சுவார்த்தைகள் பூர்த்தியடையும் வரை தேர்தல் நடத்தப்படக்கூடாதென்று றோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

ராஜிவ் காந்தி தலைமையில் இந்திய அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டங்களை அடுத்து, தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சகல உதவிகளையும் வழங்கத் தயாராகவுள்ளதாக ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு அறிவிக்கப்பட்டது. ஜூன் மாதம் 28ஆம் திகதி இந்தத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து மறுநாள் 29ஆம் திகதி கொழும்பிலிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை இந்திய உயர்ஸ்தானிகர் தீக்ஷித் சந்தித்துக் கலந்துரையாடினார். தமிழர் விடுதலைக் கூட்டணி இத் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்று தீக்ஷித் வற்புறுத்தவில்லை. ஆனால் தமது கட்சி மத்திய கமிட்டியைக் கூட்டி ஆராய்ந்த பின்னர், இது குறித்து முடிவெடுப்பதாக அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண சபைக்கு நவம்பர் மாதம் 19ஆம் திகதி தேர்தல் நடத்தப்படுமென்று ஜூலை 31ஆம் திகதி இலங்கை அரசாங்கம் அறிவித்தது. சில தினங்களின் பின்னர் இந்திய அமைதிப் படை பத்து நாள் யுத்த நிறுத்தமொன்றை அறிவித்ததுடன் சகல தமிழ் கட்சிகளையும் குழுக்களையும் போட்டியிடுமாறு அழைத்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிடமாட்டாதென்று குறிப்பிட்டு அறிக்கையொன்றினை வெளியிட்டது. "புலிகள் இயக்கம் ஜனநாயக அரசியல் நீரோட்டத்திற்கு வருவதற்கு வழிவகை செய்யும் வகையில் பத்து நாள் யுத்த நிறுத்தமொன்றினை அறிவித்துள்ள போதிலும் இந்திய அரசாங்கத்தின் இந்த சமிக்ஞைக்கு புலிகள் இயக்கம் சாதகமான பதிலளிக்கத் தவறியமை குறித்து, தமிழர் விடுதலைக் கூட்டணி தனது ஏமாற்றத்தைத் தெரிவிக்கிறது. இதனால் எதிர்வரும் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற அஹிம்சை வழியைப் பின்பற்றும், நிராயுதபாணிகளான அரசியல் கட்சிகளால் வேட்பாளர்களை நிறுத்துவதென்பது கஷ்டமான காரியமாகும். எவ்வாறெனினும்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் ஈட்டியவற்றை ஸ்தாபனமையப்படுத்துவதற்கு இந்திய அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளுக்குத் தமிழ் பேசும் மக்கள் பூரண ஆதரவு வழங்குகிறார்கள் என்பதை தமிழர் விடுதலைக் கூட்டணி நன்கு புரிந்து கொள்கிறது" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வடக்கு, கிழக்கு ஒன்றிணைக்கப்பட்ட மாகாண சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் கொல்லப்படுவார்கள் என்று புலிகள் இயக்கம் விடுத்த மிரட்டலே தமிழர் விடுதலைக் கூட்டணி பின்வாங்கியதற்குக் காரணமாகும். அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களுக்கு புலிகள் இயக்கம் நேரடியாகவே கொலை அச்சுறுத்தல் விடுத்திருந்தது. ஜூலை மாத மத்தியில் அப்போதைய சுதந்திரக் கட்சித் தலைவியான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்த இந்திய அதிகாரிகள் வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு உதவியும் ஒத்தாசையும் வழங்குமாறு கோரினர். இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு திருமதி பண்டாரநாயக்கா தனது கடும் எதிர்ப்பையும் அதிருப்தியையும் தெரிவித்தார். இலங்கையின் அரசியல் யதார்த்த நிலைகளை ராஜிவ் காந்தியினால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று கூறிய திருமதி பண்டாரநாயக்கா, எப்படியாவது தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதே ஜெயவர்த்தனாவின் ஒரே நோக்கமென்றும் தெரிவித்தார். 1988ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஜனாதிபதியாக ஜெயவர்த்தனாவினால் பதவி வகிக்க முடியாவிட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சியை தொடர்ந்தும் ஆட்சியில் வைத்திருப்பதே அவரின் நோக்கமென்றும் திருமதி பண்டாரநாயக்கா கூறினார்.

புலிகள் இயக்கத்தின் சீர்குலைவு நடவடிக்கைகளை நன்கு புரிந்து கொண்ட இந்திய அரசாங்கம், அவர்களுக்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது. 1988ஆம் ஆண்டு ஜூலை மாதம் தமிழ் நாட்டில் தங்கியிருந்த பெருந்தொகையான புலி இயக்க உறுப்பினர்களை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறைக்குள் தள்ளியது.

இதற்கிடையில் தேர்தலில் போட்டியிடப் போவதில்லையென்று அறிவித்து, வேறெவரும் போட்டியிடக்கூடாது என்று மிரட்டிய புலிகள் இயக்கம் வடக்கு, கிழக்கில் தனது வன்செயல் செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தியது. இந்தியப் படைகளின் அத்துமீறல்கள் பற்றி ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வந்தன. இந்த அத்துமீறல்கள் பற்றி விசாரிக்கும் பொறுப்பு அப்போது கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முதலாவது காரியதரிசி திருமதி பிரிம்றோஸ் தர்மாவிடம் வழங்கப்பட்டிருந்தது. இக்குற்றச்சாட்டுகளில் சில உண்மையானவை என்றும் வேறு சில போலியானவை என்றும் அவர் அப்போது ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியொன்றில் குறிப்பிட்டிருந்தார். ஒக்டோபர் 2ஆம் திகதி வேட்பாளர்கள் நியமனப் பத்திரம் தாக்கல் செய்வது ஆரம்பிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், ஒக்டோபர் 6ஆம் திகதி வரை எவருமே நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப். போன்ற இயக்கங்கள் தமக்கிடையே தேர்தல் உடன்பாடுகளைச் செய்து கொண்டன. வடக்கிலுள்ள யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் ஈ.பி.ஆர்.எல்.எப்.பும் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஈ.என்.டி.எல்.எப்.பும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன. வடமாகாணத்தில் வேறு எவருமே வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யாததால், இந்த இரு இயக்கங்களையும் சேர்ந்த 36 வேட்பாளர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர். கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு ஈ.பி.ஆர்.எல்.எப்., ஐ.தே.க., முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவை வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன. திருமலை மாவட்டத்தில் ஐ.தே.க.வின். வேட்புமனுப் பட்டியல் நிராகரிக்கப்பட்டது.

(தொடர்ந்து வடியும்....)

# நள்ளிரவு மல்லிகை




விளக்குத் தண்டை கையில் எடுத்த கோவிந்தனையே குமார் கவனித்த படி இருந்ததால் சரியான தருணத்தில் விலகி, தப்பினார். மறுபடியும் தாக்க முற்பட்ட போது குமார் அவனைப் பிடித்து பின்னுக்குத் தள்ளினார்.

பிரேம் செய்யப்பட்ட பஞ்ச லோகத்தட்டை எடுத்து கோவிந்தன் மீது எறிந்தார். அவன் மல்லாந்து விழுந்தான். எழுந்தவன் வாசலைத்தாண்டி ஓடினான்.

நள்ளிரவு தாண்டியதும் ஸ்ரீதேவி வந்தாள். விபரத்தை அறிந்த அவள் யோசனையில் ஆழ்ந்தாள்.

"பிரபாகரனை ரொம்ப ஜாக்கிரதையா கவனிக்கனும். அவன் உண்மையில இப்ப பிரபாகரனே இல்லை!" - ஸ்ரீதேவி கூறினாள்.

"நீ சொல்றது புரியலை!"

"அவனுக்குள்ள என்னமோ ஒரு மாற்றம் உண்டாகியிருக்கு. நான் ஏற்கனவே அவனை வேறொரு இடத்துல சந்திச்சேன். அவன் என்னைத் தாக்க வந்தபோது அவனோட கையைப் பிடிச்சு இழுத்துட்டேன்."

"உனக்குமா தொல்லை கொடுத்தான்?"

"ஆமாம், இது என்னமோ எதிர்பாராம நடந்ததுன்னு நினைச்சுத்தான் உங்ககிட்டச் சொல்லலை. அவனுக்குள்ள புகுந்திட்டிருக்கிற சக்தி என்னன்னு நாம கண்டு பிடிக்கணும்."

"அதுக்கு என்ன வழி?"

"நீங்க சுதர்சன இயந்திரத்தை எறிஞ்சதனாலதான் அவன் கீழ விழுந்தான். அதனால ஏதோ ஓர் அபார சக்தி அவன் உடம்புல குடியிருக்குங்குறது நிச்சயம். அந்தச் சக்தி ஒருவேளை கோவிந்தனா இருக்குமோ?" - ஸ்ரீதேவி கேட்டாள்.

"அப்படியும் நடக்குமா?"

"ஜயந்தன், பிரபாகரனோட உடம்புக்குள்ள இரத்த ரஷஸை ஏவி விட்டிருக்கணும்."

"அப்போ பிரபாகரன்?"

"அதைத்தான் நானும் யோசிக்கிறேன். எதுக்கும் நாம ஒரு தடவை திருமேனியைப் போய்ப் பார்த்து சந்தேகத்தை நிவர்த்தி பண்ணிக்கலாம். அதுக்கு நீங்கதான் போகணும்!"

"அப்படியே செய்யுறேன்."

"இன்னும் கொஞ்ச நேரத்துல பொழுது விடிஞ்சுடும்." -ஸ்ரீதேவி சொன்னாள்.

குமார் படுக்கையறைக்குள் நுழைந்தார்.

தனிமையில் படுத்திருந்த குமார் சிந்தனையில் ஆழ்ந்தார்.

**எழுதுவது**
**சிவன்**

பிரபாகரனிடம் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி ஸ்ரீதேவி சொன்னதை அசைபோட்டபடியே படுத்திருந்தார். நேரம் கடந்து கொண்டேயிருந்தது. அவருக்கு உறக்கம் வரவில்லை.

கடைசியில் களைப்படைந்த கண்ணிமைகள் தானே மூடிக் கொண்டன.

விடிந்து -வெகு நேரமான பிறகுதான் குமார் கண்விழித்தார்.

குளித்து, காலைக் கடன்களை முடித்துவிட்டு நேராக பிரபாகரனின் வீட்டுக்குப் போனார். அங்கு பிரபாகரனின் அம்மா மட்டும் தனியாக இருந்தார். வராந்தாவில் உட்கார்ந்தவாறு அவர் யாரையோ எதிர்பார்ப்பது தெரிந்தது.

"என்ன திருமேனி, அவனை எங்கேயாவது பார்த்தீங்களா?" - அந்தக் குரலில் கனமான சோகம் தெரிந்தது.

"நானும் அவனைத்தாம்மா தேடிட்டு வர்றேன். இங்கே வரலை இல்லையா?"

"ராத்திரிகூட அவன் வரலை. முதல் நாள் ராத்திரி வந்தான். பகல்லதான் ஆளு தட்டுப்படுறதே இல்லையே, உங்களுக்குள்ள ஏதாவது சண்டையா என்ன?"

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை. அவனை நேரில பார்த்தாத்தானே அதையும் விசாரிக்க" பேசியவாறே வராந்தாவில் அமர்ந்தார் குமார்.

"இட்லி எடுத்து வைச்சிருக்கேன். வாங்க



சாப்பிடலாம். நீங்க ரெண்டு பேரும் எனக்குப் பிள்ளைங்கதான்." அம்மா பரிமாறுவதற்காக எழுந்து உள்ளே போனார்.

குமார் காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டார்.

அம்மாவின் துயரத்தில் அவரும் சேர்ந்து பங்குகொண்டார்.

ஸ்ரீதேவி சொல்லியதுபோல் பிரபாகரனின் உடம்புக்குள் ஏதாவது ஆவி புகுந்திருந்தால் அதை விரட்டியே தீரவேண்டும் என்று குமார் தீர்மானித்தார். அதனால் தேவதத்தன் நம்பூதிரியைப் பார்க்கப் போனார். அவரைப் பார்த்து எல்லா விபரங்களையும் தெரிவித்தார்.

"நீங்க சொல்றது உண்மையா இருந்தா பகல் நேரத்துல அவன் எங்க இருக்கான்னு கண்டுபிடியுங்க. அதைச் செஞ்சுட்டிங்கன்னா உங்க நோக்கம் நிறைவேறிடும்."

"எங்கேயெல்லாமோ தேடிப் பார்த்துட்டோம். ஒண்ணும் தெளிவாத் தெரியலை. அவனோட சொந்த வீட்டுக்கே அவன் வர்றது இல்லையே."

"எப்படி இருந்தாலும் பகல் நேரத்துல அவன் எங்கேயாவது தங்கித்தான் ஆகணும். சரி, நான் வேறொரு வழியில பார்க்கிறேன்!" என்றவர் வீட்டுக்குள் போய் ராசிப்பலகை மற்றும் சோழிப் பையை எடுத்து வந்தார்.

பலகையைச் சரியான திசையில் பொருத்தி, தேவஸ்தானங்களிலும் குருஸ்தானங்களிலும் சோழிகளை வைத்தார்.

கைப்பிடிச் சோழியைக் குலுக்கிப் போட்டார்.

எண்ணினார்.

சற்றுநேரம் யோசனையில் ஆழ்ந்து விட்டு மறுபடியும் அதையே தொடர்ந்தார். அவரது முகத்தில் சந்தேகத்தின் அலைகள் உயரத் தொடங்கின.

"பிரபாகரன் தற்சமயம் இடமில்லாமல் அலைந்து திரிகிறான்." - திருமேனி கடைசியாகச் சொன்னார்.

"இப்படிச் சொன்னா எப்படி?"

"பிரபாகரனோட ஆத்மா சரியான போக்கிடம் இல்லாம அலைஞ்சிட்டிருக்கு."

"என்ன சொன்னீங்க, ஆத்மாவா?" - குமார் வியப்புடன் கேட்டார்.

"ஆமாம்... அதுவேதான். நீங்க இப்போ பார்க்கிற பிரபாகரன் உண்மையான நபரே இல்லை. தெளிவாகச் சொன்னால் அது பிரபாகரனின் உடம்பு மட்டும் தான்."

"புரியலையே நீங்க சொல்றது?"

"பிரபாகரனைக் கொலை பண்ணின பிறகு அந்த உடம்புல வேறு ஏதோ ரஷஸை ஏவி விட்டிருக்காங்க. அதனால் தான் அவனால் பகல் நேரத்தில் நடமாட முடியாமல் இருக்கிறது."- திருமேனி விளக்கினார்.

"அப்ப நான் என்ன தான் செய்யணும்?" - குமார் கேட்டார்.

"உண்மையில் இது ஒரு பெரிய பிரச்சினை தான். பிரபாகரனோட உடம்பை நாம ஏதாவது செஞ்சா, அது பிரபாகரனையே கொன்னுட்டதாகத்தான் அர்த்தம். நீங்க ரெண்டு பேரும் நண்பர்களா இருந்ததால அவங்க அம்மாவும் உங்களைப் பழி சொல்லுவாங்க. இதையெல்லாம் நாம் சொன்னா, பகுத்தறிவுக்கு ஒவ்வாத மூடத்தனம்னு கேலிதான் செய்வாங்க!" - தேவதத்தன் நம்பூதிரி கூறினார்.

"அதனால...."

"நான் முயற்சி பண்ணிப் பார்க்கிறேன்- பிரபாகரனைக் கொண்டுவர முடியுதான்னு."

"இதுவும் புரியலை!" - குமார் அவரது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"அதுக்காக நாம ஒரு ஹோமம் நடத்தணும். அலைஞ்சு திரிஞ்சுக்கிட்டிருக்கிற பிரபாகரனோட ஆத்மாவை ஆவாஹம் பண்ணனும்."

(வாசனை வீசும்....)

மனதுக்கு நிம்மதி


# பனிக்குகையில் பருவப் பெண்!

'**பறவை** இறகைப் போல மனசை எப்போதும் லேசாக வைத்துக்கொள்வது எப்படி?'

இந்தக் கேள்விக்கு மட்டும் விடை தெரிந்துவிட்டால், உலகில் நடக்கும் பாதிச் சண்டைகள் உடனடியாக ஓய்ந்து போகும்.

ராமு, சோமு இருவரும் ஆருயிர் நண்பர்கள். ஒரு நாள், அவர்கள் கடற்கரைக்குப் போயிருந்தார்கள். அங்கே ஏதோ ஒரு அற்ப காரணத்துக்காக இருவருக்கும் கருத்து வேறுபாடு தோன்ற, கோபத்தில் சோமுவை ராமு பளார் என்று கன்னத்தில் அறைந்து விட்டான். இதைச் சற்றும் எதிர்பார்க்காத சோமு மிகுந்த வருத்தத்துடன் தனியாகச் சென்று உட்கார்ந்துகொண்டு, "இன்று என் நண்பன் ராமு என்னை அடித்துவிட்டான்" என்று கடற்கரை மணலில் எழுதினான். சிறிது நேரத்தில் கடலலை வந்து அதை அழித்து விட்டது.

மனவேதனையோடு உட்கார்ந்திருந்த சோமுவை திடீரென ஒரு பெரிய கடலலை வந்து இழுத்துப் போயிற்று. இதைத் தொலைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த ராமு, ஓடோடிச் சென்று தன் உயிரையும் பொருட்படுத்தாது கடலில் குதித்து சோமுவைக் காப்பாற்றினான். ராமுவை நன்றிப் பெருக்குடன் பார்த்த சோமு அருகில் இருந்த ஒரு பாறையில் "இன்று நண்பன் ராமு என் உயிரைக் காப்பாற்றினான்" என்று செதுக்கி வைத்தான்.



அடுத்தவர்கள் நமக்குச் செய்யும் தீமைகளை கடற்கரை மணலில் எழுத வேண்டும். அடுத்தவர்கள் செய்யும் உதவிகளைப் பாறையில் செதுக்கவேண்டும்.

அடுத்தவர்கள் நமக்கு இழைக்கும் தீமைகளை மறக்காமல் மனதில் சுமந்துகொண்டு இருந்தால், அந்த நினைவுகளே நமது கால்களில் கட்டப்பட்ட இரும்புக் குண்டுகள் மாதிரி நம்மை நகரவிடாமல் செய்துவிடும். மாறாக, அடுத்தவர்கள் நமக்குச் செய்த நல்ல விஷயங்களை நாம் அடிக்கடி நினைவுகூர்ந்தால் நமக்கு உதவி செய்யப் பலர் இருக்கிறார்கள் என்ற உற்சாகத்தில் மனசு காற்றில் மிதப்பது மாதிரி லேசாக இருக்கும்.

மனம் லேசாக இருப்பதால் பல நன்மைகள் உண்டு. மனதை ஒருமுகப்படுத்தி, குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப் பற்றிச் சிந்திப்பது சுலபமாகும். சிந்தனையை ஒருமுகப்படுத்துவது என்று சொல்லும் போது எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது.

சித்த வைத்தியர் ஒருவர் பலவிதமான நோய்களுக்கு மருந்து கண்டுபிடித்திருந்தார். பிற நாடுகளில் இருந்த வைத்தியர்களெல்லாம் இவரைத் தேடிவந்து யோசனை கேட்டுப் போனார்கள். குறிப்பிட்ட ஒரு வியாதிக்கு மருந்து கண்டுபிடிப்பதைத் தன் வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு, இரவு பகலாகப் பல ஆண்டு காலம் ஆராய்ச்சியில் ஈடுபட்டார் அந்தச் சித்த வைத்தியர். ஏறக்குறைய 95 சதவிகிதம் அதில் வெற்றியும் பெற்றுவிட்டார். இன்னும் ஒரே ஒரு மூலிகை மட்டும் கிடைத்து விட்டால் போதும்... அவரின் ஆராய்ச்சி பூர்த்தியாகிவிடும். ஆனால், அந்த அபூர்வ மூலிகை எங்கே இருக்கிறது என்று அவரால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. இந்த நிலையில் அந்தச் சித்த வைத்தியர், துறவி ஒருவரைச் சந்தித்தார்.

'நீ தேடும் மூலிகை எங்கே இருக்கிறது என்று ஒரே ஒரு மகா சித்தருக்கு மட்டும் தான் தெரியும். இமயமலையின் உச்சியில் உள்ள ஒரு பனிக்குகையில் தவம் இருக்கும் அந்த மகா சித்தர் வருடத்துக்கு ஒரு முறைதான் குகையைவிட்டு வெளியே வருவார். அப்போது அவரைச் சந்தித்தால், நீ தேடுகிற மூலிகை எங்கே கிடைக்கும் என்ற கேள்விக்கான பதில் உனக்குத் தெரிய வரும்.' என்றார் அந்தத் துறவி.


தொண்ணூறு வயது முதியவர் இந்தச் சித்த வைத்தியர். என்றாலும், தன் வாழ்க்கை இலட்சியத்தை நிறைவேற்றியே தீருவது என்கிற உத்வேகத்தில் அவர் இமயமலைச் சித்தரை நோக்கி உடனடியாகத் தன் பயணத்தைத் தொடங்கி விட்டார்.

அப்போது 'வைத்தியரே, ஒரு முக்கியமான விஷயம். அந்த மகா சித்தர் நீ கேட்கும் ஒரே ஒரு கேள்விக்குத்தான் பதில் சொல்வார். இதை நன்றாக நினைவில் நிறுத்திக் கொண்டு, அதற்கேற்ப அவரிடம் கேள்வி கேள்" என்று சொல்லி அனுப்பினார் துறவி.

கடும் பனி, காற்று என எல்லாச் சோதனைகளையும் கடந்து பல மாதங்களுக்குப் பிறகு, அந்த மகா சித்தர் தவம் இருக்கும் பனிக்குகைக்கு வெளியே சென்று நிற்கிறார் இந்தச் சித்த வைத்தியர். பல நாட்கள் காத்திருந்த பிறகு, அந்தக் குகையில் இருந்து மகா சித்தர் வெளிப்பட்டார். என்ன ஆச்சரியம்! அந்தச் சித்தர், இவர் எதிர்பார்த்தது போல் தாடி வைத்த பெரியவரல்ல! பருவம் பொங்கும் ஓர் அழகிய இளம் பெண்!

இப்படியும் ஒரு சித்தரா என்று வியப்பில் ஆழ்ந்த அந்த வைத்தியர், அந்த இளம் பெண்ணைப் பார்த்து, "உங்களுக்குத் திருமணமாகிவிட்டதா?" என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண் சித்தர் 'இல்லை' என்று பதில் சொல்லிவிட்டு, வைத்தியரின் அடுத்த கேள்விக்குக் காத்திருக்காமல் மீண்டும் குகைக்குள் சென்றுவிட்டார்.

குறிப்பிட்ட ஒரு வியாதிக்கு மருந்து கண்டுபிடிப்பதை தன் வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு



வாழ்ந்ததோடல்லாமல், இந்தத் தள்ளாத வயதிலும் பல இன்னல்களைக் கடந்து, உயிரைப் பணயம் வைத்து, இமயமலை ஏறிய அந்த வைத்தியரின் சிந்தனை ஒரே ஒரு கணம் தடம் புரண்டதால், வாழ்நாள் முழுவதும் அவர் பட்ட கஷ்டம் பாழாய்ப் போனதே!

நம் இலட்சியத்தை அடைய உழைப்பு, விடாமுயற்சி எல்லாமே மிக மிக அவசியம். என்றாலும், அந்த உழைப்பும் முயற்சியும் நாம் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவேண்டுமானால் ஒருமுகப்பட்ட சிந்தனை கண்டிப்பாகத் தேவை!

(தொடர்ந்து வரும்.....)

# மின்சாரக் கதைகள்

- வழங்குவது றாஹில்

## ஒரு அழகியின் மொழி!

'எந்தக் கவிஞரின் கவிதைகள் உங்களுக்குப் பிடிக்கும்...' என்றாய் நீ.

'கடவுள் எழுதிய ஒரு கவிதைதான் எனக்குப் பிடிக்கும்' என்றேன் எனக்குள்.

'என்ன...யோசனை...?' என்றாய் நீ.

'உன்னைத் தவிர வேறு என்ன யோசனை எனக்கு?' மீண்டும் மனதுக்குள் பேசினேன்.

'உங்களிடம் கவிதையா சொல்லச் சொன்னேன்...?'

'கவிஞரைத்தானே கேட்டேன்...'நீ மீண்டும் சின்னக் கோபம் கலந்தாய்.'

'கவிதை ஒன்று கவிஞன் பற்றிக் கேட்கிறது' என்றேன் மீண்டும் மனதுக்குள்.

'அது சரி...உனக்குக் கவிதைகள் பிடிக்குமா?' என்றேன் கவிதையிடம்.

'பிடிக்குமா...வா...!?...பாரதி மீசையில்லை எனக்கு...ஆனா...அவன் போல் ஆக ஆசையிருக்கிறது...தெரி...யுமா...?' என்றாய் நீ.

'அப்போ...நீ படைப்பாளி...'என்றேன்.

நீ மௌனம் புரட்டிக் கொண்டிருந்தாய்.

உன் கண்களே இரு வரிக் குறள் போலிருக்கிறது.

உன் போல் தேன் இதழ் கண்டுதான் வள்ளுவன் தமிழ் செய்திருப்பான்.

உன் இரு புருவங்களையும் இணைத்துப் பார்த்தேன்; எனக்குள் காமத்துப்பால் ஊறியது.

என் நிமிடங்கள் உன்னைப் பற்றி உரையாற்றின.

'நான் எழுதிய ஒரு கவிதை கூறட்டுமா...?' உன் மௌனம் உடைத்தாய் நீ.

என் இதயம் திறந்த வானமானது.

என் மனதுக்குத் தாகம் எடுத்தது, உன் மொழி பருகுவதற்கு!

'செடிகள் கர்ப்பமடைவதை
பூக்கள் தான்
நிரூபிக்கின்றன.
அவை
பூக்களால் பேசுகின்றன
மலடு
இல்லையென்று!
செடி
பூக்களால்தானே
பூப்பு அடைகிறது.
செடிக்கும்
மனசு உண்டு என்பதை
பூக்கள் தான்
சொல்லுகின்றன.
பூக்கள்
செடி எழுதுகின்ற
காதல் கடிதங்கள்!'

'நீ கவிதை சொன்னாயா?!'

ஒரு அழகியிடம் தமிழ் பேரழகு பெற்றது.

உன் சொற்கள் பூக்களுக்கே புன்னகை வழங்கின.

நீ பூக்கள் பற்றிப் புகழ்ந்ததும் என் மனது உன்னை வணங்கியது.

தேன் பூவில் இருந்துதானே புறப்படுகிறது. ஆனால், தேனில் இருந்து பூக்கள் உண்டானதே.

'கவிதை எப்படி...?' என்றாய் நீ.

'எந்தக் கவிதை...?' என்றேன் நான்.

'என்ன...கிண்டலா...?' என்றாய் நீ.

'இரண்டு கவிதைகளை உயிரோடு பார்த்த திருப்தி எனக்கு...அதனால்தான்...எந்தக் கவிதை என்றேன்....'

நீ உன் இதயத்தை உன் முகத்திற்கு நகர்த்தினாய்.

மலர்கள் மகிழ்ச்சி சூடினாய்.

உனது ரசனை மழைதான் எனக்குள்ளும் பெய்கிறது.

உன் பார்வை கவிதை மாளிகை.

உன் வார்த்தை அறுசுவை வரைகின்ற தூரிகை.

நீ என்னவளானால் நான்தான் இந்த உலகின் மன்னனாகி விடுவேன்.

முத்தங்களால் தாஜ்மஹால் கட்டுவேன் நான்.

உயிரிலிருந்து ஒலிக்கின்ற காதல் சத்தங்களால் உனக்குக் கடிதம் செய்திடுவேன்.

என் காதல் அச்சானது.

நீ எனக்குத் தூரத்து உறவு என்றாலும் எனது அத்தனை உறவுகளையும் விட எனக்குள் நிரம்பி விட்டாய்.

'காதலைப் பற்றி ஒரு கவிதை சொல்லட்டுமா...?'

என்றாய் நீ.

அமுதக் கடல் குடிப்பதற்குக் கேட்கவா வேண்டும்?

'காதல் வாசல்
கண்களென்றால்
குருடனுக்கு காதல் ஏது!?

காதலுக்கு
வாசல் தேவையில்லை
காதல்
வாசமாக இருப்பதால்!'

நீ, காதல் சமுத்திரத்தை வார்த்தைகளால் பிடித்துக் காட்டினாய்.

'இப்போ சொல்லட்டுமா...எனக்குப் பிடித்த கவிஞர் யாரென்று...?'

நீ உன் கண்களால் ஆவல் படைத்தாய்.

நான் உன்னைக் காட்டினேன் காதலால்.

நீ புரிந்து கொண்டு முத்தம் செய்தாய் கண்களால்!

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 190க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

சின்னு கனகசபாபதி, மா ஓயா தோட்டம், தெகியோவிட, அவிஸ்ஸாவளை.

## பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. த. அபிலாஷ், இல. 73, இரத்தினகரா பிளேஸ், தெஹிவளை.
2. எம். பஸ்மினா முஜர்ஹித், மக்குளூற்று, வெள்ளைமணல்.
3. எம். எல். எப். றிஸ்வானா, 547, பெண்கள் பாடசாலை வீதி, ஏறாவூர் - 03
4. கு. பிரியதர்சினி, 29/20, வினாயகர் வீதி, சேற்றுக்குடா, மட்டக்களப்பு.
5. தவம் கமலநாதன், 16/1 கோணர் வீதி, மட்டக்களப்பு.
6. கே. எம். எஸ். ஆப்டீன், 36, போல்ஸ் வீதி, U.C. விடுதி, புத்தளம்.
7. எம்.சுந்தரேசன், 49, பர்க் வீதி, ஹட்டன்.
8. என்.ஹமீட், 48, ஜயந்தி மாவத்த, அநுராதபுரம்.
9. க.நிரஞ்சன், 22, பிரதிபிம்பராம வீதி, களுபோவில.
10. சி.சரோஜினி, விஷ்ணுகோவில் வீதி, காரைதீவு - 10.

## குறுக்கெழுத்துப் போட்டி 192

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | ■ | 10 | 11 | ■ |
| 13 | 14 | 15 | ■ | ■ | 18 |
| ■ | 20 | 21 | ■ | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | ■ |
| 31 | ■ | ■ | 34 | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1.இலங்கையின் முக்கிய வாசஸ்தலம் ஒன்று.
07.இடையூறு அல்லது கெடுதல் (திரும்பியுள்ளது).
10.உடல் உறுப்புகளில் ஒன்று (திரும்பியுள்ளது).
13.பரம்பரை அல்லது சந்ததி (குழம்பியுள்ளது).
20.செல்வம் என்றும் பொருள்படும் (திரும்பியுள்ளது).
23.பயிர்களைத் தாக்கும் நுண்ணுயிர்கள் (திரும்பியுள்ளது).
25.ஆர்யா நடித்து வெளியான திரைப்படம் ஒன்று (குழம்பியுள்ளது).
34.கடவுள் அல்லது தோன்றிய வரலாற்றது (திரும்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

01. புல்லினங்களில் ஒன்று.
02. பவனி வருதல் என்றும் கூறலாம் (குழம்பியுள்ளது).
04. பெண்.
05. இந்துக்களின் பெண் தெய்வம் ஒன்று (தலைகீழ்).
15. ஒழுக்கம் என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
18. மயில் தோகை (தலைகீழ்).
23. ராகங்களில் ஒன்று (தலைகீழ்).
25. மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட நிலப்பரப்பு (தலைகீழ்).
28. மன்மதனின் நாயகி.

## குறுக்கெழுத்துப் போட்டி 190 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி 1 | மா 2 | ல 3 | ரி 4 | ■ | செ 6 |
| ட் 7 | வி 8 | டை 9 | ■ | கெ 11 | அ 12 |
| சை 13 | ■ | ■ | தா 16 | சி 17 | ■ |
| ■ | வி 20 | க 21 | ட 22 | க 23 | வி 24 |
| றை 25 | ■ | ண 27 | கை 28 | ன் 29 | பு 30 |
| பி 31 | ளா 32 | வு 33 | ■ | ■ | ற 36 |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 07.11.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-192
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# தொ(ல்)லை பேசிகள்...!

சித்திரை மாதம்...சுட்டெரிக்கும் வெய்யில்! தொழில் விடயமாக புத்தளம் சென்ற கரீம், தனது காரியத்தை முடித்துக் கொண்ட கையோடு கொழும்பு திரும்பிட நினைத்தான். "சே...என்ன புழுக்கமடா இது? வர வர நாட்டுல அநியாயம் கூடிக்கொண்டே போகுது போல...அதுதான் இப்படி எரிக்குது!" அங்கலாய்த்துக் கொண்டான். மதியம் இரண்டு



மணியானது. வெப்பம் தாளாமல் மேனி துவண்டது. வியர்வையினால் உடல் பிசு பிசுக்க அவன் அணிந்திருந்த சட்டையும் தொப்பலானது. காற்றும் வீசுவதாய் இல்லை! "ஏஸி பஸ் ஒன்றில் ஏறினால் தேவையில்ல போலும்!" நினைத்துக் கொண்டு குளிரூட்டப்பட்ட றோஸா பேருந்தில் ஏறிக்கொண்டான். அது உடனே புறப்படுமாப்போலில்லை. அதன் குளிரூட்டியும் அரைகுறையாகத்தான் வேலை செய்தது. எரிச்சலடைந்தான். "ம்! இது ஒரு ஏஸியாம்...இதுக்குப் போய் நூற்றிப்பத்து ரூபாவாம்! தண்டம்!! முதல்ல இவனுங்களுக்கு ஒரு முடிவு கட்டியாகணும்!" அவனுக்கு சகிக்க முடியவில்லை. பேருந்தின் இருக்கைகளோ சீரற்ற நிலையிலேயே காணப்பட்டன. சொகுசு பஸ் என்று பெயர் மட்டும்தான், ஒரு மயி...சீற்றமடைந்தான். கால்களை சிரமப்பட்டு மடக்கி உடலை ஒடுக்கி இருக்க வேண்டியிருந்ததனால் கடுப்பானான். குறிப்பிட்ட நேரத்தில் கொழும்பு சென்றாக வேண்டுமென்பதால் பொறுமை காத்தான். சிறிது நேரத்தில் சாரதி வந்து வண்டியைக் கிளப்பினான். அவனது மனதில் தானொரு விமானி என்ற நினைப்பிருந்திருக்க வேண்டும்! எடுத்த எடுப்பினிலேயே வாகனத்தின் வேகத்தைத் துரிதப்படுத்திய விதம் அதைப் புலப்படுத்தியது. அண்மையில் பொல்காவெலையில் பல உயிர்களைப் பலி கொண்ட அந்த அனர்த்தம் ஞாபகத்தில் வரவே, தனியார் பஸ் சாரதிகள், நடத்துனர்கள் மீது கோபமாய் வந்தது. அறுவான்கள்! ஆர் இவன்களுக்கு லைசன் கொடுத்ததப்பா! நாசமாய்ப் போவான்கள்...குடிகாரப் பயல்கள்! திட்டித்தீர்த்தான். எப்படியோ ஒழுங்காய் வீடு போய்ச் சேர்ந்தால் போதுமென்றிருந்தது அவனுக்கு. நடத்துனரிடம் பயணச் சீட்டைப் பெற்றுக்கொண்ட போது என்னப்பா ஏஸியைக் காணோமே? என்றான் ஆற்றாமையினால். பதில் கிடைக்கவில்லை. மேலும் கீழுமாக ஒருமுறை அவனை வெறித்துப் பார்த்துவிட்டு "ஹும்...காசை மட்டும் ஒழுங்காய் வாங்கிக் கொள்ளுங்கோ! புறுபுறுத்தான். இருப்புக்கொள்ளவில்லை. அதுதானேயப்பா! இவையளக் கேட்க ஆளில்லாமல் போட்டுது! வரவர இவையின்ர சேட்டை கூடிப்போட்டுது! பாருமன் மொறைக்கிறான் பொடிப்பிள்ள! ஏதோ சண்டித்தனமெல்லோ காட்டினம்! பின்னிருக்கையிலிருந்து ஒரு குரல் கரீமுக்கு சாதகமாய் ஒலித்தது. சனங்கள் வாயை மூடிக்கொண்டிருக்கிறதனாலதான் இவையள் இப்படி பேய்க்காட்டினம்! குரல் வந்த பக்கம் திரும்பிய நடத்துனர் சும்மா அலம்பாமல் இரும் ஐயா! என்றான் சற்றே உரத்த தொனியில்.

அதிகாலையில் புறப்பட்ட பயணமென்பதால் உடல் சோர்வுற்ற நிலையில் சற்று கண்ணயர முயன்றான் கரீம். பேருந்து நீர்கொழும்பை நெருங்கிக் கொண்டிருந்தது. திடீரென உள்ளே கேட்ட இரைச்சலினால் கண்விழித்த போது அருகிலிருந்த சக பிரயாணி ஒருவர் கையடக்கத் தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருக்கக் கண்டான். அவரது குரல் உச்ச ஸ்தாயில் ஒலித்துக் கொண்டிருந்தது. ஏதோ வீட்டில் சுதந்திரமாக அவர் உரையாடிக்கொண்டிருந்த பாங்கை காண நகைப்புக் கிடமாயிருந்தது. நீண்ட நேர உரையாடலின் பின் அவரது தொலைபேசி மூச்சையுற்றதும் மீண்டும் கரீம் கண்ணயர்ந்தான். பத்து நிமிடங்களில் திரும்பவும் தொலைபேசி அலறல்! இது கரீமின் இடப்பக்கமிருந்தவரின் செல்லிடத் தொலைபேசிக்கு வந்த அழைப்பே! அந்நபரும் ஏதோ மேடைப்பேச்சாளன் போன்ற பாவனை காட்டி பேசியவிதம் பார்க்க வெறுப்பேற்றியது. சக பிரயாணிகள் முகத்தை சுளித்துக் கொண்டனர். அடக்கி வாசிக்கத் தெரியாதவர்களின் அட்டகாசம் கண்டு அருவருப்படைந்தான். இப்போது மற்றொருவர் தனது ஷெல்போனை இயக்கி எவரோடோ தொடர்பினை ஏற்படுத்த இருவரும் ஏட்டிக்குப் போட்டியாக பேசிக் கொண்டிருந்தனர். அட கடவுளே! இது என்ன போன் மேனியாவோ...! ஆளுக்கு ஆள் இப்படி ஷெல் போன் மோகம் கொண்டு அலையிறானுங்களே! இடம் - பொருள் ஏவல் தெரியாமல் இவ்விதம் பொது இடங்களிலும் பயணங்களின் போதும் பிறருக்கு இடையூறாக நடந்து கொள்ளும் விதம் மனித நாகரீகத்திற்கு முரணானதென்பதனை அவர்களுக்கு உணர்த்த வேண்டும் போலிருந்தது அவனுக்கு. கற்றவரும் கல்லாதவரும் ஷெல் போன் மோகத்தில் திளைத்திருக்கும் காலமாகி விட்டது இன்றைய தினம்! அவனுடைய தூக்கமோ முற்றாக கலைக்கப்பட்டு விட்டது. மறுபடியும் பக்கத்து இருக்கையில் இருந்தவரின் ஷெல் சிணுங்கியது. ஹலோ...ஹலோ...! கரீமின் காதிலே சங்கூதினாற் போலிருந்தது.

இறுதிவரை அவனை அவர்கள் தூங்கவே விடவில்லை. மாறி மாறி அழைப்புகள் வருவதும் போவதுமாய் இருந்தன. என்ன கர்மமடா இது! தெரியாத்தனமாய் இவன்களிட்டை மாட்டிக் கொண்டேனே! எண்ணி வருந்தினான். எப்படா கொழும்பு வருமென்று பார்த்துக் கொண்டிருந்தான். நேரகாலத்தோடு வீடு போய் சேர்ந்து விடலாமென்பதாலும் - நெரிசல் தொந்தரவு இல்லாமல் சற்று நிம்மதியாக ஆற அமர இருந்து பயணிக்கலாம் என்ற எண்ணத்தோடும் மக்கள் இவ்வாறான பஸ் வண்டிகளை நாடிச் செல்கின்றனர். ஆனால் அந்நிலையும் மாறிவிட்டது இன்று! நேரில் அனுபவப்பட்டவர்க்கு இந்த உண்மை புரியும்! கையடக்கத் தொலைபேசிக் கலாசாரம் எல்லை மீறி எங்கும் வியாபித்திருக்கும் இந்நாளில், இதுபோல் பல சம்பவங்கள் நடந்து கொண்டுதானிருக்கும்! ஹும்! தொலைபேசியாம் பொல்லாத தொலைபேசி...பெரும் தொல்லை பேசியாய் மாறிவிட்டதே! கரீமின் ஆதங்கத்தை புரிந்து கொண்டாற் போலே சில வினாடிகளில் ஷெல்போன்கள் மௌனமாகிவிட்டன. மழை பெய்து ஓய்ந்தது போலிருந்தது அவனுக்கு. ஆனாலும் என்ன...பாவம் அவனது தூக்கம் கலைந்தது தான் மீதம்!! கண்களை இறுக மூடிப்பார்த்தான் 'ம்ஹும்' தூக்கம் வருவதற்குள் கொழும்பு மாநகரம் வந்து சேர்ந்தாயிற்று.

(யாவும் கற்பனை)

**இவ்வாரச் சிறு கதைகள்**

# அன்புள்ள அக்கா

சல சலவென கற்களுடன் போராடி வெற்றி கண்டவளாய் கற்களையும் மீறி ஒய்யாரமாய் பாய்ந்து கொண்டிருந்தாள் அழகிய அந்த நீரோடைத் தேவதை. அழகிய அந்த ஆற்றங்கரையிலே ஒரு பாறையின் மேல் அமைதியாக அமர்ந்திருந்தான் ராஜா. கதிரவனின் கதிரொளி கூட தெரியாத வண்ணம் பெரிய மரங்கள், பறவைகளின் பேச்சுக்கள், இறைவனின் படைப்பில் கண்டு பிரமிக்க முடியாத அந்த அமைதியின் உறைவிடம். ஆனாலும் அந்த இயற்கையின் அழகிலும் அவனது எண்ண அலைகளை அவன் உடற்கலங்களனைத்தும் அலசியலசி ஆராய்ந்த வண்ணமிருந்தன.

இலங்கையின் தலையிலே அமைந்துள்ள யாழ்ப்பாணம் எனும் பட்டணத்தில் உடுவில் எனும் கிராமத்தில் ஓர் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவன்தான் ராஜா. அவன் சிறுவயதிலேயே பெற்றோரை இழந்தான். இதனால் கஷ்டங்களுடன் தன்னுடைய நான்கு பெண் சகோதரங்களுடன் வாழ்ந்து வந்தான். இளமைப்பருவமதில் வறுமையில் வாடியதால் உயர் தரம்படித்துவிட்டு தனியார் கல்வி நிறுவனத்திலே ஆசிரியராகத் தொழில் புரிந்தான். சிறுவயதிலிருந்தே கஷ்டத்தையும் துன்பத்தையும் உலகமாகக் கண்டவன், தன் வாழ்க்கையையே ஓர் இருட்டறையாக எண்ணினான். தனது சகோதரர்களை எப்படி கரை சேர்ப்பது என காலத்தோடு போராடிய வண்ணம் இருக்கையில், வந்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி தனது இரு சகோதரிகளையும் திருமணம் முடித்து வெளிநாடு அனுப்பி வைத்தான். அத்தோடு முடியவில்லை இன்னும் இரண்டு பேர். அவனுக்கு வாழ்க்கை ஒரே போராட்டம் தான்.

இந்த நேரத்தில் சித்தப்பாவின் உதவியால் ஓர் அரசசார்பற்ற நிறுவனத்தில் ஓர் வேலை கிடைத்தது. அன்று முதல் நாள் அலுவலகம் நோக்கி தன்னுடைய துவிச்சக்கர வண்டியிலே புறப்பட்டான்.

முதல் நாள் அலுவலகத்தில் எல்லோரும் அறிமுகமானார்கள். ராஜாவோடு கூட ஓர் பெண்ணும் வேலைக்குப் புதிதாகச் சேர்ந்து கொண்டாள். அவள் தான் ஏமி. ராஜாவை விட வயதில் கூடியவள், பல்கலைக்கழகத்திலே பட்டம் பெற்றவள். பணத்திலும் குணத்திலும் உயர்ந்தவள். ராஜாவும் ஏமியும் அறிமுகமாகிக் கொண்டார்கள். அன்றில் இருந்து சிறந்த நண்பர்களாகப் பழகிய இவர்கள், நாட்கள் செல்லச் செல்ல அன்பின் ஆழத்தைப் பகிர்ந்து கொண்ட அந்த உறவு சகோதர பாசமாக உருவெடுத்தது. இருவருக்கிடையிலே ஏதோ ஒரு இரத்த பாச உணர்வு அவர்களை அறியாமலேயே உறவாடியது. ராஜா தன் வாழ்க்கையில் ஏற்பட்ட இன்ப துன்பங்களை எல்லாம் ஏமியோடுப் பகிர்ந்து கொண்டான். ஏமியும் அவனுக்கு ஓர் நல்ல தாய் போல் ஆறுதலும் அறிவுரையும் கூறி அவனது எதிர்கால வாழ்க்கைக்கு அத்திவாரமிடலானாள்.

அன்று ஒருநாள் அலுவலகத்தினூடாக ஓர் சுற்றுலாவுக்கு கண்டிக்குச் சென்றிருந்தனர். தன் வாழ்க்கையிலே முதன் தடவையாக அந்த இயற்கை எழில் கொஞ்சி விளையாடும் கண்டி எனும் மலைநாட்டினைக் கண்டு ரசித்தான் ராஜா. இயற்கை அழகினைக் கண்டு தன் மனதை பறிகொடுத்தான் ராஜா. இயற்கை அழகினில் மட்டுமல்ல, தாம் தங்கியிருந்த அலுவலகத்திலே பணிபுரியும் வையகத்தில் காண்போரும் கலங்கிடும் அழகு தேவதை சுஜியிடமும் தான். சுஜியைக் கண்டதும் தன் விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டான். ராஜாவின் இளமையும் அழகும் கவர்ச்சியான பேச்சையும் கண்ட சுஜி, தன் சம்மதத்தையும் உடனடியாகச் சொல்லி விட்டாள். இருவரும் காதலின் அர்த்தம் புரியாமல் மகிழ்ந்தனர். அது மட்டுமல்ல, தைரியம் கொண்டவனாய் தன் காதல் விடயத்தை அக்கா ஏமியிடமும் கூறிவிட்டான்.

அக்கா, இனி நான் சுஜியைத் தான் மணம் முடிக்கப் போறன். அவள் வடிவான பிள்ளை என்றான். அவனுக்கு அவள் அழகு மட்டுமே கண்களில் பட்டது. ஆனால் ஏமிக்கோ அவன் எதிர்காலம் தான் மனதில் சுழியோடியது.

"இஞ்ச வா கழுதை" யாரிடம் என்ன சொன்னாய் என்று காதில் ஒரு முறுக்கு கொடுத்து விட்டு ஏச ஆரம்பித்தாள். கண்களில் கோபம், வார்த்தையில் வேகம், மனதில் பாசம் இத்தனையையும் தன்னகத்தே கொண்டவளாய் தன் அன்புத் தம்பியின் மேல் வார்த்தைகளைக் கொட்டினாள் ஏமி. ராஜாவோ அவள் முன் கைகட்டி வாயடைத்து நின்றான். ஏசி முடிந்ததும் அவள் கண்களில் இருந்து கண்ணீர் கொட்ட, அன்புத் தம்பியைத் தழுவியவாறு ஆறுதலும் அறிவுரையும் கூறி, இது தப்பான செயலடா. உன்னை நம்பி இருக்கிற உன்ர இரு சகோதரங்களை என்ன செய்யப் போகிறாய். அது பரவாயில்லை உன்னையே உலகமாகக் கொண்டு இருக்கிற டிலானிக்கு துரோகம் செய்யக்கூடாது என்று கூறினாள். இப்பிடி என்றா நீ முதல் டிலானியைக் காதலிச்சு இருக்கக் கூடாது என்றாள்.

அன்போடு ராஜா தன் பிழையை உணர்ந்தவனாய் அக்காவிடமும் சுஜியிடமும் மன்னிப்புக் கேட்டான். இது மட்டுமல்ல, வேறு சில சந்தர்ப்பங்களிலும் அவனது சிறு பிள்ளைத் தனமான செயல்களை உடனடியாகத் திருத்துவாள்.

ராஜா உருவத்திலே பெரியவனாக இருந்தாலும் உள்ளத்திலே குழந்தை என அறிந்த ஏமி, அவனது வாழ்வின் ஏணிப்படிகளாக மாறினாள். அவனது இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு அவன் இருள்மயமான வாழ்க்கையை ஒளிமயமாக மாற்ற ஆரம்பித்தாள். ராஜாவின் வாழ்க்கையில் தாயாக, தந்தையாக, ஆசிரியராக, நல்ல நண்பியாகத், தொடர்கிறாள் ஏமி.

"மனிதனின் வாழ்க்கையில் ஆயிரம் உறவுகள் உண்டு. சில உறவுகள் வந்தவுடன் மறைந்து போகும். சில உறவுகள் வாழ்க்கையில் என்றும் மறக்க முடியாதவையாகி விடும்." இதில் அக்காவும் எனது வாழ்க்கையில் மறக்க முடியாதவள். இவள் போல் நல்ல அக்கா




எல்லோருக்கும் கிடைத்தால்... அவனது கண்களில் ஆனந்தக் கண்ணீர், தனிமையிலே இருந்தவனை தாய் அணைப்பது போன்ற உணர்வு. நிமிர்ந்தான், ஆம் உணர்வல்ல உண்மையாகவே தாய் அணைப்பது போல் "வாட தம்பி என்ன யோசிக்கிறாய்" என்று அழைத்தாள் அக்கா ஏமி.

(யாவும் கற்பனை)

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

## குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

இப்பரந்த உலகில் எத்தனையோ பண்பாடுகள், கலை, கலாசாரங்கள் பரந்துபட்ட அளவில் வேறுபட்டு நின்றபோதிலும், மனித மனங்களுள் பொறாமை என்னும் காழ்ப்புணர்வு அவர்களை அறியாமலேயே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை உளவியாலர்களும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். என்பது வெளிப்படை ஆயினும்,

இதற்கு மாறுபட்ட கருத்துடையோரின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே காணப்படுகிறது என்றால் அதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை அறிவியல் ரீதியாக இதற்குப் பலர் பல கருத்துக்களைச் சொன்ன போதிலும்,

அவரவர் கற்றுக் கொண்ட நூல்களின் வழியே மனம் ஒன்றிப் போய்விடுவதுதான் இதற்கு உண்மையான காரணம் என்பதுதான் பல அறிஞர்களின் கருத்தாக உள்ளது. எதை எடுத்துக் கொண்டாலும், மனதைப் பயிற்றுவிப்பதன் மூலம் தான் அதன் பிரதிபலிப்பையும், அதனால் ஏற்படுகின்ற பயனையும் பெறமுடியும் என்று தெளிவு பெறலாம். தீய எண்ணங்கள் தோன்றுவதற்கு நல்ல நூல்களைக் கற்றறியாமையே காரணம் என்பதும் பொருத்தமானதே.

"அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து" *குறள் : 164*

பொறாமைப்படுதலாகிய தவறான நெறியில் துன்பம் ஏற்படுதலை அறிந்து பொறாமை காரணமாக அறமல்லாதவைகளைச் செய்யார் அறிவுடையார்.

## நினைத்தானோ என்னை?


விக்கிரமனின் கண்கள் அவன் அன்பின் ஆழத்தைக் காட்டி நின்றதைக் கண்ட கீர்த்திவர்மன், "விக்கிரமா! சற்று முன்னர் எரிமலையாகக் காட்சியளித்த நீ, அதற்குள் குழந்தையாகிவிட்டாயே! நெஞ்சில் ஈரமுள்ளவன்தான் அஞ்சாத வீரனாகவும் இருக்க முடியும். இல்லையேல், அவனை வீரன் என்றழைப்பதைவிட வெறியன் என்றுதான் சொல்ல முடியும்." என்று கூறிய பொழுது "அண்ணா! உங்கள் நண்பர் வீரத்துக்கு வரைவிலக்கணம் கூறுவதில் பெரும் வல்லவர் போலிருக்கிறதே! வீரத்துக்கு மட்டும் தானா? அல்லது...."

"வீரத்துக்கு மட்டுமல்ல தங்கையே! இவன் விவேகத்திலும் பெரும் வல்லவன். இல்லையென்றால் என்னையே ஏமாற்றப் புறப்படுவானா?" என்றவன், உவகை மிகுதியால் அட்டகாசமானதொரு சிரிப்பைச் சிதறினான். அத்தோடு அங்கயற்கண்ணியும் கீர்த்திவர்மனும் சேர்ந்து சிரிக்க, அந்தக் கானகமே அதிர்ந்து அமைதியானது.

இத்தனை

### தருவது கற்பகன்

உரையாடலுக்கிடையில், பொழுது போனதே தெரியாமல் இருந்துவிட்டதை உணர்ந்த கீர்த்திவர்மன், "விக்கிரமா! பொழுது எமக்காகக் காத்திருக்காது. புறப்படு." என்று கூறிய பின்தான் தாங்கள் எங்கு நிற்கிறோம் என்பது ஞாபகத்திற்கு வந்தது. "கீர்த்திவர்மா! நாம் மாளிகையைச் சென்றடைவதற்குள் பொழுது மறைந்துவிடும் போலிருக்கிறது!" என்றான் விக்கிரமன். அதை அவன் கூறியபொழுது அவன் முகத்தில் சிறிது கலவரம் தெரிந்தது. கீர்த்திவர்மன், அங்கயற்கண்ணியின் பக்கம் தன் பார்வையைச் செலுத்திய போது, அவள் முகத்திலும் அச்சம் குடிகொண்டிருந்ததைக் கவனித்த கீர்த்திவர்மன், "விக்கிரமா! என்ன யோசனை? புறப்படுங்கள். மாளிகைவரை நான் உங்களுக்குத் துணையாக வருகிறேன்." என்றதும்," உனக்கு ஏன் வீண் சிரமம்" என்று விக்கிரமன் மறுத்த



போது, "அண்ணா!" என்று அங்கயற்கண்ணி அழைத்தாள். விக்கிரமன் திரும்பி அவளைப் பார்த்தான். அவளின் முகத்தில் காணப்பட்ட பய உணர்வு மேலும் அவனைக் குழப்பத்துக்குள்ளாக்கியது.

சில வினாடிகள் அமைதி நிலவியது. பின்பு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாக விக்கிரமன், "கீர்த்திவர்மா! உன்னுடைய விருப்பப்படியே மாளிகை வரை எம்மோடு நீயும் வந்துவிடேன்." என்றதும், அங்கயற்கண்ணியின் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சியைக் கண்ட கீர்த்திவர்மனால், எதுவுமே சரியாகப் புரிந்து கொள்ள முடியாத போதும், அங்கயற்கண்ணியின் முகமலர்ச்சிக்குக் காரணம் தேட முற்பட்டது அவனுள்ளம். மெதுவாகத் தலையை ஆட்டிக் கொண்டான். இதைக் கண்டும் காணாதது போல நின்றிருந்த அங்கயற்கண்ணி, 'நீங்கள் என் வலையில் வீழ்ந்துதான் ஆக வேண்டும்' என்று நினைத்தவள், அவ்விடத்தை விட்டுச் சென்று ரதத்தில் ஏறி அமர்ந்து கொண்டாள்.

கீர்த்திவர்மன், தோழர்களுடன் முன்னே அணிவகுத்துச் செல்ல, விக்கிரமனின் தேர்ச்சக்கரங்கள் உருளத் தொடங்கின. காட்டுப் பாதை வழியே பயணம் தொடங்கியதிருந்து முடிந்த அளவு வேகமாகச் சென்றடைந்துவிட வேண்டும் என்ற எண்ணம் இருந்தபோதும், விக்கிரமனின் அரண்மனையை அடைவதற்குள் இருள் சூழத் தொடங்கி விட்டிருந்தது.

விக்கிரமனையும் அவன் தங்கை அங்கயற்கண்ணியையும் பத்திரமாக அரண்மனைக்குக் கொண்டுவந்து சேர்த்ததில் கீர்த்திவர்மனுக்குப் பெரும் மனநிறைவு தோன்றியிருந்தது.

விக்கிரமனும், அங்கயற்கண்ணியும் மாளிகை வாயிலை அடைந்தபோது அவர்களை எதிர்பார்த்துக் காத்திருந்த காவலர்களும், தோழியரும் அவர்களைச் சூழ்ந்து கொண்டு வரவேற்கத் தயாராக இருந்தனர். ஆனால் புதியவர்களை அவர்கள் அவ்வளவாகக் கவனித்ததாகத் தெரியவில்லை என்பதைக் கவனித்த விக்கிரமன், காவலர்களில் ஒருவனை அழைத்தான். அவன் ஓடி வந்து வணக்கம் செலுத்திவிட்டு நின்றதும், அவனிடம் ஏதோ சொல்ல, "மன்னிக்க வேண்டும் அரசே! நான் அவர்களை முன்பின் அறிந்திருக்கவில்லை. அதனால்தான்...."

"பாதகமில்லை, அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுங்கள்" என்றதும், "உத்தரவு அரசே!" என்றவாறு அவ்விடத்தை விட்டகன்றான். கீர்த்திவர்மனின் வருகை அங்கயற்கண்ணிக்கு என்றுமில்லாதவாறு மனதில் குதூகலத்தை ஏற்படுத்தியிருந்த போதிலும், அது ஏற்படக்காரணம் என்னவென்பதை அவளால் சரியாக உணரமுடியாத நிலையில், கீர்த்திவர்மன் தன்னை விரும்புகின்றானா? அப்படியானால்? இந்தக் கேள்வி அவள் மனத்திரையில் பட்டுத் தெறித்தபோது?...??

*"செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்*
*உறாஅர் போன்று உற்றார் குறிப்பு"*

*அதிகாரம் - 110*
*குறள் - 109*

---

இதெல்லாம் ஒரு பேச்சுவார்த்தையா? இதை இலங்கையிலேயே நடத்தி இருக்கலாமே?

*வை.அகிலன், கொள்ளுப்பிட்டி.*

சரியான கேள்விதான். இதையே ஒரு சிங்களவர் கேட்டால், பேரினவாதி. நீங்கள் கேட்டபடியால் சுயநலவாதி. நான் கேட்டால், துரோகிவாதி. இப்பொழுதெல்லாம் கேள்வி கேட்டவரை எப்படி அடக்கலாம்? என்பது தான் முதல் யோசனையே தவிர, பதில் கூறுவதில் இல்லை. என்னைப் பொறுத்தவரையில் சர்வதேச சமூகத்துக்குப் பலத்த அடி.


ஆசிய அணிகள் மினி உலகப் போட்டியில் இருந்து இப்படி வெளியேற்றப்பட்டு விட்டனவே?

*வை.எம். அன்சார், கிண்ணியா.*

அடுத்த வருடம் மூன்றாம் மாதம் மேற்கு இந்தியத் தீவுகளில் உலகக் கோப்பைப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. ஆகவே, இந்தப் பின்னடைவுகளிலிருந்து திருந்திக் கொள்வது நல்லது. ஆசிய அணிகளிடம் அவசரம் இருக்கும் அளவுக்கு அவதானம் இல்லை.... என்பதைத்தான் இது காட்டுகிறது.

### சிந்தியா பதில்கள்

மட்டக்களப்பில் 'வீரகேசரி' விற்




பனைக்குத் தடை சரியா?

*எம்.சிவபாலன், மட்டக்களப்பு.*


'பிழை' ஏன் என்றால், இதே மாதிரியாக வடக்கு - கிழக்கு பூராகவும் இன்று முரசு விற்பனை முகவர்கள் மிரட்டப்படுவதும், தடுக்கப்படுவதும் நடக்கிறது. அதை யாரும் கண்டு கொள்ளவில்லை என்ற கவலையும் உண்டு. எப்படி இருப்பினும், ஊடகத்தைச் சுதந்திரமாக இயங்கவிடாமலும், அது தாங்கிய கருத்துக்களைக் கருவி கொண்டு தடுப்பதுமானது ஏற்கக்கூடியதல்ல என்பது என் கருத்து. இதில் சரியா, பிழையா என்ற இரு கருத்துக்கு இடமில்லை.

ஜெனீவாப் பேச்சு ஏமாற்றத்தைத்தான் தருமென்று முன்னரே எப்படி உம்மால் ஆரூடம் கூற முடிந்தது?

*கு.பன்னீர்ச்செல்வம், ஹெறந்தளை.*

கடந்த காலப் பேச்சுக்களையும், அதன் முடிவுகளையும், நிகழ்கால நடப்புகளையும், அதன் விளைவுகளையும் உங்களுடன் இருந்து பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றேன். பங்கருக்குள்ளோ, லண்டனிலோ, குளிரூட்டப்பட்ட பூட்டிய அறைக்குள்ளோ பதுங்கி இருந்து விட்டுக் கருத்துச் சொல்லவில்லையே.

நடிகை ஸ்ரீவித்தியாவின் இழப்பு எவ்வளவு துயரமானது! கமல்ஹாசன் அவரை திருமணம் செய்திருந்தால்




சிலகாலமாவது அவர் சந்தோஷமாக வாழ்ந்திருப்பாரில்லையா?

*எஸ்.சசிகலா, நுவரெலியா.*

கமல்ஹாசன் - ஸ்ரீவித்தியா ஆகிய இருவரையும் பற்றி கிசுகிசுக்கள் வந்த காலம் ஒன்று இருந்தது தான். ஸ்ரீவித்தியா விரும்பியபோதும், கமல் ஏன் ஒதுங்கினார் என்று தெரியவில்லை. என்றாலும் இறப்புக்கு முன்னர் எவரையும் சந்திக்க விரும்பவில்லை என்று இருந்த ஸ்ரீவித்தியா, கமல்ஹாசனை மட்டும் சந்தித்தார் என்பதை நினைக்கும் போது அவர் கொண்டிருந்த விருப்பம் எவ்வளவு ஆழமானதாக இருக்கும். அவரைப்பார்த்து விட்டு அழுதுகொண்டே வந்த கமல்ஹாசன், அவரை யாரும் தொந்தரவு செய்யாதீர்கள் என்று மட்டும் சொல்லிவிட்டுப் போனார். சிலவிடயங்கள் அஸ்தமனத்தில் அல்லது முடிவில் தானே தெளிவு தருகிறது. காலத்தின் தண்டனை நமக்கும் கவலைதான்.

வடக்கு- கிழக்கு பிரிப்பு! சிந்தியாவின் கருத்து?


*ப.தவநேசன், மட்டக்களப்பு.*

எதிர்காலத்திலாவது சரியாகவும், சட்டரீதியாகவும் இணையுங்கள் என்பதைத்தான் பிரிப்புக் காட்டுகிறது.

எரிபொருள் விலைகள் குறைந்து கொண்டு வருகின்றபோதும், ஏனைய பொருட்களின் விலைகளில் குறைப்புச் செய்யப்படுவதாக இல்லையே?

*த.கோமதி, தெஹிவளை.*

எதிர்க்கட்சிகளுக்கு அடுத்த இலக்கு இதுதான். விரைவில் எதிர்ப்புப் போராட்டங்களை எதிர்பார்க்கலாம். எரிபொருளைப் பற்றிக் கேட்கும் போது ஞாபகம் வருகிறது, இனிமேல் வாகனத்தில் உள்ள ஆசனங்களுக்கு அளவாக மட்டுமே பயணிகளை ஏற்ற வேண்டும், பெண்களுக்குத் தனியான பஸ் சேவை, மாணவ மாணவிகளுக்கு இலவசம், எரிபொருள் விலை குறைப்பு என்று நமது போக்குவரத்துத் துறை மாற்றம்


தமிழின் முதல் புத்தகத்தின் ஒரு பக்கம்...

muniosf. Remissionem peccatorum. Carnis resurrectionem. Vitam eternam. Amen.

ஒன்றை நோக்கிப் போகிறதே கவனித்தீர்களா?

'சந்திரமுகி', 'வின்னர்', 'பாரதி கண்ணம்மா' இதில் வடிவேலுவின் அசத்தல் எது?

*சி.வாகிசன், இறம்பைக்குளம்.*

வின்னரில் கலக்கல் தூக்கலாக இருப்பதுபோல் இருக்கிறதே....

இலத்திரனியல் ஊடகங்கள் தாம்தான் முதல்வன் என்று கூறுகின்றனவே? அச்சு ஊடகங்களில் யார் முதல்வன்?

*ப.தயாபரன், மட்டக்குளி.*

1578 ஆம் ஆண்டு கேரளா, கொல்லத்தில் தமிழ் எழுத்துக்கள் உருவாக்கப்பட்டு வெளியான 'தம்பிரான் வணக்கம்' எனும் நூலே தமிழ் அச்சு எழுத்துக்களுடன் உருவான முதல் நூலாகக் கருதப்படுகிறது. ஆனால், 1554 ஆம் ஆண்டு லிஸ்பன் நகரில் 'கார்டிலா' என்ற ஒரு தமிழ்ப் புத்தகம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது என்ற செய்தி ஆச்சரியப்படுத்துகிறது. தமிழ் எழுத்துக்கள் உருவாக்கப்படாத அந்தக் காலத்திலேயே, 'கார்டிலா' புத்தகம் தமிழ் ஒலியுடன் வாசிப்பதற்கேற்ப ரோமன் எழுத்து வரி வடிவில் வெளியாகியுள்ளது.

'கார்டிலா' என்கிற 'லூசோ சமய வினாவிடை' என்ற நூல் அது 38 பக்கங்களைக்கொண்டது. தமிழ் எழுதப் படிக்கத் தெரியாத ஆனால், போர்த்துக்கீசிய மொழி தெரிந்த கிறிஸ்தவப் பாதிரியார்களுக்கு உதவும் வகையில், தமிழ் உச்சரிப்பில் வேத வசனங்களைக் கூறுவதற்காக உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. 450 வருடப்பழைமை கொண்ட 'கார்டிலா' என்ற அந்த நூலின் ஒரே ஒரு மூலப்பிரதி லிஸ்பனை அடுத்துள்ள பெலெம் நகரில் உள்ள மானுடவியல் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறதாம்.

'இதோ.... ஆகாசமும், பூமியும் படச்சவன் சர்வமும் ஆனவனே, பிதாவே தம்பிரானே விசுவாசம். அவ்வண்ணம் என்னடே கர்த்தாவே யேசு கிறிஸ்து அவ்வனடே புத்ரனே ஒருவனே. சுத்தமான சித்தத்தனொடெயே கருணே கொண்டு கெற்பம் ஆயி: கன்னியாஸ்திரி மரியத்தில் பெறந்தவர். போஞ்சியும் பிலாத்து விதித்த விதி கொண்டு வெசனப்பட்டு: குருசினில் தூக்கிச் செத்தான்: குழில் வைத்து.....'

இந்த வரிகளை வாசித்தவர்கள் முதல் தமிழ்ப் புத்தகத்தின் சில வரிகளை வாசித்தவர்கள் ஆகிறீர்கள். இப்போது சொல்லுங்கள் அச்சு ஊடகத்தில் எது முதலிடம்?

எல்லாம் அரசியல் என்றாகி விட்ட நமது வாழ்வில், அரசியல் கலப்பில்லாதது எது என்று நினைக்கிறீர்கள்?

*சி.கண்ணன், வவுனியா.*

எல்லாம் அரசியல் என்பது சரியானதுதான். ஆனால், எப்போதும், கலப்பில்லாதது மழலையின் சிரிப்புத்தான்.

## யாழ்ப்பாணம்...
*05 ஆம் பக்கத் தொடர்ச்சி....*

இதே போல் மூதூர் தாக்குதல்களைத் தொடர்ந்தும், சம்பூர் தாக்குதல்களைத் தொடர்ந்தும் இடம் பெயர்ந்த சுமார் 42,000 தமிழ் மக்கள் கதிரவெளி, வாகரை போன்ற புலிகளின் பிடிக்குள் உள்ள பகுதிகளில் வாழ்து வருகின்றனர்.

பாடசாலைக் கட்டிடங்கள், பாலங்களுக்கடியில், மரங்களுக்கடியில் இந்த மக்கள் கடந்த மூன்று மாதமாகப் பெரும் அவல வாழ்வை வாழ்ந்து வருகின்றனர். தற்சமயம் மழைக் காலம் என்பதால் மர நிழல்கள், பாலங்களுக்கடியில் வாழும் மக்கள் செல்ல இடமில்லாமல் தவிக்கின்றனர். பெண்கள், குழந்தைகளின் நிலைமை மிக மோசமாக உள்ளது. இம்மக்களில் சொற்பமானவர்கள் தங்கி இருக்கும் ஓரிரு பாடசாலைகளும், வெள்ள நீராலும், சுகாதாரக் கேட்டாலும் நோய் தொற்றும் அபாயத்துக்குள்ளாகியுள்ளன. இப்படி இருப்பிடத்துக்கே பெரும் பாடாக வாழும் இந்த மக்களுக்கு உணவுப் பிரச்சினையும் பிரதான பிரச்சினையாகவுள்ளது. அரிசி, மா, சீனி, பருப்பு என்பன போன்ற பொருட்கள் ஓரளவு கிடைத்தாலும், குழந்தைகளுக்கான பால் மா, சமையலுக்கான அத்தியாவசியப் பொருட்கள், மண்ணெண்ணெய் என்பன பெரும் தட்டுப்பாடாகவே உள்ளன. இந்தப் பகுதி மக்கள் தற்போதிருக்கும் இடங்களிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வருவதற்கு முயற்சித்த போதும், புலிகள் அனுமதிக்கவில்லை. அரச சார்பற்ற தொண்டு அமைப்புக்கள் பொருட்களைக் கொண்டு சென்றால், புலிகள் பறிமுதல் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை அரசாங்கம் தொடர்ச்சியாகச் சொல்லி வருகிறது.

அந்தப் பகுதி மக்களுக்கு அரசாங்கம் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்தபோதும், அங்கு புலிகளின் தலையீடு காரணமாக முழுப்பொருட்களும் மக்களைச் சென்றடைவதில் பிரச்சினைகள் இருப்பதாக அந்தப் பகுதிகளிலிருந்து வருபவர்கள் கூறுகின்றனர். அரச படைகளின் பாதுகாப்பு இல்லாத அப்பகுதிகளில், அரச அதிகாரிகள் புலிகளை எதிர்த்துக் கட்டுப்படுத்துவதும், அவர்களை மீறிச் செயற்படுவதும் சாத்தியமானதில்லை என்ற குற்றச்சாட்டுக்களும் ஒரு பக்கமிருக்கின்றன. இதே நிலைக்குப் பழக்கப்பட்டுப்போன முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் நல்ல உதாரணங்களாக இருக்கின்றன என்றும் அரச அதிகாரிகள் சிலர் அங்கலாய்க்கின்றனர்.

அரச செயற்பாடுகளை முடக்கி வைத்துக் கொண்டு, மக்களையும் தடுத்து வைத்துக் கொண்டு, மனிதாபிமானப் பிரச்சினை பற்றிப் பேசுவதில் என்ன நியாயம் இருக்க முடியும் என்பதுதான் தெரியவில்லை. ஏ-9 பாதை பூட்டிய பிறகும் வன்னிக்கு உணவு போகிறது. வாகரைக்கும் உணவு போகிறது என்பதோடு மட்டும் திருப்தி காண முடியாது. வன்னி, யாழ்ப்பாணத்திலாவது இருக்க இடம் இருக்கிறது. உணவுக்கு மட்டும் பிரச்சினை. வாகரை, கதிரவெளியில் இருக்கவும் இடமில்லை. உணவுப் பிரச்சினையும் இருக்கிறது. இதையெல்லாம் பிரதான மனிதாபிமானப் பிரச்சினையாக எடுக்காமல் ஏ-9 பாதையை மட்டும் திறக்கக் கோருவது, வருமானத்துக்காகவும், தமக்குப் பொருட்கள் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் மட்டும்தான் என்று அரசாங்கத் தரப்பின் உயர்மட்டத்தினர் சந்தேகப்படுகின்றனர். மக்களின் மனிதாபிமானப் பிரச்சினை என்றால் வரி விடயத்தை புலிகள் கைவிட்டு மனிதாபிமானப் பிரச்சினைக்கு இருக்கும் தடையை ஏன் தளர்த்தக் கூடாது? என்ற கேள்விக்குப் புலிகள் தான் பதிலளிக்க வேண்டும்.

ஆகவே, புலிகளை அரசாங்கமும் அரசாங்கத்தைப் புலிகளும் குற்றம் சாட்டிக்கொண்டு மக்களுக்கான வாய்ப்புகளைத் தடுப்பது அல்லது நிறுத்துவது என்பது நியாயப்படுத்த முடியாததாகும். மக்களை அவல வாழ்வுக்குள் தள்ளிவிட்டு, அதை தத்தமது அரசியல் சுயலாபப் பிரசாரமாகத் தயவு செய்து எத்தரப்பும் கையாள வேண்டாம். மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண எத்தகைய விட்டுக் கொடுப்பையும், இணக்கப்பாட்டையும் வெளிப்படுத்தாத எவருமே மக்களின் மனிதாபிமானம் பற்றிக் கதைக்கும் அருகதையற்றவர்களாகின்றனர். எனவே மழைக்காலம் தொடங்கியுள்ள இந்தக் காலகட்டத்தில் - கப்பலில் பொருட்களைக் கொண்டு செல்வதிலும், மர நிழல்களுக்கடியிலும், பாலங்களுக்கடியிலும் அகதி வாழ்வு வாழ்வதும் சிரமமானதும், கவலைக்குரியதுமாகவே இருக்கப் போகிறது.

இதை உணர்ந்து அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும். இந்த உரிமை மிகு வேண்டுகோளை பயங்கரவாதத்திடம் விடுக்க முடியாதென்ற மக்களின் நியாயமான நிலைப்பாட்டை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

நான் பிறந்தது உங்களுக்கு சேவை செய்ய மட்டுமே...

பண்டாரவளை மலையாள மகா வசிய மாந்திரீகம்..

ஸ்ரீ மகா பத்திரகாளித் தாயின் அருளைப் பெற்றுள்ள



இன்றே தொடர்பு கொள்ளவும் 057-2224591-92

ஷர்மா சுவாமிகள்

உள்நாட்டு, வெளி நாட்டு அன்பர்களுக்கு சேவை செய்து அருள் அளிப்பார்.

நாம் வாழும் வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். அறிவிலிருந்து விடுபடுவதே எங்களின் நோக்கம். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலிருந்து விடுபட இருதடவை. யோசிக்காமல் என்னை சந்தித்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்பதை உறுதி செய்கிறேன்.

பார்த்துப் பார்த்துக் கொண்டிராதீர்கள் மன நம்பிக்கையோடு செய்து கொள்ளுங்கள்.

இன்றே சுவாமியவர்களைச் சந்தியுங்கள்

தொலைபேசி மூலம் பேசுங்கள். அல்லது முத்திரையுடன் கடித உறையொன்றை அனுப்புங்கள்.

சந்திப்பு

பண்டாரவளையில்
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 8.00 மாலை 6.00
நெடுஞ்சாலை காரியாலயத்திற்கருகில்
IDL நேர்சிங் ஹோம் மேல் பாதை

வெளிநாட்டவருக்கு விசேட ஏற்பாடுகள்!
தொ. பே. +94-572232441
+94-773227005

சகலவிதமான வசிய மாந்திரீகம்

- வீடு, வியாபார விருத்தி
- விவசாய விருத்தி
- நோய் நொடி சுகப்படுத்தல்
- விட்டுபிரிந்த கணவன் மனைவியர் மீண்டும் ஒன்று சேர.
- தாமதிக்கும் திருமணம் விரைவில் நிறைவேற
- குழந்தைப் பாக்கியம் கிட்ட
- விலைபோகாத காணிகள் விற்பனையாக
- எல்லா பரீட்சைகளிலும் சித்திபெற
- ஜாதகம் பார்ப்பது முதல் சகல ஜோதிட விடயங்கள்
- மண் பரீட்சை செய்தல்
- பிராணிகளை அகற்றுதல்

ஷர்மா சாமி அவர்கள்

P.O. Box 2, BANDARAWELA / பண்டாரவளை Regd. No. U/B 99/83
Tel. 077-3227005 057-2224591-92 078-5224681 Fax: 057-2232441
Website : sharmasami.com sribathrakaliamman_temple@yahoo.com

வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

## இலங்கை...
*04 ஆம் பக்கத் தொடர்ச்சி....*

இதில் புலிகள் இயக்கமும், புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்றவர்களும், அரச படையினரும் ஈடுபட்டனரென்று அந்த மனித உரிமைகள் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் அதிகமானோர் தம்மால் கொல்லப்படவில்லையென்று நெஞ்சில் கை வைத்துத் தமிழ்ச்செல்வனால் கூறமுடியுமா? அரச படையினர் அத்துமீறல்களில் ஈடுபடவில்லையென்று சொல்வதற்கு நாம் தயாரில்லை. அல்லது யுத்தமென்று வந்தால், அத்துமீறல் நடக்குமென்று கதையளக்கவும் முடியாது. இந்த மனிதாபிமான அவலங்களை வடக்கிலும் கிழக்கிலும் ஏற்படுத்திய புலிகள், மனிதாபிமானம் பற்றிப் பேசுவது கேலிக்குரியது. ஏ-9 பாதையைத் திறந்து விடுமாறு புலிகள் மனிதாபிமானப் போர்வையில் கூக்குரலிடுவது ஏன்? வரி அறவீடுகளால் மட்டும், ஏ-9 பாதை மூடப்பட்ட கடந்த இரண்டு மாத காலத்தில் மூண்று கோடி ரூபாவை புலிகள் இழந்திருக்கிறார்கள். கப்பம், மிரட்டிப் பணம் பறித்தல் மற்றும் பொருட்களுக்குத் தீர்வை விதித்தல் போன்றவற்றுக்குப் புறம்பாக இரண்டரைக் கோடி ரூபாவை இழந்திருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தின் அவலத்தை மட்டும் எடுத்துக்காட்டும் புலிகள் ஏன் கிழக்கில் துன்பப்படும் மக்களுக்காக கண்ணீர் வடிக்க மறுக்கிறார்கள்? ஏ-9 பாதை யுத்தத்திற்குக் கேந்திரமான ஒரு பகுதியும் கூட. ஏ-9 பாதை திறக்கப்பட வேண்டுமென்பது அவசியமானது, அவசரமானது. ஆனால் மக்கள் சுதந்திரமாகவும் பயமின்றியும் நடமாடக்கூடிய சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இதற்குப் பங்களிக்க புலிகள் தயாரா? 2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம்தான், அதே ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி ஏ-9 பாதை திறக்கப்பட்டது. ஆட்கடத்தல், கடத்திக் கொலை செய்தல், மிரட்டிக் கப்பம் பெறுதல் போன்ற சகல அடாவடித்தனங்களுக்கும் பிள்ளையார் சுழி போட்டவர்கள் புலிகள் தான். இன்று அவர்களிடமிருந்து பிரிந்து சென்றவர்களும் அதே பாணிச் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகத் தகவல்கள் வெளிவருகின்றன.

அரசாங்கம்) ஏ-9 பாதையைத் திறக்க வேண்டும். அதனூடாக அவலத்தில் சிக்கியிருக்கும் மக்களை விடுவிக்க வேண்டுமென்ற கோரிக்கை நியாயமானது. ஆனால் அரசாங்கம் கூறுவது போன்று அதற்கான சூழ்நிலைகளை புலிகள் ஏற்படுத்த வேண்டும்.

ஜனநாயக நீரோட்டத்திற்குத் திரும்பிய மாற்றுக் கட்சிகள் வடக்கிலும் கிழக்கிலும் செயற்பட அனுமதிக்க வேண்டும். யுத்தத் தாக்குதல்களில் ஈடுபட மாட்டோமென்று — உறுதிமொழியைப் புலிகள் வழங்குவதோடு அதனைச் செயலிலும் காட்ட வேண்டும். ஆட்கொலைகள், வன்செயல்கள் ஆகியவற்றையும் புலிகள் இயக்கம் கைவிட வேண்டும். தமிழ் பேசும் மக்களின் அவலங்களுக்கான மூல காரணங்கள் இவைகள் தான். அரசியல் தீர்வும் மனிதாபிமானப் பிரச்சினைகளும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை. எனவே நெகிழ்ச்சித் தன்மையோடு தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப் புலிகள் முன் வரவேண்டும்.

## காற்று...
*06 ஆம் பக்கத் தொடர்ச்சி....*

காற்று பற்றி எழுதிவிட்டு என்ன படம் போடுவது என்று யோசித்தபோது - சூறாவளிச் சேதம், மரங்களின் அசைவு, குடை பிடிக்கக்கஷ்டப்படும் ஒருவர், உடை பறக்கும் காட்சி, இப்படிப் பல விதமான புகைப்படங்களை எடுத்து வைத்து யோசித்ததில் - அவற்றில் எந்தப் படமுமே காற்றை பிரதிபலிப்பதாக இல்லை. இதுதான் காற்று என்று எதை காட்டுவது. காற்றுக்கு உருவம் இல்லை, நிறமும் இல்லை என்பதாலும் வெறுமையாகத்தான் காட்ட முடியும் என்பதாலும் இந்தப் புகைப்படம் எதையும் காட்டாமல் வெறுமையாக இருக்கிறது. எதுவுமே இல்லாமல் எல்லாமுமாக இருக்கும் காற்று. எல்லாமே நினைக்கும் மனிதன் எதுவுமே இல்லாதவன் என்ற உண்மையை உணருதல் அவசியமாகிறது. காற்றிடம் இருந்தும் கற்றுக் கொள்வோம்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| *எழுத்துக்கள்* | *எண்கள்* | *கிரகம்* |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 7, கூட்டெண் - 6

7,16,25 போன்ற திகதியில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 6 வருமேயானால், இவர்கள் கேது, சுக்கிரன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

மற்ற 7 எண்ணிக்கைக்காரர்களில் இவர்கள் சுகபோகமான வாழ்க்கையை விரும்புவர். இவர்கள் பார்ப்பதற்குச் சுமாரான உயரமுடையவர்களாகவும், கவர்ச்சியாகவும் காட்சியளிப்பர். நல்ல பேச்சுத் திறமை கொண்ட இவர்கள் வாதம் செய்கின்ற போது காரசாரமாகப் பேசுவர். சில நேரங்களில் தனிமையில் இருந்து கொண்டு தனது எதிர்காலத்தைப் பற்றியும் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சியைப் பற்றியும் சிந்திப்பர்.

ஒவ்வொரு செயலையும் முன்பின் ஆராய்ந்து செயல்படுவர். தன்னால் இயலாத காரியத்தை முடியும் என்று கூறமாட்டார்கள். சில நேரங்களில் ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் அமைதியாக இருக்க ஆசைப்படுவர். சங்கீதம், நாட்டியம், மருத்துவம், தத்துவம், சோதிடம் இவர்கள் மனதைக் கவரும். மலைப் பிரதேசங்களையும், நீர்த்தேக்கங்களையும், நீர்வீழ்ச்சிகளையும் கண்டுகளிக்க ஆசைப்படுவர்.

அமைதியாக இருக்கும் இவர்களுக்குத் திடீரென்று முன்கோபமும் வருவதுண்டு. இவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமையுமேயானால், நல்ல வாழ்க்கைத் துணைவர், நிறைந்த செல்வம், நல்ல ஆரோக்கியம், நல்ல குழந்தைகள் ஆகியவற்றைப் பெற்று வீடு, வாகனம், தொழில், உத்தியோகம் இவற்றோடு வாழ்வர். ஆனால் பெயர் பொருத்தமின்றி இருந்தால், பல்வேறு நல்ல வாய்ப்புகள் வந்தும் முன்னேற முடியாமல் தவிப்பர்.

இன்னும் சிலருக்குக் குடும்ப வாழ்க்கை குழப்பம் மிகுந்த வாழ்க்கையாக மாறிவிடும். ஆரோக்கியம் பாதிக்கப்படும். குழந்தைகளாலோ அல்லது குழந்தை இல்லாததாலோ பிரச்சினை ஏற்படும். இதனால் இவர்கள் பெயரைப் பொருத்தமான எண்களில் மாற்றி அமைத்துக் கொண்டு சிறப்புற்று வாழலாம். சில நேரங்களில் எதையோ இழந்தது போன்று காட்சி அளிப்பர். பின் தன்னையே தேற்றிக் கொண்டு சுறுசுறுப்பை வரவழைத்துக் கொள்வர்.

எழுதுவதாலும், பேசுவதாலும், ஆடம்பரப் பொருட்களை விற்பதாலும், முக்கியமான பதவியை வகிப்பதாலும், உயர்ந்த நிலையை அடைவர். ஆனால், பெயர் பொருத்தமில்லாது இருக்குமேயானால், தேவையில்லாத காரியங்களில் இறங்கி மாட்டிக் கொள்வர். அதோடு பெண்களாக இருந்தால் ஆண்களாலும், ஆண்களாக இருந்தால் பெண்களாலும் மனவேதனை அடைவர். இவர்கள் மனம் ஆடம்பரப் பொருள்களைச் சேர்ப்பதிலும், வீட்டை அழகாக வைத்துக் கொள்வதிலும் நாடிச் செல்லும்.

தனிமையில் இருக்கும் போது இவர்கள் மனதில் புதுப் புதுக் கருத்துக்கள் தோன்றிய வண்ணம் இருக்கும். இவர்களுக்குப் பிறந்த திகதிக்குப் பொருத்தமாகப் பெயர் அமையுமேயானால் வாழ்க்கை படிப்படியாக முன்னேறிக் கொண்டே செல்லும். ஆனால் பிறந்த திகதிக்குப் பொருத்தமற்றுப் பெயர் அமையுமேயானால், முன்னேற்றம் தடைப்பட்டு வாழ்க்கை போராட்டம் உள்ளதாக அமைந்துவிடும். சந்தோஷமான சூழ்நிலையில் சகஜமாகப் பழகும் இவர்களுக்கு சிறிது மனக்கஷ்டம் இருந்தால், அடிக்கடி கோபம் உண்டாகும். புதுமையும் பழைமையும் கலந்து வாழ்க்கை நடத்துவர்.

என்றும் ஒரு நிலையான எண்ணத்துடன் இருக்க மாட்டார்கள். ஆண்டவனை வழிபடும் இவர்கள், சமயத்திற்கும், தெய்வ வழிபாட்டுக்கும் என்ன சம்பந்தம் என்று ஆராயத் தொடங்குவர். பொதுவாக தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமான பெயர் அமைந்துவிட்டால், பல்வேறு வழிகளில் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைகின்றனர். இதனால் பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக பெயரை அமைத்துக் கொள்ளுவது அவசியம்.

***தொழில் :***

எழுதுவதாலும், பேசுவதாலும் பொருளீட்டுவர். கமிஷன், காண்ட்ராக்ட், ஏஜென்சீஸ், ஆடம்பரம் சம்பந்தமான பொருட்கள், வாகனம், பச்சைப் பொருள், ஜவுளி, மருந்து போன்றவற்றாலும் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைவர்.

***நோய் :***

இவர்களுக்கு மனக் குழப்பம் சம்பந்தமான நோய், மூட்டுவலி, கண் நோய், முதுகு வலி, வாயுக் கோளாறு முதலியன வந்து நீங்கும்.

***பெயர் அமைக்கும் முறை :***

கேது, சுக்கிரன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு சூரியன், சுக்கிரன் போன்ற ஆதிக்கமான 19, 37, 46, 64, 15, 24, 33, 42, 60, 69 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

***பின்பற்ற வேண்டியவை:***

யோகமான எண் - 2, 6, 1.
யோகமான திகதிகள்- 2, 11, 20, 29; 6, 15, 24; 1, 10, 19, 28.
யோகமான மோதிரக்கல் - வைடூரியம், மூன்ஸ்டோன், டைகர்ஸ் ஐ.
யோகமான நிறம் - பச்சை, வெளிர் நீலம், வெளிர் மஞ்சள்.
ஆகாத திகதி - 9, 18, 27, 3, 12, 21, 30.
ஆகாத நிறம் - ரோஸ், ஆரஞ்சு, சிவப்பு, கத்தரிப்பூ நிறம்.

*அடுத்த வாரம் பிறப்பெண் 7, கூட்டெண் 7 பற்றிப் பார்ப்போம்.*

# லாவோ - தசு (கி.மு.400)

**சீனாவில்** ஏற்பட்டுள்ள பல்லாயிரம் நூல்களில், அந்த நாட்டுக்கு வெளியே மிகப் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு பெருமளவுக்குப் படிக்கப்பட்டு வரும் ஒரு நூல், ஈராயிரம்ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட 'லாவோ - தசு' அல்லது 'தாவ்-தே-சிங்' என்ற ஒரு சிறிய நூலாகும். 'விழுமிய நெறியும் அதன் ஆன்மீக ஆற்றலும்' என்று பொருள்படும் வேத நூல் எனலாம். இது தாவ் நெறியின் தத்துவங்களை விளக்கிக் கூறுகிறது.

இது மறைநுட்பம் வாய்ந்த ஓர் அரிய நூல். வியக்கத்தக்கதொரு மறை புதிரான நடையில் இது எழுதப்பட்டுள்ளது. அதனால், பல்வேறு பொருள்களுக்கு இடமளிக்கிறது. இதன் மையக் கருத்து

# உலகை வியக்க வைத்தவர்கள்

'தாவ்' பற்றியதாகும். 'தாவ்' என்பதற்கு 'நெறி' அல்லது 'சாலை' என்று மொழி பெயர்த்துள்ளனர். ஆனால் அதுபற்றிய கோட்பாடு தெளிவற்றதாக இருக்கிறது. ஏனெனில், 'தாவ்-தே-சிங்' நூல் கூட இவ்வாறுதான் தொடங்குகிறது. 'தாவ்' என்பது நிலைபேறுடைய பெயர் அன்று. எனவே,தாவ் என்பதற்கு ஏறத்தாழ 'இயற்கை' அல்லது 'இயற்கை நெறி' என்று பொருள் சொல்லலாம்.

'தாவு'க்கு எதிராகத் தனிநபர்கள் போராடக் கூடாது என்றும், அதற்கு அடிபணிந்து, அதற்காகப் பணி புரிய வேண்டும் என்றும் தாவ் நெறி கூறுகிறது. அறிவிலியாகவும், அற்பமானவராகவும் இருப்பதைவிட, அதிகாரத்தைப் பெறுவதற்கு அல்லது செலுத்துவதற்குத் தீவிரமாக ஆசைப்படுவது அப்படியொன்றும் நெறி கெட்ட செயலன்று. 'தாவை'த் தோற்கடிக்க முடியாது. மாறாக 'தாவு'டன் இணங்கி வாழ்வதற்கு முயல வேண்டும். ('தண்ணீர் மிக மிக மென்மையானது. அது எவ்வித எதிர்ப்பும் காட்டாமல்,மிகத் தாழ்ந்த இடங்களிலும் போய்ப் பாய்கின்றது. மிக அற்பமான இயற்கை ஆற்றலுக்குக்கூட எதிர்ப்பின்றிப் பணிகிறது. எனவேதான், நீர் அழிக்க முடியாமல் நிலைபேறுடையதாக விளங்குகின்றது. அதே சமயம் மிகக் கடினமாக இருக்கும் பாறைகள்

நாளடைவில் நலிந்து, சிதைந்து, சிதறிப் போகின்றன' என்பது தாவ் நெறியாளர்கள் வாதம்).

ஒரு தனி மனிதனுக்கு எளிமையும், இயற் குணமும் பெரும்பாலும் ஏற்புடையவை. வன்முறையைத் தவிர்க்க வேண்டும். பணத்துக்காக அல்லது புகழுக்காகப் பாடுபடுவதை விட்டுவிட வேண்டும். உலகைச் சீர்திருத்த ஒருவர் முயலலாகாது. மாறாக, உலகை மதிக்க வேண்டும். அரசுகளைப் பொறுத்தவரையில்,ஒருவகைச் செயல் திறமற்ற கொள்கைதான் விவேகமானது. ஏற்கனவே இருக்கும் சட்டங்களே மிக அதிகம். மேன் மேலும் புதிய சட்டங்களை இயற்றுவது அல்லது பழைய சட்டங்களைக் கடுமையாகச் செயற்படுத்துவது நிலைமையை மேலும்

மோசமாக்கி விடும். அதிக வரிகள், அரசின் தீவிரத் திட்டங்கள், போரிடுதல் ஆகிய அனைத்தும் தாவ் நெறியின் தத்துவத்திற்கு முற்றிலும் முரணானவை.

சீனாவில் வழங்கும் வழிவழிச் செய்தியின்படி, தாவ்-தே-சிங் நூலை எழுதியவர் லாவோ-தசு என்பவர். இவர் பண்டைச் சீன மெய்விளக்கவியலறிஞரான கன்.'.பூசியஸ் காலத்திற்கு முன்பு வாழ்ந்தவர் என்பர். கன்.'.பூசியஸ் கி.மு.6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தார். இந்நூலின் நடையும், உள்ளடக்கமும், அத்துணை தொன்மைக் காலத்தில் இது எழுதப்பட்டது என்பதை இக்கால அறிஞர்கள் நம்பும்படியாக இல்லை. இந்நூல் எழுதப்பட்ட காலம் குறித்து இப்பொழுது வாக்குவாதங்கள் நடந்து வருகின்றன. ('தாவ்-தே-சிங்' நூலில், அதன் ஆசிரியர், அது எழுதப்பட்ட காலம், அது தோன்றியதற்கான வரலாற்று நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிடும் அகச் சான்றிதழ்கள் ஏதுமில்லை.) எனினும், அவர். கி.மு.320 இல் வாழ்ந்தார் என்பது ஓரளவுக்குச் சரியான மதிப்பீடாக இருக்கும்.

இதனால், காலங்கள் குறித்து கடும் சர்ச்சை எழுந்துள்ளது. 'லாவோ-தசு' என்று ஒருவர் இருந்தாரா என்று கூட ஐயம் எழுப்பப்படுகிறது. 'லாவோ-தசு'

கி.மு.6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்ற செவி வழிச் செய்தியைச் சில அறிஞர்கள் நம்புகின்றனர். அதனால், அவர் 'தாவ்-தே-சிஙஹ நூலை எழுதியிருக்க முடியாது என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால், மற்ற அறிஞர்கள், இவர் ஒரு புராணக் கதை மாந்தரே எனக் கருதுகின்றனர். இது குறித்து என்னுடைய கருத்து இதுதான்-

(1) லாவோ-தசு என்பவர் உண்மையில் உயிர் வாழ்ந்தவர்தான்: தாவ்-தே-சிங் நூலை அவர்தான் எழுதினார்.

(2) அவர் கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தார்.

(3) லாவோ - தசு, கன்.'.பூசியஸ் காலத்துக்கு முன்பு வாழ்ந்தவர் என்பது கற்பனை. இந்த நூலுக்கும் அதன் ஆசிரியருக்கும் பெருமையளிக்க வேண்டும்



என்பதற்காகப் பிற்கால 'தாவ்' நெறித் தத்துவவாதிகள் இக்கதையைப் புனைந்து கொண்டனர். எனது, இந்தக் கருத்தை சிறுபான்மை அறிஞர்கள் மட்டுமே ஏற்றுக் கொள்கின்றனர்.

முற்காலச் சீன எழுத்தாளர்களில், கன்.'.பூசியஸ் (கி.மு.551 - கி.மு.479), மோ-டி (கி.மு.5ஆம் நூ.), மென்சியஸ் (கி.மு.371-கி.மு.289) ஆகியோரில் ஒருவர் கூட லாவோ - தசு பற்றி அல்லது அவரது தாவ் தே சிங் நூலைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஆயினும், கி.மு. 300 வாக்கில் வாழ்ந்த கவாங்- தகு என்ற முக்கியமான தாவ் நெறி தத்துவஞானி அடிக்கடி லாவோ-தசு பற்றிக் குறிப்பிடுகிறார்.

லாவோ-தசு என்பவரே இருந்தாரா என்பதே கேள்விக்குரியதாகி விட்டதால், வாழ்க்கை வரலாறு விவரங்கள் குறித்து நாம் ஐயுறவு கொள்ள வேண்டியிருக்கிறது. எனினும், மதிப்பிற்குரிய ஆதாரங்களிலிருந்தும் பின்வரும் செய்திகள் கிடைத்துள்ளன. லாவோ-தசு வடக்குச் சீனாவில் பிறந்து வாழ்ந்தார்.

**வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



வணக்கமுங்கோ!

> நான் சொல்வ தெல்லாம் பொய்.
> பொய்யைத் தவிர
> வேறொன்றுமில்லை
> *-காதில பூ கந்தசாமி-*

பேச்சுவார்த்தைகள் உப்பிடித்தான் இருக்குமெண்டு நானும் ரெண்டு தடவை எழுதினனான். உதுதான் நடக்கும் எண்டது தெரிஞ்சது எண்டாலும் நான் பகிடிவிடுறன் எண்டதுக்காகத்தன்னும் பேச்சுவார்த்தையில ஏதாவது புதுமை பண்ணுவினம் எண்டு பார்த்தால், அதுக்கு வாய்ப்பே இல்லையுங்கோ. பழைய பல்லவி, பழைய குருடி, எண்ட கனக்காக, எல்லாம் பழைய, பழைய படிதானுங்கோ நடக்குது. உதைக் கதைக்க ஏன் தான் வெளிநாட்டுக்குப் போகினமோ தெரியல்லை. சும்மா பணத்துக்கும் நேரத்துக்கும் பிடிச்ச கேடு மட்டும்தான். வேறு ஒண்டுமில்லை. சரி, எங்கட தலைவிதி உதுதான் நடக்குமெண்டால் அதை நோர்வேயாலையோ, ஜப்பானாலையோ மாற்ற முடியுமா? இல்லையே!, அது ஒரு பக்கமிருக்கட்டும்.

யாழ்ப்பாணத்தில சனம் சாப்பாட்டுக்கு பெரும் பாடு படுகுதுகளுங்கோ. குழந்தைகளின்ர பால் மா, பெண்களுக்குப் பிரத்தியேகமான பொருட்கள், கோழிகளுக்குத் தீவனம் எண்டு எதுவுமே இல்லாமல் சனம் படாதபாடு படுகுதுகள். பட்டினி கிடந்து செத்திச்சினம் எண்டால் நாங்கள் இங்க வெட்கியே தலைகுனிந்து சாகவேணும். கூடவே போக்குவரத்து ஏற்பாடும் முக்கியமாகிட்டுது. இவர் சு.பா. கடலாலையும், ஆகாயத்தாலையும் பயணிக்காதிங்கோ. அப்புடிப் போனால் அவையின்ர பாதுகாப்புக்கு நாங்கள் உத்தரவாதமில்லை எண்டும் சொல்லித் திரிஞ்சவர். சனத்தைத் திரிய வேண்டாம் எண்டிட்டு, அவர் ஆமிக்காரரின்ர ஹெலிக்கொப்டரில ஜாலியாகப் பறந்து திரியிறார். கூடவே ஒரு நோர்வேக்காரரும் இருந்திருக்கார். நோர்வேக்காரர் கூடவே இருக்கிறது பாதுகாப்புக்கு உத்தரவாதமெண்டால் சனம் பயணிக்கவும், சாமான் போகவும், வாகனத்திலையும், விமானத்திலையும் ஏன் உந்த நோர்வேக்காரர் பயணிக்கக் கூடாது எண்டொரு கேள்வி சனங்களுக்கு இருக்குது. ஏ-ஒன்பது பாதையைத் திறங்கோ எண்டினம் புலிகள். அது நல்லதுதான். ஆனால், தாங்கள் வரி வேண்டமாட்டம் எண்டு ஒரு வார்த்தை சொல்லினமில்லையே. தமிழ் சனத்திற்ற புலிகள் வரி வேண்டக் கூடாது எண்டு சிங்கள அரசு கேட்க வேண்டியிருக்கெண்டால், தமிழ் சனத்துக்காக யார் குரல் குடுக்கினம் எண்டு ஒரு கேள்வியும் வராமல் இருக்குமோ?

சனத்துக்கு நல்லாத் தெரியும், உந்த ஏ-ஒன்பது பாதை திறந்து இருக்கேக்க, அந்த வழியாக யாழ்ப்பாணத்தில இருக்கிற படைத்தரப்புக்கு உணவுப் பொருளோ, ஆயுதமோ கொண்டு போகப்படல்லை. முழுக்க முழுக்க தமிழ் மக்களுக்குத்தான் பாதை பிரயோசனமாக இருந்தது. உந்த கெடுபிடி, வரி, மிரட்டல், தடுத்து வைப்பு எல்லாமே தமிழ் மக்கள் மீதுதான் பிரயோகிக்கப்பட்டிருக்கு. சனம் சிலதுகள் வாயைத் திறந்து சொல்லிச்சினம். பலதுகள் ஏண்டாப்பா வம்பு எண்டு சத்தம் போடாம இருந்திட்டினம். காசைப் பார்க்காமல் காரியம் பார்க்கிற எங்கட சனம், தலைக்கு ஆயிரம் ரூபா கொடுத்தெண்டாலும் யாழ்ப்பாணம் போனால் சரிதான் எண்டு வாழ்ந்ததுகள்.

புலிகள் உப்பிடிச் செய்யினம். அவை மக்களை உப்பிடிப் படுத்தக் கூடாது எண்டு அரசாங்கம் கேட்டால் 'ஆடு நனையுதெண்டு ஓநாய் அழுகுது' எண்டு அடைமொழி வச்சு கதை சொல்லுவினம். யார், யாருக்கு அடைமொழி வச்சால் என்ன, ஆப்பு வச்சால் என்ன, இடையில சனத்துக்கு இருக்கிற பிரச்சினை தான் குறைஞ்ச பாடில்லை.

இன்னொரு உலக மகா பகிடி தெரியுமோ? சிறுவர்கள் படிக்க வேணும், படைகளில சேர்க்கக் கூடாது எண்டெல்லாம் சிறுவர் உரிமைகள் பற்றி ஒரு சட்டத் தயாரிப்புச் செய்திருக்கினம் புலிகள். உது என்ன பகுடி எண்டால், புலிகள் சிறுவர்களைப் படையில சேர்க்கினம். ஆயுதப் பயிற்சி கொடுக்கினம், உதாலை, பிள்ளைகளின்ர படிப்பு கெடுபடுகுது. சமூக உறவுகளில பாதிப்பு ஏற்படுகுது. அவையின்ர எதிர்காலம் வீணடிக்கப்படுகுது. படுகொலையாகினம். உதுகளை நிறுத்த வேணும். மேலும் சிறுவர்களை உதுகளுக்காகப் பிடிக்கக் கூடாது. ஏற்கனவே பிடிச்சு வச்சிருக்கிற சிறுவர்களை விடுவிக்க வேணும் எண்டு சர்வதேச சிறுவர் அமைப்புகள் புலிகளுக்குப் பின்னாலையும், முன்னாலையும் திரியினம். உதுக்கிடையில அவை சிறுவர்களின் உரிமைகள் பற்றிய சட்டம் தயாரிச்சிருக்கினமாம். முரண்பாடுகளுக்கு மேலை முரண்பாடுகள். உதுகளை யோசிச்சால் மூளை ஒழுகி மூக்கால ஊத்திப்போடும் பிறகு வெறும் மண்டையோட தான் திரிய வேணும்.

உந்தப் பகிடி ஒருபக்கமெண்டால் எங்கட கூட்டமைப்புக்காரர் இன்னொரு பெரிய பகிடி விட்டிருக்கினம். மக்களின்ர பிரச்சினையை முன்னிலைப் படுத்தும்படி சு.பா.வுக்கு கடிதம் அனுப்பிச்சினமாம். ஐயோ, ஐயோ உதையெல்லாம் எங்க போய் சொல்லுறது எந்தச் சுவரில முட்டிக் கொள்ளிறது எப்புடித் தான் வெட்கப்படாம உப்பிடியெல்லாம் உவையாலை நடக்க முடியுதோ எண்டு எனக்குத் தெரியுதில்லையுங்கோ... 'கைப்புண்ணுக்குக் கண்ணாடி' கேட்ட மாதிரி சு.பா ஏதோ வேற்றுக் கிரகத்தில இருந்து வந்து இறங்கி ஜெனிவாவுக்குப் போன மாதிரியும், அவரை முன்னப்பின்ன இவைக்குத் தெரியாது அவரைச் சந்திக்கவும் முடியாது எண்ட மாதிரியும் கடிதம் குடுத்திச்சினமாம். உந்தக் கூட்டமைப்புக்காரர் கொழும்பில சந்திச்சிருக்கலாம். கூடவே ஜெனிவாவுக்குப் போயிருக்கலாம். அதையெல்லாம் விட்டுப் போட்டு கடிதம் கொடுத்திச்சினமாம். லவ்ஸ்ஸு பண்ணினமுங்கோ. தமிழ் மக்களின்ர பிரச்சினைகளைக் கதைக்க இவையெல்லாம் லாயக்கில்லாதவை எண்டுதான் புலிகளே இவையை க்கண்டு கொள்ளாமலே பேச்சுக்களுக்குப் போகினம். உது தெரிஞ்சும் உவை கடிதம் கொடுத்திருக்கினமெண்டால், உதுக்கு மேல உதைப்பத்தி நான் சொல்லக்கூடாதுங்கோ. அது சரியுமில்லை.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(02.11.2006 தொடங்கி 08.11.2006 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

துலாம் - சூரியன், புதன், செவ்வாய், வெள்ளி. விருச்சிகம் - வியாழன். கும்பம் - இராகு. சிங்கம் - சனி (வக்கரகம்) கேது சந்திரன் கும்பம், மீனம், மேடம், இடபம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் மேன்மை, காரியானுகூலம், உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு, குடும்ப நன்மை, உறவினர் உதவி, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- **வெள்ளி.**
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் உயர்ச்சி, உயர்ந்த நிலை, பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும், இனசன மகிழ்ச்சி, குடும்ப சுகம், உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் அனுகூலம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- **புதன்.**
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் மந்தம், காரிய நஷ்டம், வீண் குறை கேட்டல், பெரியோர் பகை, எதிர்பாரா செலவு, குடும்பக் கஷ்டம், சுபகாரிய நன்மை, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- **செவ்வாய்.**
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**கர்க்கடகம்** : (புனர் பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் மாற்றம், மனக்குறை நீங்கும், பெரியோர் சகாயம், தூர இடப் பயணம், தேகசுகக் கஷ்டம், செலவு மிகுதி, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- **புதன்.**
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் கலக்கம், மனக்குறையதிகம், பெரியோர் உதவி, பணக் கஷ்டம், அந்நியர் சகவாசம், குடும்பப் பொறுப்பு, உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி நன்மை, உயர் கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- **வியாழன்.**
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் அலைச்சல், செலவு மிகுதி, வீண் குறைகேட்டல், வெளியிடப் பயணம், தேகசுகக் குறைவு, குடும்ப சுகம், பிள்ளைகளால் உதவி, உத்தியோக நன்மை, மன மகிழ்ச்சி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- **புதன்.**
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி, பண வரவு, பெரியோர் சகாயம், உறவினர் உதவி, குடும்பப் பொறுப்பு, உத்தியோக நன்மை, புதிய இடமாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- **வெள்ளி.**
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் மந்தம், காரியத் தடை, பணச் செலவு, வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகவாசம், குடும்பப் பொறுப்பு, உறவினர் நன்மை, உத்தியோகக் கஷ்டம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- **திங்கள்.**
அதிர்ஷ்ட இலக்கம் :- 07.


**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் பகை, வீண் குறை கேட்டல், பெரியோர் உதவி, மனப் பயம், இனசன விரோதம், குடும்பக் கலகம், உத்தியோக மாற்றம், பதவி சிக்கல், மாணவர் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- **செவ்வாய்.**
அதிர்ஷ்ட இலக்கம் :- 04.

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் நன்மை, காரியானுகூலம், மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை, பெரியோர் உதவி, இனசன நன்மை, குடும்பப் பொறுப்பு, உத்தியோக மகிழ்ச்சி, பதவி உயர்ச்சி, மாணவர் கல்விச் சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- **திங்கள்.**
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் மாற்றம், பெரியோர் உதவி, மனக் கலக்கம், தூர இடப் பயணம், தேகசுகக் குறைவு, கடன் பயம், குடும்ப நன்மை, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- **வெள்ளி.**
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, பெரியோர் உதவி, அந்நியர் சகவாசம், பண வரவு, குடும்ப மகிழ்ச்சி, மனக்குறை நீங்கும், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- **திங்கள்.**
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)




இலக்குகளை மிகச் சரியாகக் குறிவைத்துத் தாக்கக்கூடிய பிஸ்ட்ல் மற்றும் ரைபிளைக் கொண்ட இக் கருவியை உருவாக்கியவர்கள் இஸ்ரேலிய பாதுகாப்புப் படையைச் சேர்ந்த இரு உயரதிகாரிகள். உயரமான தளத்தில் வைத்துப் பாவிக்கக் கூடிய இந்தக் கருவியை 90 பாகைக்குக் சுழற்றித்தாக்க முடியும். இதிலுள்ள 5.7 மி.மீ ரைபிளைப் பயன்படுத்தி இருநூறு மீற்றர்களுக்கு (650 அடிகள்) சரியாகக் குறிவைத்துத்தாக்க முடியும். இலக்குகளை சரிவரக் கண்டறிவதற்கு வீடியோ திரையொன்றும் இக் கருவியில் பொருத்தப்பட்டுள்ளது.

பெப்ரவரி 22ஆம் திகதி புலிகளின் தூதுக் குழுவினர் ஜெனீவா பேச்சுகளுக்கு சென்று திரும்பும் போது, இவ்வகையான நவீன துப்பாக்கிகள் தொடர்பான சஞ்சிகைகளைக் கொண்டுவந்தது கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அமெரிக்காவில் இருந்து புலிகள் நவீன ஆயுதங்களை வாங்குவதற்கு எடுத்த முயற்சி அம்பலமானதும் புலிகளின் ஆயுத வியாபாரிகள் ஆறு பேர் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



## அங்குரார்ப்பணம்

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் இரண்டாவது தடவையாக 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இருபதாம் திகதி பதவியேற்றார். இவரது பதவியேற்பு வைபவத்தையொட்டி மூன்று நாட்கள் நடைபெற்ற அங்குரார்ப்பண விழாவுக்கும் நிகழ்வுகளுக்கும் மொத்தம் நான்கு கோடி அமெரிக்க டொலர்கள் செலவழிக்கப்பட்டன. உலகிலேயே பதவியேற்பு வைபவத்துக்கு அல்லது அங்குரார்ப்பண விழாவுக்கு செலவழிக்கப்பட்ட அதிக தொகை இதுவென மதிப்பீடப்பட்டுள்ளது. ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷும் அவரது மனைவி லோரா புஷ்ஷும் படத்தில் காணப்படுகின்றனர்.



## கடன்

உலகிலேயே மிக அதிகமாகக் கடன்பட்ட நாடு எதென்று கேட்டால், இலங்கையென்று வாய் கூசாமல் சொல்பவர்களும் எமது நாட்டில் இருக்கிறார்கள். எண்ணெய் வளமிக்க கட்டார் நாடே அதிக கடன் பளுவைச் சுமந்து கொண்டிருக்கும் நாடென்று கின்னஸ் புத்தகம் கூறுகிறது. எண்ணெய்க் கையிருப்பை வைத்துக் கொண்டே எக்கச்சக்கமாகக் கடன்பட்டிருக்கிறது. 1999ஆம் ஆண்டு 12 பில்லியன் டொலர்களை இந்த நாடு கடன்பட்டிருந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது, இதன் சனத்தொகையை வைத்துப் பார்த்தால் ஒருவர் அன்னளவாக 15 ஆயிரம் டொலர்கள் கடனாளியாக இருக்கிறார்.





## புதுசு! சிறுசு!!

தலைநகர் கொழும்பில் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காக இரட்டை வழிப்போக்குகளை ஒரு வழிப்போக்காக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. ஆசியாவில் 29 பேருக்கு ஒரு வாகனம் என்றளவில் இலங்கையில் வாகனப் பாவனை இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். படத்தில் காணப்படுவது போல் அளவில் சின்ன வாகனங்களாக இருந்தால் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கமுடியும். படத்தில் இருப்பதோ சண்டியாகோ நகரில் நடைபெற்ற 'ஆட்டோ ஷோ' கார் கண்காட்சியில் பலரின் கவனத்தை ஈர்த்த புதிய வகைக் கார். உங்களுக்கு வசதி எப்படி?

